Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

முரசு – 01 திருவள்ளுவர் ஆண்டு 2042 ஆடி 24 செவ்வாய்க்கிழமை (09.08.2011) பக்கங்கள் 16 ஓசை – 314

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO
RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C) ராம்கோ சீமெந்து
(C/848)


விமானங்கள் பறக்கவே இல்லை (03)



அடுத்தது மாகாண சபைத் தேர்தல் (10)



நாங்க ரொம்ப நல்லவங்க (12)



பதிவிறக்க பெட்டகம் (13)

## லண்டனில் தொடரும் வன்முறை
## புலம்பெயர்ந்த தமிழர்களும் பாதிப்பு

லண்டனில் வழமையில் மிக அமைதியாகவும் சுறுசுறுப்பாகவும் காணப்படுகின்ற பல வீதிகளில் இரண்டாவது நாளாக, நேற்று ஞாயிற்றுக்கிழமை இரவும் வன்முறைச்சம்வங்கள் அங்காங்கே இடம்பெற்றுள்ளன.

இதற்கிடையே, அவசரமாக தனது கோடை விடுமுறையை முடித்துக்கொண்டு திரும்பியுள்ள பிரிட்டனின் உட்துறை அமைச்சர் தெரஸாமே, மூத்த பொலிஸ் அதிகாரிகளைச் சந்தித்து கள நிலவரங்கள் பற்றி ஆராய்ந்துள்ளார்.

கார்கள் எரிக்கப்பட்டும், கடைகள் சூறையாடப்பட்டும் கண்ணாடிகள் நொறுக்கப்பட்டும் தெருக்களில் வன்முறையாளர்கள் அட்டகாசம் புரிந்துள்ளனர்.

இச் சம்பவங்களில் தமிழ் வர்த்தகர்களின் கடைகள் சிலவும் தீக்கிரையாக்கப்பட்டதாகவும், சூறையாடப்பட்டதாகவும் தகல்கள் தெரிவிக்கின்றன.

நேற்று முன்தினம் மாலை மட்டும் 100 இற்கும் அதிகமானோர் கைதுசெய்யப்பட்டதுடன்,

(15 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழக பேராசிரியர் நல்லூரில் சொற்பொழிவு

(நல்லூர்)

நல்லூர் உற்சவ காலத்தில் தமிழகப் பேராசிரியர் முனைவர் சா.சரவணனின் விசேட சொற்பொழிவு நிகழ்வு நாவலர் மணி மண்டபத்தில் இன்றும் நாளையும் பிற்பகல் 4 மணி முதல் 4.45 மணி வரை இடம்பெறவுள்ளது.

இன்றைய நிகழ்வில் குமர குருபரரை அடியொற்றி உள்ளம் உவக்கும் கந்தன் என்ற தலைப்பிலும் நாளை மாலை பாம்பன் சுவாமிகள் சொல்லும் சயம் தரும அரன்மகன் எனும் தலைப்பிலும் சொற்பெழிவுகள் இடம்பெறவுள்ளன.

## அகதிகள் நாடு கடத்தல் ஆஸி. உயர் நீதிமன்றம் தடை

படகுகளில் ஆஸ்திரேலியாவுக்கு வந்த அகதிகளை மலேசியாவுக்கு அனுப்பிவைக்கும் அரசாங்க நடவடிக்கைக்கு ஆஸ்திரேலிய உயர் நீதிமன்றம் தற்காலிகத்தடை விதித்துள்ளது.

அகதிகளுக்கு ஆதரவான குழுக்களின் சார்பில் இந்த அகதிகளை பரிமாற்றம் செய்வதற்கான திட்டத்தைச் சட்டவிரோதமானது என்று அறிவிக்கக்கோரி தாக்கல் செய்யப்பட்ட வழக்கை, விசாரணைக்கு ஏற்றுக்கொண்ட ஆஸ்திரேலிய உயர் நீதிமன்றம், அது குறித்த விசாரணையை இந்தமாத பிற்பகுதியில் நடத்த தீர்மானித்துள்ளது.

விசாரணைகள் முடியும் வரை அகதிகளை மலேசியாவுக்கு அனுப்புவதற்கு அது தடை விதித்துள்ளது.

அடுத்த நான்கு வருடங்களில் 800 அகதிகளை மலேசியாவுக்கு அனுப்பி வைப்பதற்கான ஆஸ்திரேலிய அரசாங்கத்தின் திட்டத்துக்கு இந்த தடை ஒரு இடையூறாக வந்திருக்கிறது.

அதேவேளை மலேசியாவில் அகதிகளின் கோரிக்கை மனுக்கள்

(15 ஆம் பக்கம் பார்க்க)

# வெளிநாட்டுக் கல்விக்கு யாழில் போலி முகவர்கள்
## எச்சரிக்கிறார் பிரித்தானியச் சட்டத்தரணி



வெளிநாட்டுப் பல்கலைக்கழக அனுமதிபெற்று அங்கு செல்வதற்கான விசாவைப் பெற்றுத்தருவதாகக் கூறும் முகவர்கள் குறித்து எச்சரிக்கையாக இருக்குமாறு பிரித்தானியக் குடியுரிமை சட்டத்தரணியான தேவராஜன் ரங்கன் தெரிவித்தார். வெளிநாட்டுக் கல்வியில் நாட்டம் கொண்டு பல்கலைக்கழக அனுமதி மற்றும் விசா பெறுவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளமுன், இவை பற்றிய போதிய அறிவைப் பெற்றுக்கொண்டு முயற்சிகளில் இறங்கவேண்டும் என்றும் அவர் ஆலோசனை கூறினார்.

குறிப்பாக பிரித்தானிய மாணவர் விசா நடைமுறைகளில் தற்போது பல புதிய கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன என்று சுட்டிக்காட்டிய அவர், புதிய நடைமுறைகளின் கீழ் முன்னர் போன்று அங்கே போய தொழில் செய்து பணம் சம்பாதிப்பது, புகலிட அந்தஸ்துப்பெற்று அங்கேயே தங்கிவிடுவது எல்லாம் இலகுவான காரியமல்ல என்று குறிப்பிட்டார்.

வெளிநாட்டுக் கல்வி, மாணவர் விசா, அதற்கான அடிப்படைத் தகைமைகள் என்பன குறித்து விளக்கமளிக்கும் வகையில் சிகரம் ஊடக இல்லத்தின் கல்வி வழிகாட்டல் பிரிவு ஒழுங்கு செய்திருந்த கருத்தரங்கில் பிரதான வளவாளராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இந்த எச்சரிக்கையை விடுத்தார்.

சிகரம் ஊடக இல்லப் பணிப்பாளர் கோ.றுஷாங்கன் தலைமையில், ஊடக இல்ல விரிவுரை மண்டபத்தில் நடைபெற்ற இந்தக் கருத்தரங்கில், அவுஸ்ரேலிய Monash பல்கலைக்கழக கலாநிதிப் பட்டதாரியும் யாழ் பல்கலைக்

(15 ஆம் பக்கம் பார்க்க)

# மாவட்டம் தோறும் அதிரடிப்படை முகாம்
## சிவில் பாதுகாப்புக்கு ஆயுதப்படை

நாட்டின் ஒவ்வொரு நிர்வாக மாவட்டங்களிலும் விசேட அதிரடிப்படை முகாம்களை அமைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. பொலிஸாரினால் கட்டுப்படுத்துவதற்கு சிரமமான சட்டவிரோத நடவடிக்கைகளை முறியடிப்பதற்காக இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சினால் இதற்கான உத்தரவும் அறிவுறுத்தலும் வழங்கப்பட்டுள்ளதாக விசேட அதிரடிப்படையின் தளபதியான பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஆர்.டபிள்யூ.எம்.சி.ரணவன தெரிவித்தார்.

அந்தந்த மாவட்டங்களின் அபிவிருத்தி நடவடிக்கைகளில் விசேட அதிரடிப் படையினர் ஈடுபடுவதற்கு முகாம்களை அமைப்பது முதற்படியாகும். மட்டக்களப்பு மாவட்டத்தில் நாம் சுமார் 5 முகாம்களை கொண்டிருக்கிறோம். சட்டவிரோதமாக மரம் தறித்தல், மணல் அகழ்வு, மாடுகளை கடத்தல் போன்ற சட்டவிரோத நடவடிக்கைகளை நாம் முறியடித்துள்ளோம் என அவர் கூறினார்.

சட்டவிரோத செயற்பாடுகள் தொடர்பான முற்றுகைகள், கைது செய்தல் ஆகியவற்றுக்காக நாம் பொலிஸாருக்கு உதவுகிறோம். மொத்தமாக 8,000 பேர் கொண்ட படைப்பலத்துடன் பாரிய புலனாய்வு வலையமைப்பும் உள்ளது என பிரதிப் பொலிஸ் மா அதிபர் ரணவன தெரிவித்தார்.

தென் மாகாணத்தில் பாதாள உலகக் குழுவின் தலைவர் நெலுவே பிரியந்தவை கைது செய்ததுடன், அண்மையில் காவத்தைக்குச் சென்று பெண்களை கொலைசெய்து, பொதுமக்களை அச்சத்தில் ஆழ்திய சந்தேக நபர்கள் அனைவரையும் கைது செய்வதற்கு பொலிஸாருக்கு உதவினோம் எனவும் அவர் தெரிவித்தார்.


# போலிச் சிகரட் விற்பனை சூத்திரதாரிக்குச் சிறை

(யாழ்ப்பாணம்)

குருநகர் பகுதியில் போலியான சிகரட்டைத் தன் உடைமையில் வைத்திருந்ததுடன் விற்பனை நடவடிக்கையிலும் ஈடுபட்ட நபருக்கு யாழ் நீதிமன்றம் 30 ஆயிரம ரூபா அபராதம் விதித்துள்ளது.

குறித்த நபரை யாழ். பொலிஸார் கைதுசெய்து நேற்று யாழ். நீதிபதி முன்னிலையில் ஆஜரப்படுத்தினர்.

வழக்கை விசாரனை மேற்கொண்ட நீதிபதி



ஏ.ஆனந்தராசா குறித்த நபர் குற்றத்தை ஒப்புக் கொண்டதை அடுத்து அவருக்கு போலியான சிகரட்டை விற்பனை செய்ததற்காக 10 ஆயிரம் ரூபாவையும் 1022 சிகரெட்டையும் தன் உடைமையில் வைத்திருந்த குற்றத்திற்காக 20 ஆயிரம் ரூபா தண்டம் விதித்ததுடன், தண்டப்பணம் கட்டத்தவறின் 2 மாத சாதாரண சிறைத்தண்டனையும் வழங்கி உத்தரவிட்டார். (எஸ்)

## அரசியலில் குதிக்கிறார் குமார் சங்ககார

இலங்கைக் கிறிக்கெற் அணியின் முன்னாள் தலைவர் குமார் சங்ககார அரசியலில் பிரவேசிக்கின்றார் என்று செய்திகள் வெளியாகியுள்ளன.

இவர் எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் யானைச் சின்னத்தில் வேட்பாளராக களம் இறங்க உள்ளார்.

# மின்சார விநியோகத்தில் கோளாறு
## உயிருக்காகப் போராடும் நோயாளர் அவதி

யாழ்.போதனா வைத்தியசாலையில் அடிக்கடி மின்தடைப் படுவதன் காரணமாக நோயாளர்கள் மற்றும் வைத்தியசாலைப் பணியாளர்கள் மிகுந்த சிரமங்களை எதிர்நோக்குவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

நேற்று முன்தினம் இவ்வாறு பல மணித்தியாலங்கள் மின் தடை ஏற்பட்டதாகவும் இதனால் கதிரியக்கப் பிரிவு, பிரசவ விடுதி, சிற்றுண்டிச்சாலைகள் போன்ற பிரிவுகளின் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டதுடன் பணியாளர்கள் மற்றும் நோயாளர்களும் மிகுந்த சிரமங்களை எதிர்நோக்கியதாகவும் தெரியவருகின்றது.

யாழ் போதனா வைத்தியசாலையின் மின்தேவையை இலங்கை மின்சார சபையின் மூலமும்,

(15 ஆம் பக்கம் பார்க்க)

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

## பொதுப் பட்டமளிப்பு - 06.10.2011

கலாநிதி, முதுமாணி, பட்டப்பின் டிப்ளோமா,. இளமாணி, டிப்ளோமா ஆகிய பட்டங்களை அளிப்பதற்காக 2011 ஒக்டோபர் 6ஆம் திகதி அன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பொதுப் பட்டமளிப்பு நடைபெறவுள்ளது. பின்வரும் தேர்வுகளில் 2010 ஒக்டோபர் 7ஆம் திகதிக்கு பின்பு சித்தியடைந்து பட்டங்கள் பெற தகுதியுடையவர்கள் 2011 செப்டெம்பர் 5 ஆம் திகதிக்கு முன்னர் தமது வேண்டுகோளை அறிவுறுத்தல்களுக்கமைய சமர்ப்பிக்குமாறு கோருகின்றேன்.

01. கலாநிதி
02. முதுதத்துவமாணி
03. பண்பாட்டியல் முதுகலைமாணி
04. பொதுநிர்வாகத்தில் முதுகலைமாணி
05. பட்டப்பின் கல்வி டிப்ளோமா (வவுனியா)
06. வைத்தியமாணி, சத்திரசிகிச்சைமாணி
07. சித்தவைத்திய சத்திரசிகிச்சைமாணி
08. தொழில் நிர்வாகமாணி
09. வணிகமாணி
10. விஞ்ஞானமாணி (பொது / சிறப்பு)
11. கலைமாணி (பொது / சிறப்பு)
12. நுண்கலைமாணி (இசை / நடனம் / சித்திரமும் வடிவமைப்பும்)
13. விஞ்ஞான மாணி (பிரயோக கணிதமும் கணித்தலும்) (பொது / சிறப்பு) வவுனியா வளாகம்.
14. விஞ்ஞான மாணி (சுற்றாடல் விஞ்ஞானம்) (பொது / சிறப்பு) வவுனியா வளாகம்.
15. வியாபார முகாமைத்துவமாணி (பொது / சிறப்பு) (முகாமை கற்கைகள்) வவுனியா வளாகம்.
16. தகவலும் தொடர்பாடல் தொழில்நுட்பமும் (பொது) வவுனியா வளாகம்
17. தகவலும் தொடர்பாடல் தொழில்நுட்பமும் விஞ்ஞானமாணி (விசேட) வவுனியா வளாகம்
18. விஞ்ஞான டிப்ளோமாதேர்வு (2வருடங்கள்)
19. உடற்கல்வி டிப்ளோமாதேர்வு (2வருடங்கள்)

**கீழ்வரும் தேர்வுகளுக்கு தோற்றியவர்கள் தேர்வு முடிவுகள் உறுதிப்படுத்தப்பட்ட பின்பு விண்ணப்பிக்கவும்**

1. விவசாய விஞ்ஞானமாணி
2. தாதியியல் விஞ்ஞானமாணி
3. மருந்தகவியல்மாணி
4. மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞானமாணி
5. பிரதேச திட்டமிடல் முதுகலைமாணி
6. குடித்தொகை அபிவிருத்தி முதுகலைமாணி
7. அபிவிருத்தியியல் முதுகலைமாணி

### அறிவுறுத்தல்கள்

**1. வேண்டுகோள் படிவங்கள் :**

விண்ணப்பதாரிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்தை A4 தாளில் தயாரித்தோ அல்லது www.jfn.ac.lk என்ற யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இணையத்தளத்தில் இருந்து பதிவிறக்கம் மூலம் பிரதி செய்தோ விண்ணப்பிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**2. கட்டணங்கள் :**

(அ) வேண்டுகோள் கட்டணம் ரூபா. 200.00
(ஆ) சான்றிதழ் கட்டணம் ரூபா. 350.00
(இ) பட்டதாரி மேலங்கிக் கட்டணம் ரூபா. 50.00

குறிப்பு : பின்வருவோர் வேண்டுகோள் கட்டணமும், பட்டதாரி மேலங்கிக் கட்டணமும் செலுத்த வேண்டியதில்லை.

அ. பட்டமளிப்பு வைபவத்திற்கு சமூகமளிக்காது பட்டச்சான்றிதழைப்பெற விரும்பும் பட்டதாரிகள்.

ஆ. ஒரு வருட அல்லது இரண்டு வருட சாதாரண டிப்ளோமா கற்கை நெறியைப் பூர்த்தி செய்தவர்கள்.

**3. கட்டணம் செலுத்தும் முறை**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளையின் கணக்கு இல.162100160000880 இற்கு சேரக்கூடியதாக ஏதாவது ஒரு மக்கள் வங்கிக்கிளையில் கட்டணத்தைச் செலுத்த வேண்டும். (வங்கிப் பற்றுச் சீட்டில் பெயரையும், மாணவர் பதிவு இலக்கத்தையும் குறிப்பிடுதல் வேண்டும்)

பணம் செலுத்திய வங்கிப் பற்றுசீட்டின் மூலப்பிரதி வேண்டுகோள் படிவத்துடன் இணைக்கப் பட்டிருந்தல் வேண்டும். மேலதிகமான ஒரு போட்டோ பிரதியை உங்கள் தேவைக்கு வைத்துக் கொள்ளவும்.

**4. பட்டதாரி மேலங்கிகளும் விருந்தினர் நுழைவுச்சீட்டும் :**

நேரடியாக சமூகமளித்து பட்டம் பெறுபவர்களுக்கு ஒரு பட்டதாரி மேலங்கியும், ஒரு விருந்தினர் நுழைவுச்சீட்டும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்விக் கிளையில் வழங்கப்படும்.

**5. பல்கலைக்கழக நிலுவைகள்**

பல்கலைக்கழகத்திற்கு ஏதாவது நிலுவைகள் அல்லது கொடுப்பனவுகள் செலுத்தப்படாதிருந்தால் அவ் விண்ணப்பதாரிக்கு பட்டமளிப்புச் சான்றிதழ் வழங்கப்படமாட்டாது.

**6. வேண்டுகோள் படிவங்களைச் சமர்ப்பித்தல்**

பூரணப்படுத்தப்பட்ட வேண்டுகோள் படிவத்துடன் பணம் செலுத்திய வங்கிப் பற்றுச்சீட்டின் மூலப் பிரதியை இணைத்து நேரிலோ அல்லது பதிவுத்தபால் மூலமோ கீழ்க்காணும் முகவரிகளுக்கு 05.09.2011 க்கு முன் சமர்ப்பித்தல் வேண்டும். (கடித உறையின் இடதுபக்க மூலையில் பட்டம் பெறும் கற்கை நெறியைக் குறிப்பிடவும்).

(1) யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்றவர்கள்

சிரேஷ்ட உதவிப் பதிவாளர்,
அனுமதிகள் கிளை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.

(2) யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வவுனியா வளாகத்தில் கல்வி பயின்றவர்கள்

சிரேஷ்ட உதவிப் பதிவாளர் / தேர்வுகள்,
வவுனியா வளாகம்,
வவுனியா.

☞ வேண்டுகோள் படிவங்கள் சமர்ப்பிக்க வேண்டிய **கடைசித் திகதி : 05.09.2011.** முடிவு திகதிக்கு முன்னர் கிடைக்கப் பெறாத வேண்டுகோள்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. மேலதிக விபரங்களுக்கு சிரேஷ்ட உதவிப் பதிவாளர், அனுமதிகள் (தொலைபேசி இல.021-222 6714) உடன் தொடர்பு கொள்ளவும்.

பதிவாளர்
08.08.2011.




**உங்களிடம் ரமழான் மாதம் வந்துவிட்டது. அது மிகப்பெரிய பறகத்துடைய மாதமாகும். அல்லாஹுதஆலா இம்மாதத்தில் உங்களின் பக்கம் கவனஞ் செலுத்தி தன்னுடைய விசேஷமான அருளை இறக்கி வைக்கின்றான். பாவங்களை மன்னிக்கின்றான். துஆக்களை ஏற்றுக்கொள்கின்றான். (105)**




### தெய்வீக இசையரங்கு

நல்லூர் முருகன் மஹோற்சவ காலத்தில் இளங்கலைஞர் மன்றத்தினால், தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் தினமும் மாலை 6.30 மணிமுதல் 8 மணிவரை நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் தெய்வீக இசையரங்கு நடைபெற்று வருகிறது.

இந்நிகழ்வில் ஆறாம் நாளான இன்று திருமதி மீனா கனகசபேச சர்மாவின் பாட்டுக்கச்சேரியில்,

வயலின் - திருமதி சைந்தவி நிஷாகரன், மிருதங்கம் - பிரம்மஸ்ரீ.கே.சுவாமிநாதசர்மா, மோர்சிங் - என்.சதீஸ்குமார் ஆகியோர் அணிசேர் கலைஞர்களாகக் கலந்துகொள்ளவுள்ளனர்.

❖ ❖ ❖ ❖

சொண்ட் நிறுவனத்தின் அனுசரணையுடன், 63 நாயன்மார் மண்டபத்தில் தினமும் மாலை 6.30 மணிக்கு நடைபெற்று வரும் ஆன்மீகச் சொற்பொழிவில் ஆறாம் நாளான இன்று "கந்தன் கருணை" என்னும் விடயம் பற்றி தா.சண்முகநாதன் சொற் பொழி வாற்றவுள்ளார்.

❖ ❖ ❖ ❖

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நல்லூர் கந்தசுவாமி கோயில் வருடாந்த மஹோற்சவ காலத்தில் நல்லூர் நாவலர் மணி மண்டபத்தில் ஆன்மீகச் சிந்தனையுடன் தினமும் மாலை 3.00 மணி முதல் 6.00 மணி வரை நடாத்தும் சமயச் சொற்பொழிவிலும், கலை நிகழ்வுகளினதும் ஆறாம் நாளான இன்று "கன்மமும் வாழ்வும்" என்னும் விடயம் பற்றி பொ.சந்திர வேலனின் சிறப்புச் சொற்பொழிவும்,

வண்ணை ஸ்ரீ விஸ்வலிங்க மகா கணபதி அறநெறிப்பாடசாலை, துணைவி அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளது.

## UNIVERSITY OF JAFFNA - SRI LANKA
### GENERAL CONVOCATION -6th October 2011
### SUPPLICATION FORM

Note : in writing your name please ensure that spelling of the name confirms what appears in the Birth Certificate. If the Birth Certificate is in Tamil or Sinhala, please give the English Spelling of your name as it appears in your Admission Form.

Regisration No:-.................................. Index No:-.........................

(1) Name in Full:-
(a) In English:
..........................................................................................
(b) In Tamil :
..........................................................................................
(c) In Sinhala :
..........................................................................................

(2) Name of the post Graduate Degree/Degree/Diploma to be conferred:
..........................................................................................

(3) Year of Passing the above examination and **the effective date of the degree:**
..........................................................................................

(4) Whether the post Graduate Degree/Degree/Diploma to be conferred **"In person"** or **"In Absentia"** (Please tick as appropriate)

| | |
|---|---|
| In Person | |
| In Absentia | |

(5) Present Address : ..........................................................................
..........................................................................................

(6) Telephone No:- ................................ E-mail:.................................

(7) Postal Address :..........................................................................
..........................................................................................

(8) **Particulars of payment made:- (payment Receipt Attached)**

| | Total Fee | Date of Payment |
|---|---|---|
| (a) Supplication Fee | (Rs.200.00) | |
| (b) Certificate Fee | (Rs.350.00) | |
| (c) Gown Fee | (Rs.50.00) | |

I hereby certify that the above information are correct and true to the best of my knowledge.

Date:....................... ..................................

Signature of Applicant

(C/854)

துன்பம் இருக்கும் இடத்திற்கு நாமாக முன்வந்து சென்று அந்தத் துயரத்தை நீக்க நம்மால் முடிந்த செயலைச் செய்ய முயல வேண்டும். இது மிகப் பெரிய தர்மமாகக் கருதப்படுகிறது.

-காஞ்சிப் பெரியார்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com

## நட்பிற்குமில்லை அடைக்கும் தாழ்!

"கேட்ட பொழுதில் பொருள் கொடுப்பான்; சொல்லுங்
கேலி பொறுத்திடுவான்; எனை
ஆட்டங்கள் காட்டியும் பாட்டுக்கள் பாடியும்
ஆறுதல் செய்திடுவான்; என்றன்
நாட்டத்திற் கொண்ட குறிப்பினை இஃதென்று
நான் சொல்லும் முன் உணர்வான்; அன்பர்
கூட்டத்திலே இந்தக் கண்ணனைப் போலன்பு
கொண்டவர் வேறுளரோ?"

நட்பின் பிணைப்புக் கயிறாக அன்பைக் காண்கிறது பாரதியின் அந்தப் பாடல். பிற உயிர்கள் மேல் அருள் பிறக்கவும் வாழ்வு இனிது நடக்கவும் காரணமாக இருப்பதால் அன்பு வேண்டற்பாலது என்கிறார் வள்ளுவர். காரணமின்றிச் சுரக்கும் அன்பிற்கு ஓர் அடையாளமாக காதல் இருப்பது போல மற்றுமொரு அடையாளம் நட்பு.

கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆகஸ்ட் 7 ஆம் திகதி உலக நட்பு தினம் ஆகும். ஒவ்வொரு வருடமும் ஆகஸ்ட் மாத முதலாம் ஞாயிற்றுக்கிழமையை உலக நண்பர்கள் தினமாக ஐ.நா. அறிவித்திருக்கிறது. ஆனாலும் பெப்ரவரி 14 ஆம் திகதியை ஞாபகம் வைத்திருப்பது போல் யாரும் இந்தத் தினத்தை ஞாபகம் வைத்திருந்து கொண்டாடுவதாகத் தெரியவில்லை. காதல்தான் எத்தனை புத்துயிர்ப்பாக எல்லாவற்றையும் வென்றுவிடுகிறது!

தனக்கு நெருங்கியவர்கள் அனைவரிடத்திலும் எல்லா மனிதருக்கும் இயல்பாக ஊறும் நேசம் அன்பு என்றால், எவர் துயர் கண்டாலும் தோன்றும் இரக்கம் அருளாகிறது. சிலர் வெளிப்படுத்தாது விடினும், எல்லா மனிதர்களுக்குள்ளும் இயல்பாக இருந்துகொண்டிருப்பதுதான் இது. வள்ளலார் சொன்னது போல் 'வாடிய பயிர்களைக் கண்ட போதெல்லாம் வாடும்' இரக்கம். அன்புக்குப் பிறந்த குழந்தையே இந்த அருள் என்கிறது குறள் – அருள் என்னும் அன்பீன் குழவி!

பக்தியோ அருளோ நட்போ காதலோ எல்லாமே அன்புதான். அன்பின்றி வாழ்தல் எளிதாவதில்லை. அன்புதான் இன்பத்தின் ஊற்றும். அன்பின் வழியது உயிர்நிலை. வன்முறையையும் பகைநெஞ்சையும் மாற்றும் சக்தி அன்பு ஒன்றுக்குத்தான் உண்டு. கேட்பதற்கு மதபோதகர்களின் தொணதொணப்புப் போல சலிப்பூட்டினாலும் இதை மறுக்க முடியாது யாராலும்.

அன்பையும் காதலையும் புதைத்துவிட்டுப் பேரழிவில் ஈடுபட்டிருக்கிறது மனிதஇனம். தன்மானத்தின் பெயரால், தனித்துவத்தின் பெயரால், பொன்னுலகக் கனவுகளின் பெயரால், தேசப்பற்றின் பெயரால், பாதுகாப்பின் பெயரால், வழிந்தோடும் கண்ணீரின் பெயரால், பணம்–பதவியால் கிடைத்த மேட்டிமையின் பெயரால், காட்டிவிட முந்தும் மனிதாபிமானத்தின் பெயரால் இன்று எங்கும் வடித்து இறக்கப்படுவது பயங்கரமே! இதை மாற்றும் சக்தி வன்முறைக்கு இல்லை என்பதையே வரலாறு சொல்கிறது.

நம்முள் தவிர்க்க முடியாமல் எழும் கோபமும் விரோதமும், நமக்குத் தீமை செய்கிறவர்களை மட்டும் அழிக்காமல் நம்மையும் அழித்து முடித்து விடுவதையே செய்கிறது. வெறுப்பு ஆவேசத்தை உருவாக்கி அழிவுகளையே கொண்டுவருகிறது. இந்த வெறுப்பு மிக எளிதாக மக்களை இணைக்கிறது. உணர்ச்சிகரமான மனநிலையை உருவாக்கி ஒன்றுபட வைக்கிறது. இவ்வாறு வெறுப்பின் மூலமே எதிரெதிர்த் தரப்புகள் தெளிவாக வரையறுக்கப்பட்டு விடுகின்றன. நாம் முழுக்க முழுக்க சரி என்றும் எதிர்த்தரப்பு முழுக்க முழுக்கப் பிழை என்றும் நம்ப ஆரம்பிக்கிறோம்.

எதிர்த்தரப்பிலுள்ள எல்லோரையும் ஒரே உறைக்குள் போட்டு, நமக்குப் பிடிக்காத தன்மைகளை மட்டுமே கொண்டவர்களாக அவர்களைக் காட்டி, எதிரி என்ற ஒரே வார்த்தையில் சுருக்கி அடையாளப்படுத்துகிறோம். அதேபோல நம்மையும் ஒரே குடுவைக்குள் அடைத்து எதிர்த்தரப்பில் ஒரேயடியாக இருத்திவிடுகிறோம். இந்த வெறுப்பு மெல்ல மெல்ல வளர்ந்து எதிர்த்தரப்பிலுள்ளோர் நாம் பேசத் தகுந்த மனிதர்கள் அல்ல என்றாகிறது. எதிர்த்தரப்புடன் உரையாடல் என்பதற்கே இடமில்லாத நிலையை ஒரு கட்டத்தில் அடைகிறோம். குற்றச்சாட்டுகளை அள்ளி வீசியபடி இருக்கும் மிகையுணர்ச்சிக் கொந்தளிப்பு மட்டுமே மிஞ்சுகிறது.

ரோசமும் விரோதமும் வன்முறையுமாக நிறைந்திருக்கும் நம் மனங்களினுள் சிறிது சிறிதாகவேனும் அன்புக்கு இடமளிப்பதன் மூலமே நாம் அழிவின் பாதையை விட்டுத் திரும்ப முடியும். அன்பைச் சுரக்க அனுமதிப்பதன் மூலம் பகையுணர்ச்சியைத் தணித்து, வாழ்வைப் பற்றிய நமது பார்வையையும் மாற்றிக் கொண்டால் யுத்தங்களைத் தவிர்ப்பது சுலபமாகிவிடும். வெறுப்பும் ஆத்திரமும் சிக்கலானவை. அன்புதான் எளிமையானது. அதுதான் நம்மையும் பிறரையும் வாழ வைக்கும்.

- ஆசிரியர் -

# அமெரிக்கப் போர் விமானங்கள் இலங்கை வானில் நுழையவில்லை

## அமெரிக்கத் தூதரகம் மறுப்பு

(கொழும்பு)

இலங்கை வான்பரப்பில் அமெரிக்கப் போர் விமானங்கள் அத்துமீறி நுழையவில்லை என்று கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக தகவல் வெளியிட்டுள்ள அமெரிக்கத் தூதரக அதிகாரி ஒருவர், இலங்கை வான்பரப்பில் அமெரிக்கப் போர் விமானங்கள் அத்துமீறி நுழையவில்லை என்று கூறியுள்ளார்.

இது தொடர்பாக மேலதிகக் கருத்து எதையும் வெளியிட அவர் மறுத்துவிட்டார்.

அமெரிக்கக் கடற்படையின் 7ஆவது படைப்பிரிவின் 10 போர் விமானங்கள் இலங்கை வான்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்ததாக இலங்கை விமானப்படைப் பேச்சாளர் கூறியிருந்தார்.

இதுபற்றி அமெரிக்காவுக்குக் கடும் கண்டனத்தை தெரிவிக்கப் போவதாகவும் இலங்கை அரசாங்கம் கூறியிருந்தது.

இந்தநிலையிலேயே இலங்கையின் இந்தக் குற்றச்சாட்டை அமெரிக்கா நிராகரித்துள்ளது.

## சாதனையாளர் விருது விழா

(அம்பலப்பெருமாள்)

கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனையின் ஏற்பாட்டில் சாதனையாளர்களுக்கான விருது வழங்கும் விழா கடந்த 3ஆம் திகதி கிளிநொச்சி மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

கிளிநொச்சி வலய முன்னாள் கல்விப்பணிப்பாளர் த.குருகுலராஜா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபாவதி கேதீஸ்வரன் கலந்துகொண்டு மாணவர்களுக்கான விருதுகளையும், சான்றிதழ்களையும் வழங்கிக் கௌரவித்தார். (121)

# தவறவிடப்பட்டுள்ள படகுகளை உரியவர்களிடம் வழங்க ஏற்பாடு

(வடமராட்சி கிழக்கு)

கிளிநொச்சி மாவட்டத்தில் இடம்பெற்ற யுத்த அனர்த்தத்தின் இறுதிக்கட்டத்தில் கைவிடப்பட்ட படகுகளை கைவிடப்பட்ட படகு உரிமையாளர்களிடம் வழங்குவதற்கான நடவடிக்கையை கட்டக்காடு இராணுவத்தினர் மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 2009ஆம் ஆண்டு இடம்பெற்ற யுத்தத்தின்போது கட்டைக்காடு, கேவில், பூனைத்தொடுவான், சுண்டிக்குளம் ஆகிய பகுதிகளில் மக்களால் கைவிடப்பட்ட படகுகள் மற்றும் புதுமாத்தளன், பொக்கணை போன்ற இடங்களிலிருந்து இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு மக்கள் வந்த படகுகள் என்பனவே மக்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அனைத்துப் படகுகளையும் இராணுவத்தினர் எடுத்து வந்து ஆழியவளைப் பகுதியில் ஒன்று சேர்த்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சேகரிக்கும் படகுகளைத் தமக்குத் தருமாறு கைவிடப்பட்ட படகு உரிமையாளர்கள் தமது கடற்றொழில் சங்கம் மற்றும் கடற்றொழில் சமாசம் ஆகியவற்றின் உறுதிப்படுத்தலுடன் தத்தமது கிராம சேவையாளர் ஊடாக கட்டக்காடு இராணுவ அதிகாரியிடம் மகஜர் ஒன்றைக் கையளித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதனையடுத்து இம்மக்களுக்கான படகுகளை வழங்குவதற்குரிய ஏற்பாடுகளை கட்டக்காடு இராணுவ அதிகாரிகள் மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (38)

## முன்னாள் வலயக் கல்விப்பணிப்பாளர் குருகுலராஜாவுக்குப் பாராட்டு விழா

(அம்பலப்பெருமாள்)

கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனையின் ஏற்பாட்டில் கிளிநொச்சி வலய முன்னாள் வலயக் கல்விப் பணிப்பாளர் த.குருகுலராஜாவுக்கான சேவைநலன் பாராட்டு விழா கடந்த 5ஆம் திகதி சிறப்பாக நடைபெற்றது.

கிளிநொச்சி ஊழியர் நலன்புரிச் சங்கத் தலைவர் க.இரட்ணகுமார் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் சேவை நலனுக்கான பாராட்டுரைகளை வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், கிளிநொச்சி முன்னாள் வலயக் கல்விப் பணிப்பாளரும், மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளருமான ப.அரியரட்ணம், கிளிநொச்சிப் பிராந்திய முன்னாள் சுகாதாரப் பணிப்பாளர் டாக்டர்.த.சத்தியமூர்த்தி உட்படப் பல வழங்கினார்கள். (121)

## சிறைக் கைதிகள் நலன்புரிச் சங்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.சிறைச்சாலையின் சிறைகைதிகள் நலன்புரிச் சங்கம் இன்று பிற்பகல் 4 மணிக்குப் புதிதாக ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

சிறைச்சாலை அத்தியட்சகர் சந்தன ஏக்கநாயக்க தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் சிறைச்சாலை நலன்புரிச் சங்க ஆணையாளர் மற்றும் உயர் அதிகாரிகளும் கலந்துகொள்ளவுள்ளனர். (எஸ்)

# யாத்திரிகர்களின் அனுமதி குறித்து வெளிவரும் மாறுபட்ட தகவல்கள்

(கொழும்பு)

இலங்கை யாத்திரிகர்களைத் தங்கவைக்க வேண்டாம் என தமிழகப் பொலிஸார், சென்னை விடுதிகளுக்கு உத்தரவு பிறப்பித்துள்ளனர்.

இலங்கை யாத்திரிகர்கள் மீது அண்மையில் சென்னையில் வைத்து இரண்டு தாக்குதல் நடத்தப்பட்டதனைத் தொடர்ந்து இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்த உத்தரவினால் சென்னையில் உள்ள மஹாபோதி நிலையத்திற்கு யாத்திரிகர்களினால் செல்ல முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும், இலங்கை யாத்திரிகர்கள் நாடு திரும்புவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. சென்னையின் வடபகுதியில் அமைந்துள்ள விடுதிகளில் இலங்கை யாத்திரிகர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. பொலிஸாரின் விடுதி நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். தமிழகப் பொலிஸாரின் இந்த நடவடிக்கை தம்மை அவதூறு செய்யும் வகையில் அமைந்துள்ளது என இலங்கை யாத்திரிகர்கள் தெரிவித்துள்ளனர். இதேவேளை, இலங்கை யாத்திரிகர்களுக்குத் தங்குமிட வசதிகளை வழங்கக் கூடாது என உத்தரவிடவில்லை எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## தபால் மூல வாக்கு விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் பணிகள் ஆரம்பம்

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தபால் மூலம் வாக்களிப்பதற்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் பணிகள் நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தேர்தல்கள் செயலகம் அறிவித்துள்ளது. இதனடிப்படையில் எதிர்வரும் 25ஆம் திகதி வரை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தேர்தல் நடைபெறவுள்ள பகுதிகளில் 2010 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பதிவேட்டை காட்சிப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார். 25 உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் 23 உள்ளூராட்சி மன்றங்களுக்கான வேட்பு மனுக்கள் 18ஆம் திகதி முதல் 25ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும் என மஹிந்த தேசப்பிரிய மேலும் குறிப்பிட்டுள்ளார். முல்லைத்தீவு மாவட்டத்தில் வேட்பு மனுக்கள் கோரப்பட்டு பிற்போடப்பட்டிருந்த இரண்டு உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலும் நடைபெறவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## தேசிய மரபுரிமை பிரதேசங்களில் வீதிகளை நிர்மாணிக்க முடியாது

(கொழும்பு)

தேசிய மரபுரிமையாக பிரகடனம் செய்யப்பட்டுள்ள பிரதேசங்களில் எந்தவொரு தரப்பினராலும் வீதிகளை நிர்மாணிப்பதற்கான சட்டப்பூர்வமான அனுமதி கிடையாது எனவும், எவரேனும் அவ்வாறான நடவடிக்கையில் ஈடுபட்டால் அது தண்டனைக்குரிய குற்றமெனவும் சட்டத்தரணி ஜகத் குணவர்தன தெரிவித்துள்ளார்.

சிங்கராஜ வனாந்தரம் தேசிய மரபுரிமைகள் சட்டத்தின் கீழ் தேசிய மரபுரிமை வனமாகப் பிரகடனம் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிடுகிறார். எவ்வாறெனினும் அந்த வனாந்தரத்தின் ஊடாக வீதியொன்றினை நிர்மாணிப்பதற்கான பணிகள் முன்னெடுக்கப்படுவதாக சூழலியலாளர் ரவீந்திர காரியவசம் குறிப்பிடுகிறார். இந்த விடயம் தொடர்பில் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் தலைவர் சரித்த ஹேரத் தகவல் தெரிவிக்கையில், சிங்கராஜ வனத்தில் வீதியொன்றினை நிர்மாணிப்பதற்கான பணிகள் முன்னெடுக்கப்படவில்லை. ஏற்கனவே இருந்த வீதியின் புனரமைப்பு பணிகளே தற்போது இடம் பெற்று வருகின்றது என்றார்.

# 806 இலக்க பேருந்து சேவையை மீண்டும் ஆரம்பிக்கக் கோரிக்கை

(வடமராட்சி கிழக்கு)

ஆழியவளை கிளிநொச்சிக்கு இடையிலான இ.போ.ச. 806 இலக்க பேருந்துச் சேவையை மீண்டும் ஆரம்பிக்குமாறு வடமராட்சி கிழக்குப் பிரதேச மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.


இச்சேவை முன்னர் நடைபெற்று வந்த நிலையில் கடந்த நான்கு மாதங்களுக்கு முன்னர் இச் சேவை இடைநிறுத்தப்பட்டது.

எனினும், இது தொடர்பாக சம்பந்தப்பட்ட சாலை அதிகாரிகளிடம் கேட்டதற்கு, இப்பாதையூடான சேவையினால் தமக்கு நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகவும், வடமராட்சி கிழக்கில் மக்கள் முழுமையாக மீள்குடியேற்றம் செய்யப்பட்ட பின்னர் குறிப்பாக வெற்றிலைக்கேணி, போக்கறுப்பு, முள்ளியான் ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளில் மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட பின்னரே சேவை நடைபெறும் எனத் தெரிவித்தனர்.

எனினும், இப்பிரதேசங்களில் மக்கள் மீளக் குடியமர்ந்து பல நாட்கள் கடந்துள்ள நிலையில் இன்னமும் குறித்த சேவை இடம்பெறவில்லை எனக் கவலை தெரிவிக்கப்படுகிறது.

இச்சேவை மீண்டும் மேற்கொள்ளப்பட்டால் மாமுனையிலிருந்து கட்டைக்காடு புல்லாவெளி ஊடாக கோயில் வயல், இயக்கச்சி சந்தி அடைந்து பின்னர் கிளிநொச்சிக்குச் சேவையை மேற்கொண்டால் கோயில் வயல் பிரதேச மக்கள் நன்மையடைவார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, பளை, இயக்கச்சி போன்ற இடங்களிலிருந்து கல்வி கற்கச் செல்லும் மாணவர்கள் அங்கிருந்து கால்நடையாகவே இயக்கச்சிச் சந்தி வரை சென்று அங்கிருந்து ஏ-9 பாதைக்கு வந்து பேருந்தில் செல்ல வேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (38)



# நல்லூர்க் கந்தனுக்கு இன்று 6ஆம் திருவிழா

நல்லூர் நாயகனே ஞானவடிவேலனே முருகா
பல்லோரும் பணிந்தேத்தும் பாலசுப்ரமணியனே குகனே
எல்லோரும் உனை வணங்கி ஏற்றித் துதிக்கின்றோம்
இல்லாமற் செய்திடுவாய் எங்களது இன்னல்களையே!

இராசையா ஸ்ரீதரன்

அருள் தருவாயே!
சூரர்கள் தொலைந்திட வீசிய வேலுடன்
சுண்ணமாய் வினைகெட உளமாகி
பாரதில் வளமிகு பூசிய நீறுடை
புண்ணியப் பதியெனும் நல்லூரில்
காரிருள் எனும்வினை காலினிற் பொடிபட
மண்ணினில் மகிழ்ந்துறை முருகா நீ
வேரினில் விழுதென காசினி யோங்கிட
தண்ணென வருள் தர வருவாயே!

நா. தமிழிந்திரன்

# கோவிலாக்கண்டி ஸ்ரீமுருகன் வீதியை புனரமைக்குமாறு மக்கள் கோரிக்கை

(சாவகச்சேரி)

கோவிலாக்கண்டிப் பகுதியிலுள்ள ஸ்ரீமுருகன் வீதி இதுவரை செப்பனிடப்படாத நிலையில் மிகவும் மோசமாகச் சேதமடைந்துள்ளதால் வீதியூடான போக்குவரத்து ஸ்தம்பிதமடைந்துள்ளதாக அப்பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

தென்மராட்சிப் பிரதேசத்தில் பல்வேறு வீதிகள் புனரமைக்கப்பட்டுள்ள நிலையில் குன்றும் குழியுமாக சேதமடைந்துள்ள இவ்வீதி இதுவரை புனரமைப்புச் செய்யப்படாதுள்ளதால் இப்பிரதேசத்திலுள்ள மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இவ்வீதிப் பகுதியில் இந்து ஆலயங்கள் காணப்படுவதுடன் மீனவர்கள் மற்றும் விவசாயிகள், மாணவர்கள் நாளாந்தம் பிரயாணம் செய்யும் வீதியாகவும் காணப்படுகிறது.

எதிர்வரும் மழை காலத்திற்கு முன்னர் இவ்வீதி புனரமைக்கபபடாவிட்டால் இவ்வீதியூடான போக்குவரத்து முற்றாகத்தடைப்படும் என இப்பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். இவ்விடயம் குறித்து உரிய அதிகாரிகள் கவனம் எடுத்து இவ வீதியைப்புனரமைத்துத் தருமாறு இப்பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.(19)

# உதயநகரில் முன்பள்ளி திறப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி உதயநகர் மேற்குப் பகுதியில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியினால் அமைக்கப்பட்ட உதயன் முன்பள்ளி கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவருமான மு. சந்திரகுமாரால் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

இத்திறப்பு விழாவில் பெயர்ப் பலகையினை கரைச்சி பிரதேச செயலக பிரதித் திட்டப் பணிப்பாளர் அமல்ராஜ் திரை நீக்கம் செய்து வைக்க, கட்டடத்தை நாடாளுமன்ற உறுப்பினர் மு. சந்திரகுமார் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார்.

ஏழரை இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட இம்முன்பள்ளிக்கு கொடையாளிகளான தனு றெஸ்ரோரன்ட் மற்றும் ஒப்பந்தக்காரரர் ரஞ்சனும் பங்களிப்புச் செய்திருந்தனர். 64 இற்கும் மேற்பட்ட சிறார்கள் இம்முன்பள்ளியில் கல்வி கற்கின்றனர்.



இந்நிகழ்வில் கிளிநொச்சி முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் விந்தன், ஈ.பி.டி.பி. கட்சியின் மாவட்ட அமைப்பாளர் தவநாதன், கிராம அலுவலர், பிரதேச இராணுவ அதிகாரி, கிராம அபிவிருத்திச்சங்கத்தினர், பெற்றோர் ஆகியோர் கலந்து கொண்டனர். (29)

## செயலமர்வு கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். வலய வழிகாட்டல் ஆலோசனை வழங்கல் செயலமர்வுக் கூட்டம் எதிர்வரும் 10,15ஆம் திகதிகளில் காலை 8.30 மணி முதல் மாலை 4.30 மணி வரை யாழ். வலயக் கல்வி அலுவலக முகா மைத்துவ மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு யாழ். வலய வழிகாட்டல் ஆலோசனை வழங்கல் பொறுப்பாசிரியர்கள் தவறாது சமூகந்தறுமாறு யாழ். வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் இராசலிங்கம் அறிவித்துள்ளார். (எஸ்)

## வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி ஏற்றல்

(ஒட்டுசுட்டான்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த இரண்டு மாதங்களாக அகோர வெயில் காரணமாக கட்டாக்காலிகளாகத் திரியும் நாய்களுக்கு விசர் நோய் பிடித்து அலைந்து திரிவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடும் வெயிலினால் ஏற்பட்ட வெப்பத்தினால் நாய்களுக்கு இந்நோய் ஏற்பட்டுள்ளது. இதனால் இப்பிரதேசத்திலுள்ள மக்கள் அவதானமாக இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

இதைவிட நாய்களை வளர்ப்போர் முன்னரே நாய்களுக்குத் தடுப்பூசி மற்றும் தடுப்பு மருந்துகளை மிருக வைத்தியரிடம் சென்று பெற்றுக்கொள்ளுமாறும், இதன் மூலம் நாய்களுக்கு நோய் ஏற்படாமல் தடுக்க முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (101)

# வீதிகளின் புனரமைப்பு தாமதமாவதால் நிரந்தர வீடுகள் அமைப்பதில் நெருக்கடி

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் தாளையடி கிராமத்தில் அவுஸ்ரேலிய செஞ்சிலுவைச் சங்க நிதி உதவியுடன் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ்ப்பாணக் கிளையினால் நிர்மாணிக்கப்படும் நிரந்தர வீடுகள் அமைக்கும் வேலைகள் ஆரம்பிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது வீடுகள் அமைக்கப்படவிருக்கும் பகுதிகளில் வீதிகள் அமைக்கும் பணிகள் ஆரம்பமாகியுள்ளதால் களிமண் வீதியில் கனரக வாகனங்கள் கிறவல் மற்றும் கல்லுடன் செல்லும் வேளை வீதி பழுதாகி வாகனங்கள் புதையுண்டு வருவதால் அவ்விடங்களிலேயே கிறவல், கல்லு என்பன இறக்கப்பட்டு நடுவீதியிலேயே கியூப் கட்டப்பட்டுள்ளது.

இதனால், வீடு அமைக்கும் வேலைகள் ஆரம்பமாகியுள்ள வேளையில் வீடுகள் அமைப்பதற்குரிய கல், மண், சிமெந்து உரிய இடத்துக்குக் கொண்டு செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

வீதி அமைக்கும் பணியை உடனடியாக ஆரம்பிப்பதன் மூலமே மழை காலத்துக்கு முன்னர் வீடுகள் அமைக்கும் பணிகள் ஆரம்பிக்க உதவியாக இருக்கும்.

ஆகவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் வீதி வேலைகளை ஆரம்பிக்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (70)

# கடும் வரட்சி காரணமாக விவசாயச் செய்கை பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

தற்போதைய கடும் வரட்சி வெப்பத்தால் யாழ். குடாநாட்டின் நீர நிலைகளில் தண்ணீரின் மட்டம் வெகுவாகக் குறைந்து காணப்படுகின்றது. குளங்கள் மற்றும் ஏரிகளில் தண்ணீர் முற்றாக வற்றிக் காணப்படுகின்றன. இதனால், குறிப்பாக, விவசாய நிலங்களில் உள்ள கிணறுகளில் தண்ணீர் மட்டம் மிக, மிகக் குறைந்திருப்பதால் விளை பயிர்களுக்குத் தண்ணீர் பாய்ச்ச முடியாது விவசாயிகள் சிரமப்பட்டு வருகின்றனர். ஆவணி மாதத்திற்கான பருவப் பெயர்ச்சி மழை பெய்யாவிட்டால் தண்ணீருக்குப் பற்றாக்குறை நிலவும் சூழ்நிலை ஏற்படும் நிலை தோன்றியுள்ளது. (வி)

## கட்டட திறப்பு விழா

(பளை)

பளை மத்திய கல்லூரி கட்டடத் திறப்பு விழா எதிர்வரும் 12ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

இப்பாடசாலையில் தற்போது அமைக்கப்பட்டுள்ள மூன்று மாடிக் கட்டடத் தொகுதி 143 மில்லியன் ரூபா நிதியில் கட்டப்பட்டுள்ளதுடன் 100 மீற்றர் நீளம் கொண்டதாக அமைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்விற்கு வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி, பாரம்பரியக் கைத்தொழில் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என் டக்ளஸ் தேவானந்தா, யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மு. சந்திரகுமார், யுனிசெவ் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி மற்றும் அவுஸ்ரேலியாவின் இலங்கைக்கான தூதுவர் உட்பட பலர் கலந்து கொள்ளவுள்ளனர். (எஸ்)





போரினால் முற்றாகச் சேதமடைந்த பூநகரி - மண்ணித்தலை புனித செபஸ்தியார் ஆலயம் தற்போது மீளப் புனரமைக்கப்பட்டு வருகின்ற நிலையில், இந்த மாத இறுதியில் அதன் திருவிழா கொண்டாடப்படவுள்ளது. இதன்பொருட்டு பாசையூர் கிராமத்தைச் சேர்ந்த இளைஞர்கள் மற்றும் பெரியவர்கள் ஒன்றிணைந்து ஆலயக் கட்டுமானப் பணிக்கு சரீர உதவிகள் செய்து, சிரமதானப் பணியில் ஈடுபடுவதைக் காணலாம். (21)

# யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு "மீனவர் ஒத்துழைப்பு அமைப்பு" உதவி

(யாழ்ப்பாணம்)

யுத்தத்தின் போது வீட்டுத்தலைவர்களை இழந்த பெண்களைத்தலைமைத்துவமாகக கொண்ட வறிய 40 குடும்பங்களுக்கு சுயதொழில் ஊக்குவிப்புத்திட்டத்தின் கீழ் 1000 ரூபா பெறுமதியான சத்துணவுப் பொருட்கள் தேசிய மீனவர் ஒத்துழைப்பு அமைப்பின் அனுசரணையுடன் வழங்கப்பட்டு வருவதாக தேசிய மீனவர் ஒத்துழைப்பு அமைப்பின் யாழ் மாவட்ட இணைப்பாளர் இன்பம் தெரிவித்துள்ளார்.

சுமார் ஆறுமாதங்களுக்கு இவ்வாறு சத்துணவுப் பொருட்கள் வழங்கப்படவுள்ளதாகவும் இப் பொருட்களில் அரிசி, மா, சீனி, பருப்பு, கருவாடு என்பன அடங்குவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தில் நேற்றுப்பிற்பகல் 2.30 மணிக்கு இப் பயனாளிகளுக்கான சத்துணவுப்பொருட்கள் வழங்கப்பட்டதாக தேசிய மீனவர் ஒத்துழைப்பு அமைப்பின் யாழ். மாவட்ட இணைப்பாளர் இன்பம் மேலும் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் அண்மையில் மீள்குடியேறிய குடும்பங்களில் இருந்தும் முகாம்களில் வசித்து வந்த குடும்பங்களில் இருந்தும் இதற்கான பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டதுடன் இக்குடும்பங்களுக்கு வீட்டுத்தோட்ட செயன்முறை குறித்தும் அறிவூட்டப்பட்டதாகவும் தெரியவருகின்றது. (பா)

# அமைச்சர் டக்ளஸின் நிதியுதவியில் துவிச்சக்கர வண்டிகள் அன்பளிப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மேற்கு பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்க முள்ளியவளைப் பிரதேச அங்கத்தவர்கள் மற்றும் பணியாளர்களுக்கான ஈருருளிகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்வு கடந்த 28ஆம்திகதி மு.ப. 11.00 மணியளவில் முள்ளியவளை ப.தெ.வ.அ.கூ. சங்க மண்டபத்தில் சங்கத் தலைவர் சின்னத்தம்பிராஜா தலைமையில் இடம்பெற்றது.

பாரம்பரியகைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ்தேவா னந்தாவின் நிதி உதவியில் அங்கத்தவர், பணியாளர்களுக்கு 19 ஈருருளிகள் வழங்கப்பட்டன. ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் முல்லைத்தீவு மாவட்ட அமைப்



பாளர் அ. ஜெயராஜ் முல்லைத்தீவு மாவட்ட ப.தெ.வ.அ.கூ.சங்க இணையத்தின் பொது முகாமையாளர் சி.வேதவனம் மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அலுவலகர் செல்வி மோகனகுமாரி ஆகியோர் கருத்துரை வழங்கியதோடு ஈருருளிகளையும் வழங்கிக் கௌரவித்தனர். (04)

# ஒஸ்மானியாக்கல்லூரி மைதானத்தில் நோன்பு பெருநாள் தொழுகை

(யாழ். நிருபர்)

இவ்வருடம் யாழ்ப்பாணத்தில் நோன்புப் பெருநாள் ஜிம்மா தொழுகை ஒஸ்மானியாக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவிருக்கின்றன.

யாழ். கிளிநொச்சி முஸ்லிம் சம்மேளனத்தின் செயலாளர் அஷ்சேஷ்க் ஐ அஸ்மின் தலைமையில் யாழ். பெரிய பள்ளிவாசலில் சகல பள்ளிவாசல்களின் பரிபாலன சபையினருடன் நடைபெற்ற கலந்துரையாடலில் இம்முடிவு எடுக்கப்பட்டது.

இதில் மௌலவிகளான முகமது ம:.முத், ஏ.அப்துல் அஸிஸ், எம். ரோசான் ஆகியோர் இஸ்லாமிய ஷரீயா சம்பந்தமான ஆலோசனைகளை வழங்கினார்கள்.

ஜிம்மாப்பள்ளி வாசல் தலைவர்களான எம்.நியாஸ், எம்.ஏ. ஸி.முபீன், ஏ.எம். ஜமால் ஏ.எம். பிரிதவ்ஸ், எம்.எல்.லாபிர், மற்றும் பொம்மைவெளி மஸ்ஜித் அபூபக்கர் பள்ளிவாசல் பரிபாலான சபையினரும் கலந்து கொண்டனர்.

ஒஸ்மானியாக் கல்லூரி மைதானத்தில் ஆண், பெண் இருபாலாருக்கும் அதிகாலை 7 மணிக்கு ஒரே நேரத்தில் பெருநாள் தொழுகையும், ஜும்மாவும் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளன.

இதுவரை காலமும் அந்தந்த பள்ளிவாசல்களில் பெருநாள் தொழுகை நடைபெற்றுவந்தன. இவ்வருடம் முதற்தடவையாக மைதானத்தில் தொழுகையும், ஜிம்மாவும் நடைபெறுவது குறிப்பிடத்தக்கதாகும். (105)



கடந்தவாரம் ஆவரங்கால் விஷ்ணுவித்தியாலயத்திற்கு வருகைதந்த இளைஞர் விவகார அமைச்சர் திஸ்ஸ கரலியத்த அதிபர், ஆசிரியர்கள் சகிதம் பாடசாலை ஆய்வு கூடத்தைப் பார்வையிட்டு குறைகளைக் கேட்டறிவதைக் காணலாம். (03)

# அடிக்கல் நாட்டு விழா

(யாழ். நிருபர்)

காரைநகர் கசூரினா கடற்கரை சுற்றுலாப்பயணிகள் மையத்திற்கு அண்மைக்காலமாக வருகை தரும் சுற்றுலாப்பயணிகளின் எண்ணிக்கை அதிகரிக்கத் தொடங்கியுள்ளது. இங்கு வருகைதரும் சுற்றுலாப்பயணிகளின் வசதிகருதி ஆண், பெண் உடைமாற்றுவதற்கு தனித்தனியான இரண்டு கட்டடங்கள் அமைக்கப்படவுள்ளன. 1.5 மில்லியன் ரூபா செலவில் நிறுவப்படவுள்ள இக்கட்டடங்களுக்கான அடிக்கல்நாட்டு விழா எதிர்வரும் 15ஆம் திகதி திங்கட்கிழமை கடற்றொழில் நீரியல்வளத்துறை அமைச்சர் அடிக்கல்லை நாட்டி வைக்கவுள்ளார். (10)

## ஸ்ரீதரின் இன்றைய பலன்

(09.08.2011 – செவ்வாய்க்கிழமை)

**பஞ்சாங்கக் குறிப்புக்கள்**

கர வருஷம்

ஆடி 24 ஆம் நாள்.

இராகுகாலம் 03.04–4.34, சுபநேரம் 10.34 –12.04,

நட்சத்திரம்: கேட்டை மாலை 6.05 வரை

திதி: ஏகாதாசி பி.இ 1.56 வரை

ஏகாதசி விரதம்

**இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது**

- **மேடம்:–** பெரியோர் வாழ்த்து பண வரவு, குடும்பத்தில் மகிழ்ச்சி, சகோதரர் உதவி, திருட்டுப் போகலாம்.
- **ரிஷபம:–** கடன்படல், பக் கஷ்டம், சகோதரர் வெறுப்பு, அதிகாரப் போட்டி, நிம்மதிக்குறைவு.
- **மிதுனம் :–** அதிகாரப் போட்டி, பண வரவு, உறவினர் வருகை, நண்பர்கள் உதவி, தெரு விபத்து.
- **கடகம்:–** நினைத்ததைச் சாதித்தல், பண வரவு, அற்பர் நேசம், பிணக்குத் தீர்த்தல், சினம் மிகுதி.
- **சிம்மம்:–** சகோதர வெயுப்பு. பணக்கஷ்டம், தொழில் விருத்தி, வெளிநாட்டு உதவி, தெருவிபத்து.
- **கன்னி :–** வீண் கோபம், பணக் கஷ்டம், அதிகாரப் போட்டி, சகோதரர் உதவி, மனக்கவலை,
- **துலாம் :–** தொழில் ஆதாயம், பண வரவு, வீண் அலைச்சல், வெளிநாட்டு உதவி, பிணக்குத் தீர்தல்.
- **விருச்சிகம்:–** புதுப்பொருள் சேர்க்கை பண வரவு, மூத்தோர் ஆசி, வெகு உற்சாகம், மனமகிழ்ச்சி.
- **தனுசு:–** சுற்றத்தார் ஆதரவு, பணக் கஷ்டம், முக்கிய முடிவுகள், தொழிலில் ஆதாயம், தெரு விபத்து.
- **மகரம:–** வசதிக்குறைவு, பணக் கஷ்டம், வீண் கோபம், நண்பர் விமர்சனம், உடல் உபாதை.
- **கும்பம் :–** உறவுக்குள் பகை, பண வரவு, குடும்பத்தில் மகிழ்ச்சி, பிணக் குத்தீர்த்தல், வெளிநாட்டு உதவி.
- **மீனம்:–** வாய்ப்பு இழப்பு, பணக் கஷ்டம், வசதிக்குறைவு, சுற்றத்தார் ஆதரவு, தெரு விபத்து.

# மதிய உணவு வழங்க ஏற்பாடு

(அம்பலப்பெருமாள்)

துணுக்காய் ஆரோக்கியபுரம் பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு மதிய உணவு வழங்குவதற்கான சமயலறைக்கூடம் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவில் இப்பணிகள் நடைபெறுகின்றன.

மிகவும் பின் தங்கிய பிரதேசமான இப்பகுதியின் மாணவர்களின் போசாக்கினை அதிகரிக்கவும், பாடசாலைக்குச் செல்லும் மாணவர்களின் கல்வி வசதியை மேம்படுத்தும் நோக்குடன் இத்திட்டம் அமுல்ப்படுத்தப்படவுள்ளது. (121)

# கிளிநொச்சி உயர்தரப் பரீட்சைக்கு எட்டு இணைப்பு நிலையங்கள்

(அம்பலப்பொருமாள்)

க.பொ.த. (உ:.த) பரீட்சை கிளிநொச்சிக் கல்வி வலயத்தின் 8 இணைப்பு நிலையங்கள் ஊடாக நேற்று ஆரம்பமாகி நடைபெற்று வருவதாக கிளிநொச்சி வலய பதில் கல்விப் பணிப்பாளர் க.முருகவேல் தெரிவித்தார்.

இதன்படி கிளிநொச்சி மகாவித்தியாலயம் அக்கராயன் மகா வித்தியாலயம் கிளிநொச்சி இந்துக்கல்லூரி வட்டக்கச்சி மகாவித்தியாலம், பளை மத்திய கல்லூரி, பூநகரி மகாவித்தியாலயம் முருகானந்தா மகாவித்தியாலம், ஜெயபுரம் மகாவித்தியாலயம், ஆகிய 8 இணைப்பு நிலையங்கள் ஊடாக இப்பரீட்சை நடைபெற்றுவருகின்றது.

இதேவேளை, புதிய பாடத்திட்டத்தின் கீழ் 10 பரீட்சை நிலையங்கள் ஊடாகவும், பழைய பாடத்திட்டத்தின் கீழ் 12 பரீட்சை நிலையங்கள் ஊடகாகவும் பரீட்சைகள் நடைபெற்று வருவதாக அவர் மேலும் தெரிவித்தார். (121)

---

வேள்வி எண்டது எங்களுக்குப் புதிசே பாருங்க இப்ப கொஞ்ச நாளா பேப்பர்களை எடுத்தா கவுணாவத்தையில் ஆயிரம் கடா வெட்டப்பட்டது!

கல்லுண்டாயில் நூற்றுக் கணக்கில் ஆடுகள் பலி இப்புடிச் செய்திகளைப் பாக்க நேருது.

அதேவேளை தென்பகுதியில் இருந்து புத்த பிக்குகள் உந்த வேள்வி கடா் வெட்டுதலை நிறுத்தும் படி கோரிக்கை எண்பது பிற்பாடு ஆணையாக மாறியதையும் பாக்க முடிஞ்சிது.

இதுக்கிடேல்ல மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் தேருக்குக் கன வருசங்களுக்குப்பிறகு அண்டைக்குப் போயிருந்தன்.

கோயிலுக்கு முன்னால போட்டிருந்த பந்தல்ல இருக்கேக்க உந்த வேள்ளி பற்றிய கதைவந்திட்டுது.

நான் சொன்னன் எனக்கெண்டா கடாவெட்டுறதை நிப்பாட்டுறதே விருப்பமில்லை எண்டன்.

அதுக்கு எங்கட மூதாதையர் செய்த எத்தினையோ விசயம் மிக மதி நுட்பமாகவும் எதிர்காலச் சந்ததியினருடைய நலன் கருதியும் அமைந்திருப்பதைக் காண்கிறம்.

அவையள் செய்த தெல்லாத்தையும் மூட நம்பிக்கை எண்டு ஒதுக்கேலாது.

கொண்டால் பாவம் திண்பாப் போச்செண்டும் வாகடச் சொல்லொண்டிருக்கு உணவுக்காக நாங்கள் மரக்கறியெண்டாலும் கொல்லத்தான் செய்யிறம்.

மனிதனை உணவுக்காக மிருகங்கள் கொல்லுது: மனிதனும் உணவுக்காக கொல்லுறதே உலக நீதியா ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கு.

மனிதனை மனிதன் உணவுக்காகக் கொல்றேல்ல அதனால் அதனைப் பாவமாக் கருதப்படுகிறே!

இப்புடிக் கதைச்சுக் கொண்டு போன இடத்தில ஐம்பூதங்களையும் அனுசரித்து வாழுகிற மனிதன் அந்தப் பூதங்களைச் சாந்திப் படுத்த பலி கொடுக்கிறதே பாரம்பரியமா நடந்து வருகுது.

உப்புடித்தான் கவுணாவத்தை வேள்வியை நடத்தி வந்த பூசாரி முன்பொருக்கா பலியிடுவதுக்கு எதிராகச் சட்டம் கொண்ந்தபோது கொழும்பு மேல் கோட்டு வரைபோய் இந்து சமயாசார முறைகளைக் காட்டி வழக்கில வெண்டு வந்தேண்டும் ஒருவர் சொன்னார்.



உதாரணத்துக்கு நாங்க ஒருகிணறு வெட்டுறேண்டாலும் சிறு கோழியத்தானும் பலி குடுக்கத்தான செய்யிறம்.

நிலம், வானம் , நெருப்பு, நீர் காற்றெனும் ஐந்து பூதங்கள் எங்களை ஆளுகுதுகள் அதுகளைச் சாந்தப் படுத்தித்தான் மனிதன் பூமியில வாழலாமென இந்துசமய கோட்பாடுகளென்ன, அனைத்துலகமும் ஏற்றுக்கொள்ளுது. அதுக்கிடேல்ல அதுக்குத்தடையைப் போட்டா மனிதக்குருதியே ஆறாய் ஓடுதே?

கவுணாவத்தை ஸ்தாபகரும் செத்துப் போனாராம், இன்னொருக்கா பிறந்து வந்துதான் சட்டங்களின் கண்களைத் திறக்க வேணுமாக்கும்!

விளையாட்டுச் செய்திகள்

# கடினமான உழைப்பில் சிறந்து விளங்கி வடமாகாணம் முதலிடம் பெறவேண்டும்

## கூறுகிறார் ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி

(மன்னார்)

கடின உழைப்பிற்கு வடமாகாணத்தை விட வேறு எந்த மாகாணமும் இல்லை என்பதை வெளிப்படுத்தும் வகையில் எமது மாகாணத்தை முதனிலைக்குக் கொண்டு வரவேண்டும் என்பதே எமது நோக்கம் என வட மாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி தெரிவித்தார்.


மன்னார் முருங்கன் மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற ஐந்தாவது வட மாகாணத் திணைக்கள விளையாட்டுப் போட்டியில் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், முதல் முறையாக வடக்கு மாகாணத்திற்கு விளையாட்டுப்போட்டி மன்னார் மாவட்டத்தில் நடைபெறுவது மகிழ்ச்சி. வடக்கு மாகாணத்தின் ஆளுநராகப் பதவியேற்ற காலத்திலிருந்து விளையாட்டை மேம்படுத்தத் தேவையான வளங்களை வழங்கியுள்ளேன்.

திணைக்களத்தில் உள்ள விளையாட்டு உத்தியோகத்தர், பயிற்றுநர் வெற்றிடங்கள் யாவும் நிரப்பப்பட்டு பயிற்றுநர் பாசறைகளும் ஒழுங்குபடுத்தப்பட்டன.

பதக்கங்களை வெல்லக்கூடிய புதிய விளையாட்டுக்களைப் பொருத்தமானவர்களை இனங்கண்டு பயிற்றப் பட்டது. தேவையான ஊக்குவிப்புக்கள், வசதிகளை வழங்கி தேசிய மட்டத்தில் குறைந்தது ஐந்தாவது இடத்தையேனும் பெற்றுக் கொள்வதே எமது உடனடி இலக்காகும் உங்களுடைய கடுமையான உழைபபின் மூலமே இந்த இலக்கை அடைய முடியும். தட்டெறிதலில் புதிய சாதனை படைத்ததன் மூலம் இதை நிறைவேற்ற முடியும் என நான் நம்புகின்றேன். கால்பந்தாட்டப் போட்டியில் அதிக பதக்கங்களை வென்ற மன்னார் வீரர்களுக்கு எனது பாராட்டுக்கள் என்றார்.





படங்கள் : ந. குமார்

வடக்கு மாகாண விளையாட்டு நிகழ்வின் இறுதி நாள் நிகழ்வின்போது...

# இறுதிப் போட்டி திகதியில் மாற்றம்

(மட்டுவில்)

மட்டுவில் வளர்மதி விளையாட்டுக்கழகத்தின் 46ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு யாழ். மாவட்ட ரீதியாக பதிவு செய்யப்பட்ட அணிகளுக்கிடையிலான கரப்பந்தாட்டத் தொடரின் அரையிறுதிப் போட்டி இன்று 9ஆம் திகதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்தபோதும் தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளதாகப் போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

இப்போட்டி நாளை மறுதினம் நடைபெறும் என்றும், இப்போட்டியில் கே.கே.எஸ். அணியை எதிர்த்து ஆவரங்கால் இந்து இளைஞர் ஏ அணி மோதவுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

தென்மராட்சி அணிகளுக்கிடையிலான அரையிறுதிப் போட்டியும் 10ஆம் திகதி நடைபெறவிருந்த நிலையில் தவிர்க்க முடியாத காரணத்தினால் 12ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் ஆவரங்கால் மத்தி அணியை எதிர்த்து ஆவரங்கால் இந்து இளைஞர் 'பி' அணி மோதவுள்ளது. (118)

# முதல் சுற்று ஆட்டங்கள் நிறைவு

(யாழ்ப்பாணம்)

இலங்கை பாடசாலை கிரிக்கெட் சங்கத்தால் நடத்தப்பட்டு வந்த பிரிவு மூன்றுக்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் முதல் சுற்று ஆட்டங்கள் கடந்த ஏழாம் திகதியுடன் நிறைவடைந்துள்ளதாக போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

இலங்கைப் பாடசாலை கிரிக்கெட் சங்கத்தால் நடாத்தப்படும் பிரிவு மூன்றின் 15 மற்றும் 17 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான போட்டியின் முதல் சுற்று ஆட்டங்கள் நிறைவடைந்துள்ளது. இதன் இரண்டாவது சுற்று ஆட்டங்கள் இன்னும் இரண்டு அல்லது மூன்று வாரங்களில் ஆரம்பமாகும் என்று அதற்கான போட்டி அட்டவணை தயாரிக்கப்பட்டு வருவதாகவும், இரண்டாவது சுற்றுக்குத் தெரிவான பாடசாலைகளுக்கு போட்டி அட்டவணை விரைவில் அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

கடந்த மாதம் 24ஆம் திகதியுடன் முதல் சுற்று ஆட்டங்கள் நிறைவுபெறும் வகையில் திட்டமிடப்பட்டிருந்தபோதும் உள்ளூராட்சித் தேர்தல் மற்றும் இரண்டாம் தவணைப் பரீட்சை காரணமாக கடந்த ஏழாம் திகதி வரை இப்போட்டித் தொடரின் முதல் சுற்று ஆட்டங்கள் நீடிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, இரண்டாவது சுற்றுக்குத் தெரிவான முன்னணிப் பாடசாலை சில தீவிர பயிற்சிகளை மேற்கொண்டு வருவதையும் அவதானிக்க முடியும் அதேவேளை, மூன்றாவது சுற்றுக்கு முன்னேறுவதற்கான வியூகங்களையும் அவை மேற்கொண்டு வருகின்றன

# விலகல் கிண்ண இறுதிப் போட்டிக்கு றோயல், பாடுமீன் அணிகள் தகுதி

(யாழ்ப்பாணம்)

விலகல் கிண்ணத்திற்கான இறுதிப் போட்டியில் விளையாடும் தகுதியை ஊரெழு றோயல் மற்றும் குருநர் பாடுமீன் அணிகள் தகுதி பெற்றுள்ளன.

யாழ். லீக்கில் அங்கத்துவம் வகிக்கும் கால்பந்தாட்ட அணிகளுக்கிடையில் யாழ். லீக்கினால் நடாத்தப்பட்டுவரும் விலகல் கிண்ணத்திற்கான கால்பந்துத் தொடர் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

இதில் இடம்பெற்ற முதலாவது அரையிறுதிப் போட்டியில் குருநகர் பாடுமீன் அணியும், பாசையூர் சென் அன்ரனீஸ் அணியும் மோதின. ஆட்டம் தொடங்கி இறுதி வரை பரபரப்பாக நடைபெற்ற போதிலும் இரு அணிகளும் கோல் எதனையும் போடவில்லை. இதன் காரணமாக தண்ட உதை மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதில் 3-1 என்ற கோல் கணக்கில் பாடுமீன் அணி வெற்று பெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

இதனையடுத்து நேற்று முன்தினம் நடைபெற்ற இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் ஊரெழு றோயல் அணியும், ஆனைக்கோட்டை யூனியன் அணியும் மோதின. இதில் அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்திய றோயல் அணி சிறப்பான வெற்றியைப் பெற்றது. இறுதியில் 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்குத் தெரிவானது.

இறுதிப் போட்டி நாளை மாலை நடைபெறவுள்ளதாக போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (21)

# தேர்வாளர் தெரிவை வீணடிக்கமாட்டேன்

(லண்டன்)

தேர்வாளர்களின் தெரிவை உறுதி செய்யும் வகையில் எனது பந்து வீச்சு அமையும் என இங்கிலாந்து சென்ற இந்திய அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஆர்.பி.சிங் தெரிவித்தார்.

இங்கிலாந்து அணிக்கெதிரான தொடரில் என்னை மீண்டும் அணியில் இணைத்தது மகழ்ச்சி அளிக்கிறது. நான்கு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் எமது அணி 0-2 என்ற கணக்கில் பின்னிலையில் இருப்பது மிகுந்த வேதனை.

இதனை ஈடுசெய்யும் வகையில் சிறந்த ஆட்டத் திறனை ஒருங்கிணைந்து வெளிப்படுத்துவோம் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது.

பொதுவாக எல்லா அணிகளுக்கும் இவ்வாறான நிலைமை ஏற்படுவது வழமைதான். அதிலிருந்து மீள்வதே கடினம். அந்த வகையில் நெருக்கடி நிலையிலிருந்து மீண்டெழும் தன்மை கொண்டது எமது அணி. எனவே, மீதமுள்ள இரண்டு டெஸ்ட் போட்டிகளிலும் வென்று தொடரை சமநிலைப் படுத்த முயற்சிப்போம்.

நீண்ட இடைவெளியின் பின்னர் அணியில் இடம்பிடித்ததும் மகிழ்ச்சி அந்த வாய்ப்பைத் தொடர்ந்தும் தக்க வைத்துக்கொள்ள முயற்சிப்பேன் எனவும் அவர் தெரிவித்தார்.

# கொம்யூனிட்டி கால்பந்தாட்டம் சம்பியனானது மான்செஸ்டர்



மான்செஸ்டர் யுனைடெட் அணி கொம்யூனிட்டி கேடய கால்பந்தாட்டப் போட்டியில் சம்பியனானது.

அந்த அணி 3-2 கோல் கணக்கில் மான்செஸ்டர் சிட்டி அணியைத் தோற்கடித்து கேடயத்தை கைப்பற்றியது. காயமடைந்த நேரத்தில் நானி அடித்த கோல் மான்செஸ்டர் அணிக்கு வெற்றி தேடித் தந்தது.

மான்செஸ்டர் யுனைடெட் அணி சக்தி வாய்ந்த பிரிமியர் லீக் அணியாக உள்ளது. 1993 ஆம் ஆண்டு மான்செஸ்டர் யுனைடெட் அணி சம்பியனானது. அப்பொது பெர்குசன் 26 ஆண்டு காத்திருப்பை முறியடித்து அணிக்கு கேடயத்தை பெற்றுக் கொடுத்தார். அந்த அணி 94, 96, 99, 2000, 2001, 2003 ஆண்டுகளிலும் இந்த போட்டியில் சம்பியன் பட்டத்தை பெற்று உள்ளது. மான்செஸ்டர் யுனைடெட் அணியில் 52ஆவது நிமிடத்தில் ஸ்மாலிங் கோல் அடித்தார். இதையடுத்து 58 மற்றும் 90 ஆவது நிமிடத்தில் நானி கோல் அடித்து யுனைடெட் அணிக்கு வெற்றியை தேடி தந்தார்.

சிட்டி அணியில் லெஸ்காட் 38ஆவது நிமிடத்தில் கோல் பொட்டார். 45ஆவது நிமிடத்தில் டெஸ்கோ கோல் பொட்டார். இந்த போட்டியை காண வெம்ளியில் 77ஆயிரத்து 169 ரசிகர்கள் மைதானத்தில் திரண்டு இருந்தனர். யுனைடெட் அணியில் இளமையும் அனுபவமும் வாய்ந்த வீரர்கள் இடம் பெற்று இருந்தனர் அவர்களது அற்புதமான ஆட்டம் வெற்றியை தேடித்தந்துள்ளது.

# இறுதி வரை போராடுவேன்


## சாய்னா நம்பிக்கை

நீண்ட இடைவெளிக்குப் பின்னர் எந்த வித காயம் தொந்தரவும் இன்றி முழு உடல்தகுதியுடன் உலக சம்பியன்ஷிப் பட்மின்ரன் போட்டியில் பங்கேற்பது நிம்மதி அளிப்பதாகவும், இதில் சாதிப்பேன் எனவும் இந்தியாவின் பட்மின்ரன் வீராங்கனை சாய்னா தெரிவித்தார்.

இங்கிலாந்தில் நடைபெறும் உலக பட்மின்ரன் சாம்பியன்ஷிப் போட்டி குறித்து கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்

இந்தப் போட்டிக்காக கடந்த 5 மாதங்களாக கடுமையாக உழைத்தேன். கடந்த இரண்டு உலகப் போட்டிகளில் நான் பல பிரச்சினைகளைச் சந்தித்தேன். 2009ஆம் ஆண்டு போட்டிக்கு முன்பாக சின்ன அம்மை நோயால் பாதிக்கப்பட்டேன். அதன் பிறகு 2010ஆம் ஆண்டு ஜுன் மாதம் 3 சர்வதேச பட்டங்களை தொடர்ச்சியாக வென்றதால் நடத்தப்பட்ட பாராட்டு விழாக்களில் கலந்து கொண்டு நேரத்தை வீணடித்ததால் அந்த ஆண்டு நடந்த உலக சாம்பியன்'ஷிப் போட்டியிலும் சாதிக்க முடியாமல் போய் விட்டது. ஆனால் இந்த அனுபவத்தில் இருந்து நிறைய பாடம் கற்றுக்கொண்டு விட்டேன். இந்தத் தடவை சிறப்பாக செயற்பட முடியும் என்று நம்புகிறேன் என்றார்.

# உலகக் கிண்ண கால்பந்தாட்டத் தொடர் ஹட்ரிக் வெற்றியில் நைஜீரியா, ஸ்பெயின்



(பெரைரா)

உலகக் கோப்பை கால்பந்து (20 வயதுக்குட்பட்டோர்) தொடரில், நைஜீரியா, ஸ்பெயின் அணிகள் ஹட்ரிக் வெற்றியை பதிவாக்கியுள்ளன.

கொலம்பியாவில், பிபா 20 வயதுக்குட்பட்டோருக்கான உலக கோப்பை கால்பந்துத் தொடர் நடக்கிறது. 'டி' பிரிவில் நேற்று முன்தினம் நடந்த லீக் போட்டியில் நைஜீரியா, சவுதி அரேபிய அணிகள் மோதின. இதில் அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய நைஜீரிய அணி 2-0 என்ற கோல் கணக்கில் ஹாட்ரிக் வெற்றி பெற்றது. முன்னதாக நைஜீரிய அணி, குவாத்தமாலா, குரோஷியா உள்ளிட்ட அணிகளை வீழ்த்தியது.

'சி' பிரிவில் நடந்த லீக் போட்டியில் ஸ்பெயின், அவுஸ்ரேலிய அணிகள் மோதின. இதில் அபாரமாக ஆடிய ஸ்பெயின் அணி 5-1 என்ற கோல் கணக்கில் ஹட்ரிக் வெற்றி பெற்றது. இப்பிரிவில் நடந்த மற்றொரு போட்டியில் ஈகுவடோர் அணி 3-0 என்ற கோல் கணக்கில்கோஸ்ட ரிகா அணியை வீழ்த்தியது.

லீக் சுற்றின் முடிவில் ஒவ்வொரு பிரிவிலும் முதலிரண்டு இடங்களைப் பிடித்த அணிகள் அடுத்த சுற்றுக்கு முன்னேறின.

இதன்படி கொலம்பியா (ஏ1), பிரான்ஸ் (ஏ2), போர்த்துக்கல் (பி1), கமரூன் (பி2), ஸ்பெயின் (சி1), ஈகுவடோர் (சி2), நைஜீரியா (டி1), சவுதி அரேபியா (டி2), பிரேசில் (இ1), எகிப்து (இ2), ஆர்ஜென்ரீனா (எப்1), மெக்சிக்கோ (எப்2) உள்ளிட்ட அணிகள் அடுத்த சுற்றுக்குத் தகுதி பெற்றன.

# லண்டன் ஒலிம்பிக் போட்டிக்கு பிரிட்டன் வீராங்கனை தகுதி

(லண்டன்)

2012ஆம் ஆண்டு லண்டன் ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்க பிரிட்டன் தடகள வீராங்கனை ஹெலன் ஜென்கின்ஸ் தகுதி பெற்றார்.

அவர் மத்திய லண்டன் ஹைடே பார்க்கில் நடந்த உலக சீரிஸ் டிரையதலான் போட்டியில் வெற்றி பெற்றதன் மூலம் ஒலிம்பிக் போட்டிக்கு தகுதி பெற்றார்.

27 வயதான ஹெலன் உலக சம்பியன்ஷிப் தொடரில் வெற்றி பெற்றது இல்லை. 2008ஆம் ஆண்டு அவர் உலக சம்பியன் ஷிப்பில் வெற்றி வாகை சூடினார். அதன் பின்னர் அவர் பெற்ற மிகப் பெரும் வெற்றி இது வாகும்.

சைக்கிள், நீச்சல், ஓட்டம் என அனைத்திலும் ஹெலன் ஜென்கின்ஸ் அற்புதமாக கடந்து முடித்தார். ஹைடே பார்க் டிரையதலன் போட்டி வெற்றி புதிய நம்பிக்கை தருகிறது. இந்த வெற்றி என்னை லண்டன் ஒலிம்பிக்கிற்கு கொண்டு சென்றுள் ளது. இதே திறனை அங்கும் பிரதிபலிப்பேன் என ஹெலன் மகிழ்ச்சி பொங்கத் தெரிவித்தார்.

ஹைடே பார்க்கில் இருந்து பக்கிம்கான் அரண்மனை வரையிலான சைக்கிள் ஓட்டத்தில் அவர் அருமையாக முன்னேறி அடுத்தடுத்து நடந்த சுற்றுகளில் முன்னேறி சாதனை படைத்தார். சளியால் அவதிப்பட்ட அவருக்கு நீச்சலின் போது பிரச்சினை ஏற்பட்டது.

# மோ பரா சம்பியனானார்

(லண்டன்)

அவிவா லண்டன் கிராண்ட் பிறீஸ் தடகள பந்தயத்தில் 3000 மீற்றர் போட்டியில் மோ பரா சாம்பியன் ஆனார். அந்த வீரர் கிறிஸ்டல் அரண்மனையில் குவிந்திருந்த ரசிகர்களை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தும் வகையில் 7 நிமிடம் 40.15 வினாடியில் ஓடி முடித்து முதலிடம் வென்றார். 28 வயது மோ பரா, கென்ய வீரர் கிடோன் காதிம்பா மற்றும் அவுஸ்ரேலிய வீரர் கலிஸ் மிர்மிங்காமை முந்தி வெற்றி இலக்கை எட்டினார். இந்த வெற்றியைப் பெற்ற மோ பரா கூறுகையில், வித்தியாசமான நுணுக்கத்தில் இந்தப் போட்டியில் ஓட முடிவு செய்தேன். வெற்றியும் கிடைத்தது. தென்கொரியாவின் டேகு நகரில் நடைபெறும் போட்டிக்குத் தயாராக வேண்டும் என்றார். நீளம் தாண்டுதலில் பிரிட்டிஷ் வீரர் கிறிஸ் டோம்லின்கன் 2ஆவது இடம்பெற்றார். அவர் 8.30 மீற்றர் தாண்டினார். அவுஸ்ரேலிய வீரர் மிட்சேல் வாட் 8.45 மீற்றர் தூரம் தாண்டி லண்டன் கிராண்ட் பிறீஸ் நீளம் தாண்டுதலில் முதலிடம் பெற்றார்.

# முதல் சுற்றில் சானியா வெற்றி



(ரொரன்ரோ)

ரோஜர்ஸ் கோப்பை ரென்னிஸ் தொடரின் தகுதிச் சுற்றுக்கான முதல் சுற்றில் இந்தியாவின் சானியா மிர்சா வெற்றி பெற்றுள்ளார்.

கனடாவில் உள்ள ரொரன்ரோ நகரில் டபிள்யு.டி.ஏ., ரோஜர்ஸ் கோப்பை ரென்னிஸ் தொடர் நடக்கிறது. இதன் ஒற்றையர் பிரிவு தகுதிச் சுற்றுக்கான முதல் சுற்றில் இந்தியாவின் சானியா மிர்சா, கனடாவின் ஹெய்டி எல் டபாக்கை எதிர்கொண்டார்.

இதில் சானியா 6-0, 4-6, 6-0 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று, இரண்டாவது சுற்றுக்கு முன்னேறினார். இரண்டாவது சுற்றில் சானியா, ஜெர்மனியின் கத்ரின் வோர்லியை சந்திக்கிறார்.


# அக்ரமும் ஆசை

(லாகூர்)

இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில் 100ஆவது சதத்தை நிச்சயம் சச்சின் அடிப்பார் என்று பாகிஸ்தான் முன்னாள் தலைவர் வசிம் அக்ரம் கூறியுள்ளார்.

சச்சின் டெண்டுல்கர், பர்மிங்காமில் நடககும் இங்கிலாந்துக்கு எதிரான 3ஆவது டெஸ்டில் சதம் அடிப்பார் என்று உறுதியாகச் சொல்ல முடியாது. ஏனெனில் இங்கு பந்து நன்கு ஸ்விங் ஆகும். அத்துடன் டெஸ்ட் தொடரில் சரிவில் இருந்து மீள வேண்டிய நெருக்கடியும் இருக்கிறது. என்னைப் பொறுத்தவரை லண்டன் ஓவலில் நடக்கும் 4ஆவது மற்றும் கடைசி டெஸ்டில் அவர் தனது 100ஆவது சதத்தை எட்டுவார் என்று நினைக்கிறேன். இங்கு அவர் வரலாறு படைக்க பிரகாசமான வாய்ப்புள்ளது. நிச்சயம் அவர் இந்த மைல்கல்லை எட்டிய முதல் வீரர் என்ற சாதனை படைப்பார் என்பதில் சந்தேகமில்லை. இந்தியா-இங்கிலாந்து இடையிலான டெஸ்ட் தொடருக்கு மிகப்பெரிய எதிர்பார்ப்பு உருவாக்கப்பட்டுள்ளது. குறிப்பாக டெண்டுல்கர் 100ஆவது சதத்தை அடிப்பாரா? என்ற எதிர்பார்ப்பு அதிகமாகக் காணப்படுகிறது. இதன் மூலம் சச்சின் நிச்சயம் நெருக்கடியை உணர்ந்திருப்பார் எனவும் அவர் தெரிவித்தார்.

# சகீர்கானுக்குப் பதில் ஆர்.பி.சிங்




(புதுடில்லி)

இங்கிலாந்துடனான ஏனைய போட்டிகளுக்கு சகீர்கானுக்குப் பதிலாக ஆர்.பி.சிங் அணியில் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளார் என இந்திய கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சகீர்கானுக்கு தசைப்பிடிப்பு ஏற்பட்ட பகுதியில் மீண்டும் காயம் ஏற்பட்டுள்ளது. அத்துடன் வலது கணுக்காலிலும் தீவிர காயம் அடைந்துள்ளார். கணுக்கால் காயத்துக்கு அறுவைச் சிகிச்சை தேவைப்படுகிறது. அத்துடன் இரு காயங்களுக்கும் தொடர் சிகிச்சை அளிக்கப்பட வேண்டும். காயம் முழுமையாக குணமடைய குறைந்தபட்சம் 14 முதல் 16 வாரங்கள் பிடிக்கும். எனவே சகீர்கான் இங்கிலாந்துக்கு எதிரான எஞ்சிய டெஸ்ட் போட்டி மற்றும் ஒரு ருவென்ரி 20 போட்டி, ஒரு நாள் போட்டித் தொடரில் பங்கேற்க முடியாது. சகீர்கானுக்குப் பதிலாக இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் மற்றும் 20 ஓவர், ஒருநாள் போட்டித் தொடருக்கு வேகப்பந்து வீச்சாளர் ஆர்.பி.சிங் தேர்வுக் குழுவினரால் தேர்வு செய்யப்பட்டுள்ளார். அவர் விரைவில் இந்திய அணியினருடன் இணைவார் என இந்திய கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது. 25 வயதான ஆர்.பி.சிங் சர்வதேச போட்டியில் கடைசியாக 2009ஆம் ஆண்டு தென்னாபிரிக்காவில் நடந்த சம்பியன்ஸ் கோப்பை போட்டியில் பாகிஸ்தானுக்கு எதிரான ஆட்டத்தில் விளையாடினார். 2 ஆண்டுகளுக்கு பிறகு மீண்டும் அவருக்கு அணியில் வாய்ப்புக் கிடைத்துள்ளது.

# சகீர்கானின் இடத்தை நிரப்ப இளம் வீரர்களுக்கு வாய்ப்பு



(கொல்கத்தா)

இங்கிலாந்துக்கு எதிரான எஞ்சிய டெஸ்டில் சகீர்கான் விளையாடாதது இந்திய அணிக்கு பேரிழப்பு. இவர், சத்திர சிகிச்சை செய்து கொள்ள இருப்பதால், மீண்டும் சர்வதேச போட்டிகளில் காலடிவைக்க நீண்ட நாட்கள் தேவைப்படும். இதனால் இவரது இடத்தை நிரப்ப இளம் வீரர்களுக்கு நல்ல வாய்ப்புக் கிடைத்துள்ளது. இவ்வாறு இந்திய அணியின் முன்னாள் தலைவர் கங்குலி தெரிவித்துள்ளார்.

டெஸ்ட் தொடரில் இந்திய அணி 0-2 என பின்தங்கி உள்ள நிலையில் முன்னணி வீரர்களுக்கு ஏற்படும் காயம் பின்னடைவான விடயம். இருப்பினும் டெஸ்ட் தொடரை இந்திய அணி 2-2 என சமநிலை செய்யும் என எதிர்பார்க்கிறேன். கடந்த டெஸ்டில் செய்த தவறுகளைத் திருத்திக் கொள்ளும் பட்சத்தில், இங்கிலாந்து அணியை அதன் சொந்த மண்ணில் வீழ்த்தி எழுச்சி பெறலாம். நொட்டிங்காமில் நடந்த இரண்டாவது டெஸ்டில், இங்கிலாந்து வீரர் இயன் பெல்லை மீண்டும் துடுப்பாடச் செய்ய அழைத்ததன் மூலம், டோனி சிறந்த தலைவராக மட்டுமல்லாமல் நல்ல மனிதராகவும் ஜொலித்தார் எனவும் அவர் தெரிவித்தார்.

# இந்திய ரசிகர்களுடன் லண்டனில் மோதிய பிரவீண்



(லண்டன்)

இந்திய ரசிகர்களுடன் பிரவீண்குமார் மோதிக் கொண்ட சம்பவம், பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்திய வேகப்பந்துவீச்சாளர் பிரவீண் குமார் சர்ச்சையில் சிக்கியுள்ளார். சமீபத்திய நொர்தாம்டன்ஷயர் அணிக்கு எதிரான பயிற்சிப் போட்டி முடிந்து இந்திய வீரர்கள் பஸ்ஸில் ஏறியுள்ளனர். அப்போது அங்கு திரண்ட இந்திய வம்சாவளி ரசிகர்கள், வீரர்களை கிண்டல் செய்துள்ளனர். இதனால் ஆத்திரமடைந்த பிரவீண் குமார் பஸ்ஸில் இருந்து வெளியே பாய்ந்துள்ளார். கையில் துடுப்புடன் காணப்பட்ட இவரை, சுரேஷ் ரெய்னா சமாதானம் செய்துள்ளார். பின் தனது இருக்கையில் இருந்து எழுந்த முனாப் பட்டேல், பாதுகாவலர்களிடம் ரசிகர்களின் அவமரியாதையான செயல் குறித்து புகார் கூறியுள்ளார்.

இந்த நேரத்தில் மீண்டும் பஸ்ஸை விட்டு வெளியே வந்த பிரவீண் குமார் சம்பந்தப்பட்ட ரசிகருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளார். உடனே பாதுகாவலர்கள் தலையிட்டு பிரவீண் குமாரை சமாதானப்படுத்தியுள்ளனர். தொடர்ந்து இந்திய அணியின் பாதுகாப்புக் குழு முகாமையாளர் மற்றும் ரசிகர்கள் இடையே வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. பின் போதையில் இருந்த அந்த ரசிகர் பாதுகாவலர்களால் அப்புறப்படுத்தப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் குறித்து இன்னொரு விதமாகவும் கூறப்படுகிறது. பஸ்ஸில் ஏற முயன்ற போது, சம்பந்தப்பட்ட அந்த ரசிகர், இந்திய வீரர்களை போட்டோ எடுத்துள்ளார். அப்போது பிரவீண் குமார் தவறான சைகை காட்டியுள்ளார். இதனால் ரசிகர் மற்றும் பிரவீண் இடையே வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. ஒரு கட்டத்தில் பஸ்ஸை விட்டு இறங்கிய பிரவீண், அந்த ரசிகரின் கொலரைப் பிடித்து இழுத்து பரபரப்பு ஏற்படுத்தியதாகத் தெரிகிறது.

# இறந்தது சச்சினின் நாக்கு



(லண்டன்)

இங்கிலாந்தில் வடா பாவ், கார சட்னி இல்லாமல் நாக்கு செத்து விட்டதாக நட்சத்திர வீரர் சச்சின் டெண்டுல்கர் தெரிவித்தார்.

மகாராஷ்டிராவில் குறிப்பாக மும்பையில் வடா பாவ் பிரபலமான ஸ்நாக்ஸ். பிரட்டுக்கு நடுவில் வடையை வைத்து பச்சைமிளகாய், இஞ்சி, உருளைக்கிழங்குடன் இன்னும் சில மசாலா ஐயிட்டங்களைச் சேர்த்து சூடாக்கி காரசாரமாக கொடுப்பார்கள். இந்த வடா பாவ் என்றால் சச்சினுக்கு மிகவும் பிரியமாம்.

இது குறித்து, இங்கிலாந்தில் மாராட்டி தொலைக்காட்சி ஒன்றுக்கு அவர் அளித்த பேட்டியில், நானும் எனது மகன் அர்ஜூனும் மும்பையில் வடா பாவை அடிக்கடி சாப்பிடுவோம். வடா பாவை அடித்துக் கொள்ள வேறு எந்த ஸ்நாக்சும் கிடையாது. சட்னியுடன் சேர்த்து சாப்பிட்டால் காரமானசுவையே தனியாக இருக்கும். இங்கிலாந்தில் இதெல்லாம் கிடைக்காமல், நாக்கு செத்துப் போய் விட்டது. எப்போது வடா பாவை சாப்பிடுவோமோ என்ற ஆவலுடன் இருக்கிறேன் என்றார்.

# வெடிபொருட்கள் வைத்திருந்த மீனவர்கள் திருமலையில் கைது

(திருமலை)

வெடி பொருட்கள் வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் திருகோணமலை மூதூர் பிரதேசத்தைச் சேர்ந்த இரண்டு சந்தேக நபர்களை கைது செய்துள்ளதாகத் திருகோணமலை துறைமுகப் பொலிசார் தெரிவித்தனர்.

மீன்பிடியில் ஈடுபட்டிருந்த குறித்த மீனவர்களின் மீன்பிடிப்படகினை கடற்படையினர் சோதனையிட்ட போது, படகினுள் வெடிபொருட்கள் காண்டுபிடிக்கப்பட்டது. இதனையடுத்து குறித்த சந்தேக நபர்களைக்கைது செய்த கடற்படையினர் அவர்களை துறைமுகப் பொலிசாரிடம் ஒப்படைத்துள்ளதாகத் தெரிவித்தனர்.

இதன்போது, இவர்களிடமிருந்து அதி சக்தி வாய்ந்த ஜெலிக்னைட் குச்சிகள் - 09, டெட்டனேடர்கள் - 14, சார்ஜர்கள் - 02, படகு - 01, படகு இயந்திரம் - 01 என்பன கைப்பற்றப்பட்டுள்ளதாக துறைமுகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இருவரையும் திருகோணமலை நீதவான் நீதிமன்ற நீதிபதி யூ.எல்.ஏ. அஸ்ஹார் முன்னிலையில் ஆஜர்படுத்தியதையடுத்து அவர்கள் இருவரையும் எதிர்வரும் 16ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

# மரக்கடத்தலில் ஈடுபட்ட ஐவர் திருகோணமலையில் கைது



(திருகோணமலை)

திருகோணமலை மாவட்ட நிலாவெளி-மொறவெவ பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நெதுங்கேணி காட்டுப்பகுதியில் நீண்ட காலமாக மரக்கடத்தலில் ஈடுபட்டு வந்த ஐந்து பேரைக் கைதுசெய்துள்ளதாக உப்புவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்கள் திருகோணமலை நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர். வழக்கை விசாரித்த நீதிவான் யூ.எல்.ஏ. அஸ்ஹார், எதிர்வரும் 22ஆம் திகதிவரை குற்றவாளிகளை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.இம்மரக்கடத்தலுக்கு உயர் பதவி வகிக்கும் அதிகாரிகள் உதவியிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.இது தொடர்பான மேலதிக விசாரணைகளை உப்புவெளி பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.

# மீள்குடியேற்றம் முடிவு பெற்றதும் வடக்கு மாகாண சபைத் தேர்தல்

## - அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவிப்பு



(கொழும்பு)

வடக்கில் மீள்குடியேற்றம் முடிவு பெற்றதும் வடக்கு மாகாணசபைத் தேர்தல் நடத்தப்பட்டு அங்கு மாகாண சபை நிறுவப்படும். இது தொடர்பில் அரசாங்கம் தெளிவான நிலைப்பாட்டிலேயே இருக்கின்றது. வடக்கு, கிழக்கு மாகாணங்களை முன்னிறுத்திக் கொண்டுவரப்பட்ட மாகாண சபை முறைமை வடக்கில் இல்லாமல் இருப்பது ஏற்றுக்கொள்ளப்பட முடியாததாகும் என மீன்பிடிவள மற்றும் நீரியல் வள அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபைத் தேர்தல் விடயம் குறித்து விபரிக்கையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில், வடக்கில் மீள்குடியேற்றம் இன்னும் முழுமையாக நிறைவுபெறவில்லை.

வவுனியா நலன்புரி முகாம்களில் குறைந்த எண்ணிக்கையானோரே எஞ்சியுள்ளனர். அவ்வாறு எஞ்சியுள்ள அகதி மக்களையும் மிள்குடியேற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.அந்த வகையில் வடக்கில் மீள்குடியேற்றம் நிறைவடைந்ததும் வடக்கு மாகாண சபைத்தேர்தலை நடத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும்.

வடக்கில் மாகாணசபைத் தேர்தலை நடத்தி அம்மாகாண மக்கள் தமக்கு விருப்பமான பிரதிநிதிகளை ஜனநாயக ரீதியில் தெரிவு செய்யச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.மேலும் வடக்கு-கிழக்கு பிரச்சினையை முன்னிறுத்தியே அன்று மாகாண சபை முறைமை நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்டது.அந்த வகையில் வடக்கு கிழக்கு மாகாணங்களுக்காக அறிமுகப்படுத்தப்பட்ட மாகாண சபை முறைமையானது வடக்கில் இல்லாமல் இருப்பது நகைச்சுவையான விடயமாகும்.

அரசாங்கம் வடக்கில் தொடர்ந்து ஜனநாயக கட்டமைப்பை பலப்படுத்தும் வேலைத திட்டங்களை மேற்கொண்டு வருகின்றது. அண்மையில் மிகவும் ஜனநாயகமான முறையில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் வடக்கில் நடத்தப்பட்டது. வடக்கு மக்கள் தேவையான பிரதி நிதிகளை உள்ளூராட்சி மன்றங்களுக்குத் தெரிவுசெய்து கொண்டனர். வடக்கில் சுதந்திரமான முறையில் தேர்தல் நடந்தைமையும் அதில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு வெற்றி பெற்றமையும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த விடயங்களாகும்.

நாட்டின் ஏனைய மக்கள் அனுபவிக்கின்ற உரிமைகளை வடக்கு மக்களும் அனுபவிக்க வேண்டும். அதற்கான வேலைத்திட்டங்களையே அரசாங்கம் வடக்கில் மேற்கொண்டுவருகின்றது.வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் அரசாங்கம் மிகப்பெரிய அபிவிருத்தி வேலைத்திட்டங்களை மேற்கொண்டு வருகின்றமை அனைவருக்கும் தெரிந்த விடயமாகும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# அணுக்கதிர்வீச்சு தொடர்பாக கண்காணிப்பு நடவடிக்கைகள்

(கொழும்பு)

ஜப்பானில் ஏற்பட்ட பூகம்பத்தையடுத்து இடம்பெற்ற அணுஉலை வெடிப்புகள் காரணமாக வெளியாகும் கதிர்வீச்சு இலங்கை வான்பரப்பிலும் தாக்கமேற்படுத்தலாம் என்பதால் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. அதன் ஒரு கட்டமாக இலங்கை வான்பரப்பில் அணுக்கதிரவீச்சுக் குறித்த கண்காணிப்புக்களை மேற்கொள்ள இலங்கை அணு சக்தி முகவரகம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக அறிவித்துள்ளது. இலங்கையின் வான்பரப்பில் கதிர்வீச்சுப் பொருட்கள் ஏதும் தென்படுகின்றதா என்று கண்காணிப்பதே அதன் நோக்கம் என்று மேலதிக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜப்பானிய அணு உலைக் கசிவு காரணமாக இலங்கைக்குப் பாதிப்புகள் இல்லையென்ற போதிலும் இது ஒரு முன்னெச்சரிக்கை நடவடிக்கை மட்டுமே என்று இலங்கை அணுசக்தி முகவரகத்தின் தலைவர் கலாநிதி விமலதர்ம அபேவிக்கிரம குறிப்பிட்டுள்ளார்

# கிளிநொச்சி இரணைமடுவிலிருந்து வர்த்தகவிமான சேவை ஆரம்பிக்கப்படும்


(கொழும்பு)

கிளிநொச்சி,இரணைமடு ஆகிய பிரதேசத்திலிருந்து வர்த்தக விமான சேவைகள் ஆரம்பிக்கப்பட உள்ளதாக விமானப்படையினர் அறிவித்துள்ளனர். இலங்கை விமானப்படையின் வர்த்தகப்பிரிவான ஹெலிடுவர்சினால் இந்த விமான சேவைகள் ஆரம்பிக்கப்படவுள்ளது.

ஏற்கனவே கிளிநொச்சிக்கான விமான சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக விமானப்படைப் பேச்சாளர் குருப் கப்டன் அன்டி விஜேசூரிய தெரிவித்துள்ளார். பெல் 212, 412 மற்றும் வை12 ஆகிய விமானங்கள் உள்ளூர் விமான சேவைகளுக்காகப் பயன்படுத்தப்பட உள்ளன. விடுதலைப் புலிகளின் வான்படையினரால் பயன்படுத்தப்பட்ட விமான ஓடுதளங்கள் திருத்தி அமைக்கப்பட்டு அந்தப் பிரதேசங்களில் விமான சேவைகள் நடத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது

# இலங்கைப் பிரச்சினையைத் தீர்க்க உலக நாடுகள் உத்தரவிட முடியாது

## ஜனாதிபதியை அறிவிக்குமாறு கோருகிறது தேசப்பற்று இயக்கம்



(கொழும்பு)

நாட்டின் பிரச்சினைகளை நாம் தீர்த்துக் கொள்வோம். இந்தியாவோ, ஐரோப்பிய நாடுகளோ எமக்கு உத்தரவிடமுடியாதென இனிமேலாவது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பகிரங்கமாக அறிவிக்க வேண்டுமென்று தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் குணதாச அமரசேகர தெரிவித்தார்.

அரசாங்கத்துடனான பேச்சுவார்த்தைகள் தொடர்பாக தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் நிபந்தனை விதித்துள்ளமை தொடர்பில் தெளிவுபடுத்துகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நிபந்தனை விதித்ததன் பின்னணியில் இந்தியாவும் ஐரோப்பிய நாடுகளுமே உள்ளன. அவர்களின் நிகழ்ச்சி நிரலுக்கமையவே கூட்டமைப்பு செயல்படுகின்றது.

அரசியலமைப்பிலிருந்து 12ஆவது திருத்தம் நீக்கப்பட வேண்டும் புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பட வேண்டும்.அதை விடுத்து கூட்டமைப்பின் தமிழ் பிரிவினைவாத அரசியல் நிகழ்ச்சி நிரலுக்கு இடமளிக்க முடியாது.இலங்கையில் பிரச்சினையை எமது நாட்டுக்கு உகந்த விதத்தில் நாம் தீர்த்துக் கொள்வோம்.

இது தொடர்பில்இந்திய ஐரோப்பிய நாடுகளோ எமக்கு உத்தரவிட வேண்டிய அவசியமில்லையென ஜனாதிபதி பகிரங்கமாக அறிவிக்க வேண்டும் எமது நாட்டின் மீது பொருளாதாரத்தடையை இந்தியா விதித்தால் எமக்கு பின்னடைவு இல்லை நஷ்டமும் இல்லை.

ஆனால் அதிகமான வர்த்தக உடன்படிக்கைகளை இலங்கையுடன் இந்தியா கைச்சாத்திட்டுள்ளது. இதன் மூலம் இந்தியாவுக்கே அதிக பொருளாதார நன்மைகள் கிடைக்கின்றன. அவர்களது வருமானமும் அதிகரித்தது.இவ்வாறானதோர் சூழ்நிலையில் எமது நாட்டுக்கு எதிராகப் பொருளாதாரத் தடை விதிக்கப்படுமானால் நஷ்டமடையப் போவது இந்தியாவே என அவர் குறிப்பிட்டார்.

# தொலைக்காட்சி நிறுவனத்துக்கு எதிராக அவுஸ்ரேலியாவில் இலங்கையர் ஆர்ப்பாட்டம்



(சிட்னி)

அவுஸ்ரேலியாவில் வாழ்கின்ற இலங்கையர்களில் ஒரு தொகுதியினர் அவுஸ்ரேலிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபனச் தொலைக்காட்சி வலையமைப்புக்கு எதிராக ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்தியுள்ளனர். அவுஸ்ரேலிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தொலைக்காட்சி வலையமைப்பின் தலைமை அலுவலகத்துக்கு முன்பாகத் திரண்டு நின்று எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

பிரித்தானியாவின் சனல் 4 தொலைக்காட்சியின் இலங்கையின் கொலைக்களம் என்ற போர்க் குற்றச்சாட்டு வீடியோவை அவுஸ்ரேலிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தொலைக்காட்சி வலையமைப்பு ஒளிபரப்பியமை மூலம் பக்கச் சார்பாக செயற்பட்டு உள்ளது என்று குற்றம் சாட்டியே இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. ஆயினும் இக்குற்றச்சாட்டை அவுஸ்ரேலிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தொலைக்காட்சி வலையமைப்பு நிராகரித்துள்ளது.

# நெடுந்தீவு மக்களின் அடிப்படைத் தேவைகளை விரைவில் பூர்த்தி செய்வதாக உறுதியளிப்பு

(நெடுந்தீவு)

நெடுந்தீவு மக்களுக்கான குடிநீர், வீட்டுத்திட்டம், மருத்துவம் போக்குவரத்து உள்ளிட்ட அடிப்படைத் தேவைகள் விரைவில் பூர்த்தி செய்யப்படுமென வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

நெடுந்தீவுப் பகுதிக்கு அண்மையில் விஜயம் மேற்கொண்ட ஆளுநர் அப்பகுதியின் துறைசார்ந்த அதிகாரிகள் மற்றும் மக்களுடன் கலந்துரையாடி மக்களது தேவைகள் கோரிக்கைகள் தொடர்பில் கேட்டறிந்து கொண்டார்.

இதன்போது மக்கள் தமக்கான குடி நீர், வீட்டுத்திட்டம், போக்குவரத்து மற்றும் அப்பகுதியிலுள்ள மருத்துவமனையில் நிரந்தர மருத்துவர் இல்லாமை ஆகியவற்றைச் சுட்டிக்காட்டினர்.



முதலில் இம்மக்களுக்கான 300 வீடுகளை அமைத்து வழங்குவதற்கான உறுதிமொழியை ஆளுநர் வழங்கியதுடன் அதற்கான பணிகளை உடனடியாக ஆரம்பிக்குமாறும் துறைசார்ந்த அதிகாரிகளிடம் பணிப்புரை விடுத்துள்ளார்.

# விபத்தினால் ஏற்படும் உயிரிழப்பை கட்டுப்படுத்துவதற்கு தேசிய கொள்கை

(கொழும்பு)

திடீர் விபத்துக்களால் ஏற்படுகின்ற மரணங்கள் மற்றும் காயமடைதல்கள் நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்வதாக சுகாதார அமைசசு தகவல் வெளியிட்டுள்ளது.

அதனைக் கட்டுப்படுத்துவதற்கு தேசிய கொள்கையொன்றை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

மருத்துவமனைகளில் வருடாந்தம் இடம்பெறுகின்ற மரணங்களில் 10 இற்கும் அதிகமானவை திடீர் விபத்துக்களினால் ஏற்படுபவை என புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

அதேவேளை, வீடுகளில் இடம்பெறும் திடீர் விபத்துகள் அதிகரித்துள்ளதாகக் சுட்டிக்காட்டியுள்ள சுகாதார அமைச்சு அவை தொடரபான தரவுகள் முறையாக கிடைப்பதில்லை எனத் தெரிவித்துள்ளது. இதன்காரணமாக இலங்கைப் பொருளாதாரத்தில் குறிப்பிடத்தக்க நட்டம் ஏற்படுவதாக அமைச்சின் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

இதனை முன்னிட்டு அந்த நிலைமையை கட்டுப்படுத்திக் கொள்ளும் வகையில், காயமடைதல்களை தவிர்த்தல் மற்றும் முகாமைத்துவம் செய்வதற்கு தேசியக் கொள்கையொன்றை தயாரிப்பது அவசியம் என சுகாதார அமைச்சு வலியுறுத்தியுள்ளது.

## அரிசி உற்பத்திக்கென 40 ஆயிரம் தொன் நெல்

(கொழும்பு)

40 ஆயிரம் மெட்ரிக் தொன் நெல்லைப் பயன்படுத்தி அரிசி உற்பத்தியை மேற்கொள்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதனைத் தவிர உணவுத் திணைக்களத்தின் களஞ்சியசாலைகளில் உள்ள 20 ஆயிரம் தொன் அரிசியை சந்தைக்கு விநியோகிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

அரிசியை விற்பனை செய்வதற்கான விலை இதுவரை நிர்ணயிக்கப்படவில்லை என அமைச்சின் செயலாளர் சுனில் சிறிசேன குறியுள்ளார்.

# சவுதியில் மரணதண்டனைக் கைதியான ரிஸானாவை விடுதலை செய்யும் வாய்ப்பு

(கொழும்பு)

நான்கு மாதக் குழந்தை ஒன்றின் மரணம் தொடர்பில் சவுதியில் மரணதண்டனைக் கைதியாக இருக்கும் திருகோணமலை மூதூர் பெண்ணான ரிஸானா நபீக், பொதுமன்னிப்பு கிடைக்கப்பெற்று விரைவில் நாடு திரும்புவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கையின் அமைச்சு மட்டக்குழு ஒன்று இதற்கான உத்தியோகபூர்வ விடயங்களுக்காக சவுதிக்குச் சென்றிருப்பதாக கொழும்பு ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது

2007 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 16 ஆம் திகதி முதல் ரிஸானா நபீக், சவுதியில் மரணதண்டனைக் கைதியாக இருந்து வருகிறார். சவுதியில் உள்ள சட்டத்தின் படி மரணதண்டனை விதிக்கப்பட்ட ஒருவருக்கு அந்த நாட்டின் மன்னர் பொது மன்னிப்பு வழங்கமுடியாது. அவ்வாறான ஒரு அதிகாரம் இறந்துப்போன குழந்தையின் பெற்றோருக்கே உள்ளது. அத்துடன் இரத்த நிதியும் அவர்களுக்கு செலுத்தப்படவேண்டும்.

இந்த நிலையில் ரிஸானா நபீக் புட்டிப்பால் பருக்கிக்கொண்டிருந்த வேளையில் இறந்து போனதாகக் கூறப்படும் நான்கு மாதக் குழந்தையின் பெற்றோர் ரிஸானாவுக்கு பொதுமன்னிப்பை வழங்க இணங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படடுள்ளது.

இதனையடுத்து குறித்த உத்தியோகபூர்வ நிகழ்வுகளில் பங்கேற்பதற்காக இலங்கையின் வெளிநாட்டு வேலை வாய்ப்புகள் துறை அமைச்சர் டிலான் பெரேரா, மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்புகள் பணியகத் தலைவர் கிங்ஸ்லி ரணவக்க ஆகியோர் கடந்த சனிக்கிழமை சவுதிக்குப் புறப்பட்டுச் சென்றுள்ளனர்.

1988 ஆம் ஆண்டு பிறந்த ரிஸானா, வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கான வயது தகுதியை பெற்றிருக்காத போதும், முகவரால் 1982 ஆம் ஆண்டு பிறந்தவராக காட்டப்பட்டு 2005 ஆம் ஆண்டு சவுதிக்கு அனுப்பிவைக்கப்பட்டார்.

# வேட்பாளர் பட்டியலைத் தயாரிக்க குழுவை நியமித்துள்ளது ஜே.வி.பி

(கொழும்பு)



எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் ஜே.வி.பி.யின் வேட்பாளர் பட்டியல்களைத் தயாரிப்பதற்காக அதன் பிரசார செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விஜித ஹேரத் தலைமையில் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இக்குழுவில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான லால்காந்த, ரத்னாயக்க ஆகியோரும் உள்ளடக்கப் பட்டுள்ளனர். கலைக்கப்பட்ட 23 உள்ளூராட்சி சபைகளுக்கான ஜே.பி.யின் வேட்பாளர் பட்டியல் தயாரிக்கும் பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அக்கட்சி அறிவித்துள்ளது.

ஜனநாயக தேசிய முன்னனியின் தலைவரான சரத் பொன்சேகாவின் துணைவியாரான அனோமா பொன்சேகாவை கொழும்பு மாநகர சபையின் ஜே.வி.பி.யின் மேயர் வேட்பாளராக முன்னிறுத்த கவனம் செலுத்தப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# காணி மற்றும் காவல்துறை அதிகாரங்களை மாகாண சபைகளுக்கு வழங்க வேண்டும்

## அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் வலியுறுத்து

(கொழும்பு)

மாகாண சபைகளுக்கு காணி மற்றும் காவல்துறை அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் என அமைச்சர் ரிசாட் பதியுதீன் தலைமையிலான அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி வலியுறுத்தியுள்ளது.

காணி மற்றும் காவல்துறை அதிகாரங்களை மாகாண மற்றும் மத்திய அரசாங்கங்கள் பகிர்ந்து கொள்வதனையே தமது கட்சி விரும்புவதாக கட்சியின் பொதுச் செயலாளர் வை.எம்.ஹமீட் தெரிவித்துள்ளார்.

தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் நோக்கில் அமைக்கப்படவுள்ள நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் இந்த யோசனைகளை முன்வைக்கத் திட்டமிட்டுள்ளது.

உத்தேச நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் மூலம் முஸ்லிம் மக்களின் பிரதிநிதித்துவம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். வடக்கு, கிழக்கு மாகாணங்கள் மீள இணைக்கப்பட்டால் தமிழ் மக்களைப் போன்றே முஸ்லிம்களுக்கும் உரிமைகள் வழங்கப்பட வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஜனநாயக முன்னணி தனித்துப் போட்டி

(கொழும்பு)

மனோ கணேசன் தலைமையிலான ஜனநாயக மக்கள் முன்னணி எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தனித்துப் போட்டியிடுவதற்குத் தீர்மானித்துள்ளது.

கொழும்பு, தெஹிவளை-கல்கிஸ, மொரட்டுவ, நீர்கொழும்பு ஆகிய மாநகரசபைகளிலும, கொலன்னாவ மாநகரசபைக்காகவும் வேட்பாளர்கள் நிறுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

மிக நீண்ட காலமாக ஜனநாயக மக்கள் முன்னணி, ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து தேர்தல்களில் போட்டியிட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்தத் தேர்தலில் அநேகமாக தமது கட்சி தனித்துப் போட்டியிடும் என கட்சியின் பொதுச் செயலாளர் நல்லையா குமரகுருபரன் தெரிவித்துள்ளார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் சரத் பொன்சேகாவிற்கு ஆதரவளித்ததுடன், பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து போட்டியிட்டிருந்தது.

எனினும் தேர்தல் முடிவடைந்த பின்னர் இந்தக் கட்சியின் தலைவருக்கு ஐக்கிய தேசியக் கட்சி தேசியப் பட்டியல் மூலமாக நாடாளுமன்ற உறுபபினர் பதவி வழங்காததையடுத்து இரு கட்சிகளுக்கும் இடையே நிலவி வந்த சுமுக நிலை முறிவடைந்தது.

நட்புறவான கட்சிகளுடன் இணைந்து போட்டியிடுவது குறிததும் கவனம் செலுத்தப்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஏணிச் சின்னத்தில் போட்டியிடுமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.



இந்தத் தேர்தல்களின் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எமககு ஆதரவளிக்கும் என நம்புகின்றோம்.

வடக்கில் நடைபெற்ற தேர்தல்களின் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு ஆதரவாக, ஜனநாயக மக்கள் முன்னணி பிரசாரங்களை செயதிருந்தது.

கொழும்பு மாநகரசபையின் மேயர் பதவிக்காக கட்சியின் தலைவர் மனோகணேசன் போடடியிடவுள்ளனர் என்றார்.

2006ஆம் ஆண்டு நடைபெற்ற உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து போட்டியிட்ட ஜனநாயக மக்கள் முன்னணி நான்கு ஆசனங்களை வென்றிருந்தமை குறிப்பிடத தக்கது.

## பயிற்சி நெறி

(யாழ்ப்பாணம்)

பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்திச் அமைச்சின் ஏற்பாட்டில் கைத்தொழில் அபிவிருத்திச் சபையினால் துணிகளிலிருந்து பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திப் பொருட்கள் உருவாக்கல் பயிற்சி யாழ்ப்பாணத்தில் நடத்தப்படவுள்ளது.

இப்பயிற்சிநெறி நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இப்பயிற்சி நெறிக்குப் பதிவினை மேற்கொண்டவர்கள் தவறாது கலந்துகொள்ளுமாறு யாழ்.கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் பிரதி இணைப்பாளர் அறிவித்துள்ளார்.

# இலங்கையின் வான்பரப்புக்குள் நுழைந்த அமெரிக்க விமானங்கள் குறித்து விசாரணை

## பிரதி வெளிவிவகார அமைச்சர் தெரிவிப்பு



(கொழும்பு)

இலங்கை வான் பரப்பிற்குள் நுழைந்த அமெரிக்க விமானங்கள் தொடர்பில் விசாரணைகள் பாதுகாப்பு அமைச்சின் ஒத்துழைப்புடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகப் பிரதி வெளிவிவகார அமைச்சர் நியோமல் பெரேரா குறிப்பிட்டுள்ளார்.

சில தினங்களுக்கு முன்னர் அமெரிக்க விமானமொன்று இலங்கை வான் பரபபிற்குள் நுழைந்ததை இலங்கை விமானப்படை உறுதிப்படுத்தியது. சிவில் விமான சேவைகளுக்குச் சொந்தமான பீதுருதாலகல மத்திய நிலையத்திலிருந்து 380 கிலோமீற்றர் தொலைவிற்குள் இந்த விமானம் நுழைந்துள்ளமை கண்காணிக்கப்பட்டதாக விமானப்படைப் பேச்சாளர் குரூப் கெப்டன் அன்றூ விஜேசூரிய குறிப்பிட்டார். எவ்வாறாயினும் இலங்கை வான்பரப்பிலிருந்து உடனடியாக வெளியேறுமாறு அறிவிக்கப்பட்டதையடுத்து இலங்கையின் வான் பரப்பிலிருந்து அந்த விமானம் வெளியேறியதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## ஒரு இலட்சம் சிமெந்து மூடைகள் துறைமுகத்தில் தேக்கம்

(கொழும்பு)

பாகிஸ்தானிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட ஒரு இலட்சம் சிமெந்து மூடைகள் வர்த்தக சந்தைக்கு விநியோகிக்கப்படாமல், கொழும்புத் துறைமுகத்தில் தேக்கி வைக்கப்பட்டுள்ளதாகத் தேசிய நுகர்வோர் சபை தெரிவித்துள்ளது.

குறித்த சிமெந்து மூடைகளுக்கான தரச் சான்றிதழ் கிடைக்காமை இதற்கான காரணமென சபையின் தலைவர் பந்து ரணவக்க தெரிவித்தார். கடந்த நான்காம் திகதி இந்த சிமெந்து மூடைகள் நாட்டிற்குக் கொண்டு வரப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த விடயம் தொடர்பில் இலங்கை தர நிர்ணய சபை தெரிவிக்கையில் சிமெந்தின் தரச் சான்றிதழை வழங்குவதில் தேவையற்ற தாமதம் நிலவவில்லை எனக் குறிப்பிட்டது.

## வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சிறைக்கைதி மாரடைப்பால் மரணம்

(திருகோணமலை)

திருகோணமலை சிறைச்சாலையின் விளக்கமறியல் கைதியொருவர் திருமலை பொது வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு மரணமடைந்துள்ளதாகத் துறைமுகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த மாதம் 19 ஆம் திகதி சேருநுவர பொலிஸ் பிரிவிற்குட்பட்ட செல்வா நகர் சின்ன விகாரைப் பகுதியில் புதையல் தோண்டிய குற்றச்சாட்டின் பேரில் பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட 54 வயதுடைய நெய்னா முகம்மது நஜிம் என்ற கைதியே மரணமானதாகத் தெரியவருகிறது. குறித்த கைதி புதையல் தோண்டிக் கொண்டிருந்த போது கைது செய்யப்பட்டு மூதூர் நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தியபோது, அவரை எதிர்வரும் 8 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டிருந்தார்.

திருகோணமலை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் இவருக்கு திடீரென மாரடைப்பு ஏற்படவே, சிறைச்சாலை அதிகாரிகளால் அவர் திருகோணமலை வைத்தியசாலைக்குக் கொண்டு வரப்பட்டார். அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டும் சிகிச்சை பயனளிக்காத நிலையில் அவர் உயிரிழந்துள்ளார்.

திருகோணமலை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ள இவரது சடலததை நீதிவான் நீதிமன்ற நீதிபதி யூ.எல்.ஏ. அஸ்ஹர் பார்வையிட்ட பின்னர், சட்ட வைத்திய அதிகாரியின் வைத்தியப் பரிசோதனையின் பின்னர் குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப்படவுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

## அமுலிலுள்ள அவரச காலச்சட்டம் அடுத்த மாதம் நீக்கப்படும்?

(கொழும்பு)

அவசரகாலச்சட்டத்தை அடுத்த மாதத்தில் இருந்து முற்றாக நீக்குவதற்கு அரசாங்கம் முடிவு செய்துள்ளது. அவசரகாலச்சட்டத்தை உடனடியாக நீக்க வேண்டும் என்று இந்தியா மீண்டும் வலியுறுத்தியுள்ளதை அடுத்தே, இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்தவாரம் இந்திய நாடாளுமன்றத்தில் அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்த இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஸ்ணா, உடனடியாக அவசரகாலச்சட்டத்தை நீக்க வேண்டும் என்றும், மனிதஉரிமை மீறல் குற்றச்சாட்டுகள் குறித்து விசாரிக்க வேண்டும் என்றும், போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் இயல்பு நிலையை உருவாக்க வேண்டும் என்றும் இலங்கை வெளிவிவகார அமைச்சரிடம் வலியுறுத்தியுள்ளதாகக் குறிப்பிட்டிருந்தார்.

இந்தியா இதனை மீளவும் வலியுறுத்தியுள்ள நிலையிலேயே அரசாங்கம் அவசரகாலச்சட்டத்தை அடுத்தமாதம் நீக்குவதற்கு முடிவு செய்துள்ளது. இந்த மாதம் அவசரகாலச்சட்டம் நடைமுறையில் இருக்கும். அதனை நீடிப்பதற்கான பிரேரணை நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

பெரும்பாலும் அடுத்தமாதம் அவசரகாலச்சட்டம் நீடிக்கப்படாது. 2005 ஆம் ஆண்டு முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் படுகொலை செய்யப்பட்டதை அடுத்து அப்போதைய ஜனாதிபதியாக இருந்த சந்திரிகா குமாரதுங்க அவசரகாலச் சட்டத்தை நடைமுறைப்படுத்தினார். அதன் பின்னர் அவசரகாலச்சட்டம் தொடர்ச்சியாக நடைமுறையில் இருந்து வருகிறமை குறிப்பிடத்தக்கது.

## விற்பனை செய்யும் நிலையில் ஐ.தே.க.என்ற பழைய வாகனம்

### பிரதியமைச்சர் ரோஹித்த அபேகுணவர்த்தன கிண்டல்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி தற்போது பகுதி பகுதிளாக பிளவுபட்டுள்ளதாக, துறைமுக மற்றும் பெருந்தெருக்கள் பிரதியமைச்சர் ரோஹித்த அபேகுணவர்தன தெரிவித்துள்ளார். களுத்துறை தெற்கில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகம் அமைந்துள்ள பகுதியில் அமைந்துள்ள வீதிகளை விரைவில் புனரமைக்க உள்ளதாக இதன்போது அவர் குறிப்பிட்டார். வாகனங்களில் திருத்தியமைக்கக் கூடிய, திருத்தியமைக்க முடியாதவை என இரு வகைகள் இருப்பதாகவும். இதில் திருத்த முடியாத விற்பனை செய்யும் தரத்திலுள்ள வாகனமே ஐக்கிய தேசிய கட்சி எனவும் குறிப்பிட்டுள்ளார். இதனைக் கொள்வனவு செய்ய ஒரு புறத்தில் சஜித் பிரேமதாஸவும், மறுபுறத்தில் கருஜயசூரியவும் காத்திருப்பதாகவும், அவற்றை எவ்வாறு பங்கிடுவது என்ற பிரச்சினையை ரணில் விக்கிரமசிங்க எதிர்நோக்கியுள்ள தாகவும் பிரதியமைச்சர் குறிப்பிட்டார்.

## கடற்கரைப் பிரதேசங்களில் வசிக்கின்ற மீனவக் குடும்பங்களை வெளியேற்ற முயற்சி

### குற்றஞ்சாட்டுகின்றது ஐ.தே.கட்சி

(கொழும்பு)

வடகொழும்பு மீனவர் சமூகத்தை அவர்களது வசிப்பிடங்களிலிருந்து வெளியேற்றி அக்காணிகளை வெளிநாட்டுக் கப் பல் கம்பனிகளுக்கு விற்பனை செயய அரசாங்கம் முயற்சிகளை முன்னெடுத்து வருவதாக ஐக்கிய தேசியக் கட்சி குற்றஞ் சாட்டியுள்ளது.

மீனவக் குடும்பங்ளை கடற்கரைப் பிரதேசங்களிலிருந்து வெளியேற்றி அவிசாவளையில் குடியமர்த்த நடவடிக்கைகள் அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படுவதாக ஐக்கிய தேசியக்கட்சியின் வட கொழும்பு முகாமையாளரும், முன்னாள் மாநகர சபை உறுப்பினருமான மகேந்திர டி.சில்வா தெரிவித்தார்.

அவர் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்-

தமது சொந்த இடங்களை விட்டு அவிசாவளைக்கு அம்மக்கள் சென்று தமது ஜீவனோபாயத்தை எவ்வாறு நடத்த முடியும் இதனால் இவர்களது வாழ்வாதார உரிமை பறிக்கப்படுகிறது. இம்மக்கள் தாமாக சுயவிருப்பின் பேரில் வெளியேற விருபபம் தெரிவித்து கையெழுத்து மகஜரொன்றை கையளிததுள்ளதாக அரசதரப்பு எம்.பி. ஒருவர் தெரிவித்துள்ளார். கர்தினால் ரஞ்சித் மல்கம் ஆண்டகைக்கும் இது தொடர்பில் அறிவித்துள்ளதாக அந்த எம்.பி. தெரிவித்தார். இதை எதிர்த்து அம்மக்களின் கையொப்பங்கள் இடப்பட்ட மகஜரொன்றையும் பெற்று அதனை கர்தினாலிடம் வழங்க நடவடிக்கை எடுத்துள்ளோம். இம மக்களை வெளியேற்றி இப் பகுதிகளை வெளிநாட்டு கப்பல் கம்பனிகளுக்கு விற்பனை செய்ய அரசு திட்டமிட்டுள்ளது.

கொட்டாஞ்சேனை புளுமெண்டால் வீதி தொடர்மாடித் திட்டத்தில் வாழும் மக்களையும் அப்புறப்படுத்தும் முயற்சி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இத் தொடர்மாடித் திட்டம் அரசாங்கத்தால் சட்டபூர்வமாக நிர்மாணிக்கப்பட்டு மக்களுக்கு வழங்கபபட்டது இங்கு வாழும் மக்களை வெளியேற்ற முனைவது சட்ட விரோதமான செயலாகும். கொழும்பு நகரில் வாழும் மக்களை வெளியேற்றி அக்காணிகளை வெளிநாட்டுக் கப்பல் கம்பனிகளுக்கும், கொள்கலன் தரிப்பதற்கும் வழங்கப்படவுள்ளதாகத் தகவல்கள் கிடைத்துள்ளன. இதற்கு இடமளிக்க முடியாது கொழும்பு மாநகர சபையின் ஆட்சியதிகாரத்தை நாம் கைப்பற்றி கொழும்பு வாழ் மக்களின் வசிப்பிடங்களை பாதுகாக்க ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுககப்படும் என்றார்.

## புலி உறுப்பினர் என்ற சந்தேகத்தின் பேரில் கைதானவர் நான்கு வருடங்களின் பின்னர் விடுதலை செய்யப்பட்டார்

(கொழும்பு)

விடுதலைப்புலி உறுப்பினர் என்ற சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டு கடந்த நான்கு வருடங்களாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஒருவரை மட்டக்களப்பு மேல் நீதிமன்றம் விடுதலை செய்துள்ளது.

1998 ஆம் ஆண்டு காலப் பகுதியில் விடுதலைப்புலிகளிடம் ஆயுதப் பயிற்சி பெற்றார் எனக் குற்றம் சாட்டப்பட்டு தடுத்துவைக்கப்பட்டு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்த திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்தவரையே மட்டக்களப்பு மேல் நீதிமன்றம் விடுதலைசெய்தது.

2007 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டு விடுதலைப்புலிகளிடம் ஆயுதப்பயிற்சி பெற்றார் என்று குற்றஞ்சாட்டப்பட்டு தடுத்துவைக்கப்பட்டிருந்த ஈச்சிலம்பற்றைச் சேர்ந்த ராஜேந்திரம் சிறிகந்தராசாவினால் வழங்கப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்கு மூலம், குறித்த எதிரியினால் சுயமாக வழங்கப்பட்டதல்ல என நிராகரித்த மட்டக்களப்பு மேல் நீதிமன்ற நீதிபதி திருமதி கனகா சிவபாதசுந்தரம் எதிரியை விடுதலை செய்துள்ளார்.

மட்டக்களப்பு மேல் நீதிமன்றில் இவருக்கெதிரான குற்றச்சாட்டை நிரூபிப்பதற்கு சட்டமா அதிபரினால் மட்டக்களப்பின் முன்னாள் உதவிப் பொலிஸ் அத்தியட்சகரான எரமுதுகொல்ல என்பவருக்கு எதிரி வழங்கியதாகக் கூறப்படுகின்ற குற்ற ஒப்புதல் வாக்கு மூலம் குற்றச்சாட்டின் சான்றுப் பொருளாக முன்வைக்கப்பட்டிருந்தது.

குறித்த வழக்கு கடந்த முதலாம் திகதி மட்டக்களப்பு மேல் நீதிமன்றில் எடுக்கப்பட்டபோது குறித்த குற்ற ஒப்புதல் வாக்கு மூலம் குறித்த எதிரியினால் சுயமாக வழங்கப்பட்டதா அல்லது தன்னிச்சையாக வழங்கப்பட்டதா என அறியும் விசாரணையின் பின்னர் குறித்த ஒப்புதல் வாக்கு மூலம் எதிரியினால் சுயமாக வழங்கப்படவில்லை எனக் குறிப்பிட்ட மேல்நீதிமன்ற நீதிபதி திருமதி கனகா சிவபாதசுந்தரம், குறித்த குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தை சாட்சியமாக ஏற்றுக்கொள்ள முடியாது என நிராகரித்து எதிரியை விடுதலை செய்துள்ளார்.

குறித்த எதிரியின் சார்பில் சட்டத்தரணி செல்வி முத்துராஜா கிருத்திகா ஆஜராகி வாதப்பிரதி வாதங்களை முன்வைத்தார்.

## மதுவரி அதிகாரிகள் எனக் கூறி விடுதி முகாமையாளரிடம் கொள்ளை

மதுவரித் திணைக்கள அதிகாரிகள் என தன்மை அறிமுகப்படுத்திக் கொண்டு பொலநறுவை கரிதலைப் பகுதியிலமைந்துள்ள தனியார் விடுதி முகாமையாளரை தனியாக அழைத்துச் சென்று அவர் அணிந்திருந்த தங்க நகைகளைக் குறிப்பிட்ட கொள்ளைக் கும்பலொன்று அபகரித்துச் சென்றுள்ளது.

நவீன ரக புதிய காரொன்றில் வந்திறங்கிய நான்கு பேர் கொண்ட கும்பல் தாம் மதுவரித் திணைக்கள அதிகாரிகள் என தம்மை அறிமுகப்படுத்திக் கொண்டு குறித்த தனியார் விடுதியைப் பரிசோதித்துள்ளதுடன் விடுதி உரிமையாளருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அச்சமூட்டியுள்ளனர். இதற்கு அஞ்சிய விடுதி முகாமையாளர் இக்கும்பலிடம் சுமுகமாக இதனைத் தீர்த்துக் கொள்ள முற்பட்டுள்ளார். இதனையடுத்து முகாமையாளரை ஏற்றிச் சென்று கிரிதலை குளப்பகுதியில் வைத்து அவர் அணிந்திருந்த தங்கச் சங்கிலி என்பவற்றை அபகரித்துக் கொண்டு குழுவினர் தப்பிச் சென்றுள்ளனர். இச்சம்பவம் தொடர்பாக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருவதுடன் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கும் முயற்சியிலும் ஈடுபட்டு வருகின்றனர்.



## மாங்காயில் மரியாள்

அமெரிக்காவின் அரிசோனா மாநிலத்தில் உலர்ந்த மாங்காய்த் துண்டு ஒன்றில் தோன்றி இருக்கின்றார் அன்னை மரியாள். இளைஞன் ஒருவன் மாங்காய்த்துண்டை உண்கின்றமைக்கு தயாரானபோது இவ் அதிசயத்தைக் கண்ணுற்றார். இதையடுத்து இம்மாங்காய்த் துண்டை உண்பது இல்லையென அவர் முடிவெடுத்துள்ளார்


## பத்து வயது மொடல் அழகி



10 வயது நிரம்பிய ஒரு பருவ மங்கையை மொடல் அழகியாக பார்த்திருக்கிறீர்களா? ஆம் உலகின் முதன் முதலாக 10 வயது சிறுமி ஒருத்தி மொடல் அழகியாகப் பிரபல சஞ்சிகை ஒன்றின் மூலம் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

பிரபல sexy model சஞ்சிகையான vogue இல் தான் முதன்முறையாக இடம்பெற்றுள்ளார் இந்த பத்தே வயதான சிறுமி. இதன் மூலம் உலகின் மிகவும் சிறிய Sexy Model எனும் சிறப்பைப் பெற்றுள்ளார். தைலானி லீனா-ரோஸ் எனும் பிரான்ஸ் நாட்டு சிறுமியே இவ்வாறு பிரபலமானவர் ஆவார். இவர் பிரான்ஸின் முன்னாள் நட்சத்திர கல்பந்தாட்ட வீரர் பற்றிக்கின் மகள் ஆவார். இவருடைய தாயும் ஒரு ஆடை வடிவமைப்பாளராவார். இவருடைய இந்த மொடல் உடை பார்ப்பவர்களை ஒரு சிறுமி என்பதை விட இளம் அழகியைப்போலவே காட்சியளிக்கிறது. மிகவும் கவர்ச்சியாகவும் இருப்பதாக பலர் கருத்து தெரிவித்துள்ளனர்.

## முன்னேற்றம் ஏற்பட



பரபரப்பான வாழ்க்கை முறையில் உள்ளவர்களுக்கு முடிவு எடுப்பதில் நல்ல முன்னேற்றம் கிடைக்கும் என ஒரு புதிய ஆய்வொன்றின் மூலம் தெரிய வந்துள்ளது.

80 வயதுக்கு மேற்பட்ட 90 வயதுக்கு உட்பட்ட நபர்கள் மிதமான பயிற்சி செய்தால் கூட அவர்களது கேட்கும் திறன் மற்றும் முடிவு எடுக்கும் திறன் மேம்படுகிறது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனை அமெரிக்காவின் விக்கிடா கொம்யூனிகேஷன்ஸ் மற்றும் குறைபாட்டு துறைப் பேராசிரியர் ரேங்கல் தெரிவித்துள்ளார். எனவே அன்றாடம் ஏதேனும் ஒரு பணிகளில் ஈடுபடுத்திக் கொண்டு செயற்படுவது நமது செயற்பாடுகளை ஊக்குவிக்க உதவுவதைக் காணலாம். ஒரே இடத்தில அமர்ந்து இருப்பதால் உடல் பருமன் பிரச்சினை ஏற்படுவதுடன் சிந்தனை வேகமும் தீவிரம் இல்லாத மந்த நிலையை ஏற்படுத்தும். எந்த வயதிலும் சிறிய நடைப்பயிற்சி, உடற்பயிற்சி மேற்கொள்வது நல்லது என ஆய்வு வலியுறுத்துகிறது.



## அழகான பசு

தெற்கு மொன்றியலில் உள்ள கயாசின்தி பண்ணையில் உள்ள கியூபெக் கொல்ஸ்டீன் எனும் பசு உலகிலேயே அழகான பசுவாகக் காணப்படுகிறது. 2008 - 2009 இற்கான உலகப் பாலுற்பத்தி தொடர்பான கண்காட்சியில் சம்பியன் பட்டத்தைப் பெற்ற இப்பசு 37 இற்கும் மேற்பட்ட போட்டிகளில பதக்கம் வென்றுள்ளது. குதிரையின் வாலைப் போன்ற அழகிய அடர்த்தியான வாலை கொண்ட இப்பசு பால் உற்பத்தியிலும் முன்னனி வகிக்கிறது. இதன் மடியும் சாதாரண பசுக்களை போலல்லாது புதிய டிசைனில் காணப்படுகிறது. அத்துடன் இன்னும் பல போட்டிகளில் பங்குபற்றி பதக்கங்களை தனதாக்கத் தயாராகவுள்ளது.

## மன அழுத்தத்தைக் குறைக்க இணையத்தளங்கள்

நீங்கள் தொடர்ந்து கணினி முன் எந்த பொழுதுபோக்கு நடவடிக்கைகளுமின்றி நீண்டநேரம் பணி புரிவதால் உங்கள் மனம் சலிப்படைந்து தொடர்ந்து செயலாற்ற முடியாமல் இருக்கும் இந்த சலிப்பு தன்மையானது மன அழுத்தத்தினை நாளடைவில் ஏற்படுத்தி விடலாம். உங்கள் பணியினை சிறப்பாகத் தொடர்ந்து செயலாற்றவும் மன ஒருநிலையினையும் அமைதியினையும் ஏற்படுத்தவும் இணையம் வழி நிவாரணம் தருகிறது இந்தத் தளங்கள்.

1. www.donothingfor2minutes.com இந்த தளத்தில் சென்று 2 நிமிடங்கள் உங்கள் மவுஸ் விசைப்பலகை போன்றவற்றை இயக்காது அமைதியாக இருந்து சூரிய அஸ்தமனத்தின் போது கடற்கரையில் கேட்கும் அலைகளின் ஓசையை கேட்டு கொண்டே இருங்கள் உங்களுக்கான நேரம் 2 நிமிடங்கள் நிறைவு பெற்றதும் பணியினை தொடருங்கள் .
www.donothingfor2minutes.com

2. www.Rainymood.com இந்த தளத்தை ஓப்பன் செய்து மென்மையான மலைசாரல் ஓசை இடிமுழக்க ஓசைகள் வெள்ள சத்தம் பறவைகளின் கீச்சிடும் ஓசைகள் என்பவற்றை 15 நிமிடங்கள் தருகிறது இந்த தளம். அந்த ஓசைகளைக் கேட்ட பின் தொடருங்கள் உங்கள் பணியினை. நாள் முழுவதும் வேலைப் பளுவில் இருக்கும் நீங்கள் உங்களுக்காக 15 நிமிடங்கள் ஒதுக்குங்கள்
www.Rainymood.com

கணினி மூலை

## கைரேகையை ஆராயும் தொழில் நுட்பம்

கைரேகையை ஆராய்வதற்காக புதிதாக ஆய்வு தொழில்நுட்பம் ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. குற்றப் புலனாய்வில் முக்கிய பங்கு வகிப்பது குற்றவாளியின் கைரேகையாகும். புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ள தொழில்நுட்பம் கைரேகையை வைத்து குற்றவாளி குற்றத்தில் ஈடுபடுவதற்கு முன் போதைமருந்து உட்கொண்டிருந்தாலும், வெடி பொருட்களை கையாண்டிருந்தாலும் அதனை காட்டிக்கொடுத்து



வடுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அவுஸ்ரேலியாவை சேர்ந்த பீல்ட் ஹால்ம் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் இதனைக் கண்டுபிடித்துள்ளனர். இந்தப் புதிய கைரேகை ஆய்வு குற்றவாளியின் பழக்கவழக்கங்கள் மற்றும் செயற்பாடுகளை துல்லியமாகக் காட்டிக்கொடுத்து விடுவதாக அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். இன்னும் மூன்றாண்டுகளுக்குள் அறிமுகப்படுத்தப்படவுள்ள இந்தக் கண்டுபிடிப்பு குற்றப்புலனாய்வில் பெரிய மாற்றங்களைக் கொண்டு வரும் என்று தெரிவிக்கப்படுகிறது. இதுவரையிலும் தடயப்பொருள்களில் காணப்படும் ரேகையிலுள்ள கோடுகளை குற்றவாளிகளின் ரேகையுடன் ஒப்பிட்டுப் பார்த்தே விசாரணைகள் இடம்பெற்றுவந்தன. இந்த நிலையில் புதிய தொழில்நுட்பத்தின் உதவியுடன் விரலில் ஒட்டிக்கொள்ளும் பொருட்களின் நுண்ணிய துகள்களை கொண்டு அடிப்படை ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அதுமட்டுமன்றி உடலில் சுரக்கும் திரவங்கள் தொடும் பொருள் மீது ஒட்டிக்கொள்வதாக கூறப்படுகிறது. எனவே ஒருவரது விரல் ரேகையிலிருந்து அவர் என்னென்ன பொருட்களை தொடடிருந்தார் என்பது முதல் அவரது உடல் வெளியிட்ட திரவங்கள் வரை அனைத்தையும் புதிய ஆய்வின் மூலம் தெரிந்துகொள்ள முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இசையால் வசமாகிய

கெனெக்ரிகட்டைச் சேர்ந்த ஒரு சோடி வழமைக் குமாறாகத் தமது திருமணத்தை நீரினடியில் நடத்தத் தீர்மானித்தது.

இதில் எல்லோரது கவனமும் திருமணச் சோடி மீதல்லாது இசைக்குழுவினர் இசையமைக்க அதற்கிசைவாக நடனமாடிய ஒரு திமிங்கலத்தின் மீதே சென்றது.

இந்த திமிங்கிலம் ஜூனோ என கூறப்படுகிறது. இது 1,200 இறாத்தல் நிறைகொண்டது.

இசைக்குழுவினர்களது இசை களை அதனால் நன்றாகக் கேட்கமுடிந்தது என அக் குழுவினர் தெரிவித்தனர்



## இந்தியச் செய்திகள்

# தமிழக மீனவர் செல்லமுடியாத கச்சதீவில் சீன நாட்டவரின் கூடாரங்கள் உள்ளனவாம்

(ராமேஸ்வரம்)

தமிழக மீனவர்கள் பாரம்பரியமாக பயன்படுத்தி வந்த கச்சதீவை, பா.ஜ.வால் மட்டுமே மீட்க முடியும். அங்கு நடைபெறும் திருவிழாவிற்குத் தமிழர்கள் செல்ல முடியவில்லை. ஆனால், சீன நாட்டவர்கள் அனுமதிக்கப்பட்டு, கச்சதீவில் கூடாரங்கள் அமைத்துள்ளனர். நாம் இதை அனுமதிக்க முடியாது. இழந்த உரிமையைப் பெறுவதற்கு போராடுகிறோம். என பா.ஜ.வின் அகில இந்திய செயலர் முரளீதர் ராவ் தெரிவித்தார்.

தமிழக மீனவர்கள் மீது தொடர் தாக்குதலை நடத்தி வரும் இலங்கை அரசையும், தமிழக மீனவர்களையும் பாதுகாக்கத் தவறிய மத்திய அரசைக் கண்டித்து, நேற்றுமுன்தினம் ராமேஸ்வரம் துறைமுக கடற்கரையில் பா.ஜ. சார்பில் நடந்த கடல் முற்றுகைப் போராட்டத்தில் பா.ஜ., அகில இந்திய செயலர் முரளீதர் ராவ் பேசியதாவது,

தமிழக மீனவர்களைத் தாக்கி படுகொலை செய்து வரும் இலங்கை அரசுக்கு எதிராகப் போராடும் பா.ஜ. தொண்டர்களுடன் தர்மம் நிற்பதால், பா.ஜ.,வின் போராட்டம் வெற்றி பெறும். எமது முன்னோர்களின் சொத்தான கச்சதீவை, மத்திய அரசு இலங்கைக்கு கொடுத்துள்ளது.

இங்கு மீனவர்கள் செல்ல முடியவில்லை படகுகளை நிறுத்தவோ, வலைகளை உலர வைக்கவோ முடியவில்லை. தமிழகத்தை ஆட்சி செய்து வரும் இரண்டு கட்சிகளும் இலங்கைத் தமிழர்கள் மீது அக்கறை காட்டவில்லை என அவர் மேலும் தெரிவித்தார்.


# ஒரு லட்சம் மக்கள் ஒன்றுகூடி தேசியகீதம் பாடி கின்னஸ் சாதனை

(புதுடில்லி)

இந்திய தேசிய கீதத்தை இயற்றிய கவிஞர் ரவீந்திர நாத் தாகூரின் சொந்த மாநிலமான ஆந்திராவில் நினைவு தினம் நேற்றுமுன்தினம் கடைப் பிடிக்கப்பட்டது. இதையொட்டி திருப்பதியில் 1 லட்சம் பேர் பங்கேற்று தேசிய கீதத்தைப் பாடும் நிகழ்ச்சியைத் திருப்பதி சிட்டி சேம்பர் அமைப்பு ஏற்பாடு செய்து இருந்தது.

திருப்பதி மகதி, ஆடிட்டோரியத்தில் நடந்த நிகழ்ச்சியில் பள்ளி மாணவ - மாணவிகள் ஆசிரியர்கள் 1 லட்சம் பேர் கலந்து கொண்டனர். அனைவரும் கையில் தேசியக் கொடி ஏந்தி இருந்தனர். 1 இலட்சம் பேரும் ஒன்றாக இணைந்து தேசிய கீதத்தை 20 முறை பாடினார்கள்.

நிகழ்ச்சியில் ஆந்திர கனிம வளத்துறை அமைச்சர் கல்லா அருணாகுமார், சித்தூர் நாடாளு மன்ற உறுப்பினர் சிவப்பிரகாசம் உள்ளிட்டோரும் கலந்து கொண்டு தேசிய கதத்தைப் பாடினர். இது ஒரு கின்னஸ் சாதனை என பதிவு செய்யப்பட்டது.



குமரி மாவட்ட எல்லையான கூடன்குளத்தில் ரஷ்ய நாட்டு உதவியுடன் 13 ஆயிரத்து 500 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தலா ஆயிரம் மெகாவாட் மின் உற்பத்தி திறன் கொண்ட இரண்டு அனு உலைகள் அமைக்கப்பட்டுள்ளதைக் காணலாம்.

# இந்தியாவின் அடுத்த பிரதமர் ராகுல் கருத்துக்கணிப்பில் தெரிவிப்பு

(புதுடில்லி)

இந்தியாவின் அடுத்த பிரதமர் ராகுல் காந்தி எனக் கருத்துக் கணிப்பு ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

இந்திய அரசியலில் புகழ் பெற்றவர்கள் என்ற தலைப்பில் சி.என்.என். - ஐ.பி.என். மற்றும் சி.என்.பி.சி. தொலைக் காட்சி நிறுவனங்கள் ஒருங்கிணைந்து கருத்துக் கணிப்பு நடத்தப்பட்டது.

19 மாநிலங்களில் சுமார் 39 ஆயிரம் பேரிடம் பல்வேறு கேள்விகள் கேட்கப்பட்டு தகவல்கள் திரட்டப்பட்டன. அந்தக் கருத்துக்கணிப்பு முடிவுகள் தற்போது வெளியிடப்பட்டுள்ளன. அடுத்த பிரதமராக யார் வர வேண்டும் என்ற கேள்விக்கு 19 சதவீதம் பேர் ராகுல் காந்தியைத் தேர்வு செய்துள்ளனர். கடந்த 2009 ஆம் ஆண்டு வெறும் 6 சதவீத ஆதர வையே பெற்றிருந்த ராகுல் காந்தி தற்போது பிரதமர் பதவித் தேர்வில் முதல் இடத்துக்கு வந்துள்ளார்.

அவருக்கு அடுத்தப்படியாக மன்மோகன் சிங், சோனியா காந்தி இருவருக்கும் தலா 10 சதவீதம் பேர் ஆதரவு தெரிவித்துள்ளனர். இவர்கள் இருவரது செல்வாக்கும் மக்களிடம் மிகவும் வீழ்ச்சி அடைந்துள்ளது.

1999 ஆம் ஆண்டு முதல் 2008 வரை சோனியா காந்தி தான் பிரதமர் பதவிக்கு வரவேண்டும் என்ற எண்ணம் மக்கள் மனதில் இருந்தது. தற்போது சோனியாவுக்கு அந்த அளவுக்கு மக்களிடம் ஆதரவு இல்லை என்பது கருத்துக் கணிப்பில் தெரியவந்துள்ளது.

# பொதுநலவாய போட்டி ஊழல் விவகாரம் எதிர்க்கட்சிகள் இரு அவைகளில் அமளி

(புதுடில்லி)

பொதுநலவாயப் போட்டி ஊழல் குறித்த சி.ஏ.ஜி. அறிக்கை எதிரொலியாக, புதுடில்லி முதல்வர் ஷீலா தீட்சித் பதவி விலக வேண்டும் எனக் கோரியும் கேள்வி நேரத்தை ஒத்திவைத்து இதுகுறித்து விவாதிக்க வேண்டும் என்று கோரியும் இரு அவைகளிலும் எதிர்க்கட்சிகள் பெரும் அமளியில் இறங்கியதால் இரு அவைகளும் ஒத்திவைக்கப்பட்டன.

நாடாளுமன்றம் முற்பகல் கூடியபோது இரு அவைகளிலும் எதிர்க்கட்சிகள் பொதுநலவாயப்போட்டி ஊழல் தொடர்பாக சி.ஏ.ஜி. அறிக்கையை வைத்து பிரச்சினை எழுப்பின. லோக்சபாவில் காலை அவை கூடியதும் பா.ஜ.க. உள்ளிட்ட எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சபாநாயகர் மீராகுமார் இருக்கை முன்பு திரண்டனர்.

சி.ஏ.ஜி. அறிக்கை தொடர்பாக விவாதிக்க அவையின் கேள்வி நேரத்தை ஒத்திவைக்க வேண்டும். புதுடில்லி முதல்வர் ஷீலா தீட்சித் ராஜினாமா செய்ய வேண்டும். இந்த விவாகரம் குறித்து விளையாட்டுத்துறை அமைச்சர் அஜய் மேக்கான் பொறுப்பேற்று பதவி விலக வேண்டும் என்று கோரி கோஷமிட ஆரம்பித்தனர். இதனால் அவையில் பெரும் அமளி ஏற்பட்டது. உறுப்பினர்களை அமருமாறு சபாநாயகர் பலமுறை வலியுறுத்தியும் அவர்கள் அமர மறுத்தனர். இதையடுத்து அவையை ஒத்திவைக்க சபாநாயகர் உத்தரவிட்டார். இதேபோல ராஜ்யசபாவிலும் பா.ஜ.க. உள்ளிட்ட கட்சிகளின் உறுப்பினர்கள் அமளியில் குதித்ததால் ராஜ்யசபாவும் ஒத்தி வைக்கப்பட்டது.

# குடும்பத்தினர் மீது அவதூறு பரப்பும் பத்திரிகைகள் மீது சட்ட நடவடிக்கை

## மு.க.அழகிரி தெரிவிப்பு



(சென்னை)

என் குடும்பத்தினர் மீது அவதூறு பரப்பும் பொய்ச் செய்திகளை வெளியிடும் வாரப்பத்திரிகைகள் மீது சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கவுள்ளேன் என தென மண்டல தி.மு.க. அமைப்புச் செயலாளர் மு.க.அழகிரி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் நேற்றுமுனதினம் வெளியிட்ட அறிக்கையில் தமிழகத்திலிருந்து வெளி வரும் சில வாரப்பத்திரிகைகள் எனது நற்பெயரையும் புகழையும் கெடுக்கும் விதத்தில் பொயச் செய்திகளை வெளியிட்டு வீண் வதந்திகளைப் பரப்பி வருகின்றன.

குறிப்பாக எனது மனைவி மீதும் என் பிள் ளைகள் மீதும் அவதூறுகளை பரப்பும் வகை யில சமீப காலமாக அந்தப் பத்திரிகைகள் தொடர்ந்து பொய்ச் செய்திகளை வெளியிட்டு வருகின்றன. இந்த பொய்ச் செய்திகளை சில ஊடகங்களும் எடுத்து வெளியிடுகின்றன. என் குடும்பத்தினர் வாங்கியுள்ள எந்தச் சொத்துக்களும் சட்டத்திற்கு உட்பட்டு நியாயமாக வாங்கப்பட்டவை தான். அதற்கு முறைப்படி உரிய கணக்கும் காட்டப்பட்டுள்ளது.

ஆனால் இந்தப் பத்திரிகைகள் பொய்ச் செய்திகளை வெளியிடுவது உள்நோக்கத்தோடு என் புகழை சீர் குறைக்க நடத்தப்படும் திட்டமிட்ட சதியாகவே நான் கருதுகிறேன். இப்படி என் குடும்பத்தினர் மீது அவதூறு பரப்பும் பொய்ச் செய்திகளை வெளியிடும் வாரப்பத்திரிக்கைகள் மற்றும் ஊடகங்கள் மீது சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுக்கவுள்ளேன். ஆகவே இந்தப் பொய்ச் செய்திகளை பொது மக்கள் யாரும் நம்ப வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன் என்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தமிழர் பிரச்சினைகளை வலியுறுத்தி

# இந்திய நாடாளுமன்றத்தின் அருகே வெள்ளியன்று அறப்போர் ஆர்ப்பாட்டம்

(சென்னை)

தமிழர் பிரச்சினை தொடர்பாக புதுடில்லியில் இந்திய நாடாளுமன்றத்துக்கு அருகே எதிர்வரும் வெள் ளிக்கிழமை 12 ஆம் திகதி ம.தி.மு.க சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளதாக அக்கட்சி யின் பொதுச் செயலர் வைகோ தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில்,

இலங்கையில் தமிழர் தாயகப் பகுதிகளில் குவிக்கப்பட்டு உள்ள இராணுவத்தையும், பொலிஸையும் உடனடியாக அகற்றவும், சிங்களக் குடியேற்றங்களைத் தடுப்பதோடு, அக்கிரமமாகக் குடியேறியவர்களை வெளியேற்றவும், இந்திய அரசும், உலக நாடுகளும் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் வலியுறுத்தவுள்ளோம்.

பொது வாக்கெடுப்பை அனைதது உலகப் பார்வையாளர்கள் கண்காணிப்பில் நடத்துவதற்கும், அந்த வாக்கெடுப்பில் உலகின் பல நாடுகளில் உள்ள புலம் பெயர்ந்த ஈழத்தமிழர்கள் அந்தந்த நாடுகளிலேயே அந்த வாக்கெடுப்பில் பங்கேற்கவுமான நடவடிக்கைகளை ஐ.நா. மன்றம் முன்னெடுப்பதற்குமான கோரிக்கைகளை வலியுறுத்துகிறோம். இதறகு இந்தியாவில் கட்சி, மாநில எல்லைகளைக் கடந்த ஆதரவைத் திரட்டி நாடாளுமன்றத்துக்கு அருகில் உள்ள ஜந்தர் மந்தரில், அறப்போர் ஆர்ப்பாட்டத்தை ம.தி.மு.க நடத்த இருக்கின்றது.

ஈழத்தமிழ் உணர்வாளர்களும் இந்த அறப்போரில் பங்கு ஏற்குமாறு அன்புடன் வேண்டுவதாக வைகோ தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ..............................

முகவரி : ..............................

பிறந்த ஆண்டு : ..............................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

.............................. பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட் டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

# சிரிய மக்கள் பலியாவதைக் கண்டித்து தூதுவரை திரும்ப அழைத்தது சவுதி


உலகச் செய்திகள்

சிரியாவில் அரசுக்கெதிராக அப்பாவி மக்கள் தினம் தினம் கொல்லப்படுவதைக் கண்டித்து சவுதி அரேபியா தனது தூதுவரை சிரியாவிலிருந்து திரும்ப அழைத்துள்ளது.சிரியாவில் அதிபருக்கு எதிராக மக்கள் கிளர்ச்சி செய்து வருகின்றனர். நேற்று முன்தினம் நடந்த ஆர்ப்பாட்டத்தில் 50 பேர் கொல்லப்பட்டனர்.

இது குறித்து சவுதி மன்னர் அப்துல்லா கூறியதாவது, சிரியாவில் அதிபர் பஷீர்அல் ஆசாத் மக்கள் கிளர்ச்சியை மதிக்க வேண்டும். மாறாக அப்பாவிகளை கொல்லும் இயந்திரமாக அரசு இருக்கக் கூடாது. உடனடியாக இதனை நிறுத்த வேண்டும். அப்பாவி மக்கள் கொல்லப்படுவதை ஏற்றுக் கொள்ள முடியாது. சிரியாவின் டாமாஸ்கஸ் நகரில் உள்ள சவுதி தூதுவரை திரும்ப அழைத்துள்ளோம். என்றார்.

மன்னரின் அறிவிப்பை அடுத்து வளைகுடா ஒத்துழைப்பு கவுன்சில் நாடுகளும், சிரியாவின் பிடிவாதத்தைக் கண்டித்துள்ளன. முன்னதாக சிரியாவுக்கான அமெரிக்கத் தூதுவர் ரூபர்ட் போர்ட் கடந்த வியாழன் திரும்ப அழைக்கப் பட்டதும் குறிப்பிடத்தக்கது.

# புரட்சியாளர்களிடமிருந்த நகரை லிபிய இராணுவம் கைப்பற்றியது



(திரிபோலி)

புரட்சியாளரிடம் இருந்த நகரை லிபிய இராணுவம் கைப்பற்றியுள்ளதாக அறிவித்துள்ளது. லிபியாவில் புரட்சியாளர்களின் வசம் உள்ள சில நகரங்களை மீட்க கடாபியின் ஆதரவு இராணுவம் தீவிரமாகச் சண்டையிட்டு வருகிறது. இந்த நிலையில் புரட்சியாளர்கள் வசம் இருந்த பிர்ஹானம் என்ற நகரத்தை லிபிய இராணுவம் மீட்டது. நபூசா மலைப் பகுதியில் இருதரப்பினருக்கும் இடையே கடும் சண்டை இடம்பெற்றது அதில் வெற்றி பெற்ற இராணுவம் பிர்ஹானம் நகரை மீட்டதாக லிபிய பிரதமர் பக்தாதி மக்முதி தெரிவித்துள்ளார். தற்போது அங்கு மக்களின் சகஜ வாழ்க்கை தொடங்கி விட்டதாகவும் தெரிவித்துள்ளார்

# அமெரிக்கப் படையினரின் உயிரிழப்பு விரிவான விசாரணைக்கு உத்தரவு

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் நிகழ்ந்த ஹெலிகொப்டர் விபத்தில் 31 அமெரிக்க வீரர்கள் உட்பட 38 பேர் பலியானது குறித்து சர்வதேச பாதுகாப்பு துணை நிலைப்படை விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளது.ஆப்கனின் வார்டாக் மாகாணத்தின் ஸ்யேதாபாத் பகுதியில் நேட்டோ ஹெலிகொப்டர் ஒன்று தலிபான்களைத் தாக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தது.

அதில் 31 அமெரிக்க வீரர்கள், ஏழு ஆப்கன் வீரர்கள் இருந்தனர். அப்போது ஹெலிகொப்டர் திடீரென விபத்துக்குள்ளானதில் அதிலிருந்த அனைவரும் பலியாயினர்.ஆனால் தலிபான் செய்தித் தொடர்பாளர் ஜபியுல்லா முஜாகித் வெளியிட்ட அறிக்கையில் இத்தாக்குதல் தலிபான்களால் நடத்தப்பட்டதாகத் தெரிவித்திருந்தார்.இத்தாக்குதலில் பலியானவர்கள் ஒசாமாபின்லேடன் மீதான தாக்குதலில் பங்குபற்றிய அமெரிக்க விசேட படைப்பிரிவினர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

பலியான வீரர்களுக்கு நேற்று முன்தினம் தலைநகர் காபூலில் அஞ்சலி செலுத்திய ஐ.எஸ்.ஏ.எப் தளபதி ஜோன் அர் ஆலன் விபத்து நடந்தது பற்றி தீவிர விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளார்.பலியான அமெரிக்க வீரர்களுக்கு நேற்று முன்தினம் அமெரிக்காவில் அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதேவேளை, ஆப்கானிஸ்தானில் உள்ள 'தாகப்'பள்ளத்தாக்கில் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 2 பிரான்ஸ் வீரர்கள் நேற்று முன்தினம் மரணமடைந்தனர். ஐந்து வீரர்கள் காயமடைந்தனர்.

இந்த மரணத்தைத் தொடர்ந்து 2001ஆம் ஆண்டு முதல் இதுவரை ஆப்கானிஸ்தானில் இறந்த பிரான்ஸ் வீரர்களின் எண்ணிக்கை 72ஆக அதிகரித்தது. காபூலுக்கு வடக்கே உள்ள காபிசா மாகாணத்தில் உள்ள 'தாகப்' பள்ளத்தாக்கில் பிரான்ஸ் வீரர்கள் இறந்த தகவலை பிரான்ஸ் ஜனாதிபதி அலுவலகம் தெரிவித்தது.

ஆப்கானிஸ்தானில் பிரான்ஸ் வீரர்கள் மரணம் குறித்து பிரான்ஸ் ஜனாதிபதி நிகோலஸ் சர்கோசி அறிக்கை வெளியிட்டார். வீரர்கள் உயிரிழப்பு மிகுந்த வேதனை அளிப்பதாக உள்ளது என அவர் தெரிவித்துள்ளார். ஆப்கானிஸ் தானில் 4 ஆயிரம் பிரான்ஸ் வீரர்கள் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# உலகப்புகழ் பெற்ற பேயர் நிறுவனம் ஜேர்மனியில் இருந்து வெளியேற முடிவு

உலகப்புகழ் பெற்ற மருந்துப் பொருட்கள் தயாரிப்பு நிறுவனமான பேயர் ஜேர்மனியில் இருந்து வெளியேறப் போவதாக எச்சரித்துள்ளது.

ஜேர்மனியில் உள்ள அணுமின் நிலையங்களை மூட அரசு முடிவு செய்துள்ளதால் பேயர் நிறுவனம் இந்த முடிவை எடுத்துள்ளது. மிகக் குறைந்த விலையில் மின்சார எரிசக்திகளைப் பெறுவதற்காக பேயர் நிறுவனம் ஜேர்மனியில் இருந்து வெளியேற முடிவு செய்துள்ளது.

கடந்த மார்ச் 11ஆம் திகதி ஜப்பான் புகுஷிமாவில் ஏற்பட்ட சுனாமியால் முதன்மை அணுமின் நிலையம் பாதிக்கப்பட்டது. இந்த அணுமின் நிலையத்தில் கதிர்வீச்சு பரவியதைத் தொடர்ந்து மக்களுக்கு உயிர் அபாயம் ஏற்பட்டது.

அதே போன்ற நிலை ஏற்படாமல் தவிர்க்க தற்போது உள்ள அணுமின் நிலையங்களை ஜேர்மனி மூட முடிவு செய்துள்ளது. எனவே அணு அல்லாத இதர வகை மின்சார உற்பத்திக்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.புதிய வகை மின் உற்பத்தி அதிக செலவினம் மிக்கதாக இருக்கும். எனவே பேயர் போன்ற நிறுவனங்கள் எரிசக்தி செலவினத்தைக் கட்டுப்படுத்த ஜேர்மனியில் இருந்து வெளியேற முடிவு செய்துள்ளன.மருந்து பொருட்கள் தயாரிப்புக்கு அதிக எரிசக்திச் செலவினம் செய்து மருந்துகள் விலையை ஏற்ற முடியாது. எனவே எரிசக்தி விலை குறைவாக உள்ள நாடுகளுக்கு இடம் மாற்ற வேண்டிய நிலையில் உள்ளோம் என பேயர் நிறுவனத்தின் தலைவர் மார்ஜின் டெக்சர்ஸ் கூறினார்.

பேயர் நிறுவனம் முதல் ஆஸ்பிரின் மருந்தை 1897ஆம் ஆண்டு உருவாக்கியது. ஜேர்மனியில் இந்நிறுவனத்திற்கு 35 ஆயிரம் ஊழியர்கள் உள்ளனர். உலகம் முழுவதும் தமது நிறுவனத்தின் 4500 பணி இடங்களை குறைக்க உள்ளதாக டெக்சர் கூறினார்.இதில் ஜேர்மனியில் 1700 ஊழியர்கள் குறைக்கப்படுகிறார்கள். பிரேசில், இந்தியா, ரஷ்யா மற்றும் சீனாவில் 2500 புதிய வேலைகளை இந் நிறுவனம் ஏற்படுத்துகிறது.

# பதிவிறக்கப் பெட்டகம்

நான் என்னுடைய பால்ய பருவத்தில் மழை பெய்து ஆற்றில் நிறையத் தண்ணீர் ஓடினால் சந்தோஷப்படுவேன். இன்று மழை பெய்த பிற்பாடு ஆற்றில் நிறையத் தண்ணீர் ஓடுவதை பார்க்கும் போது எனக்கு வலிக்கிறது. ஏனென்றால் மழை பெய்தால் உடனே ஆற்றில் தண்ணீர் ஓடக் கூடாது. மழை பெய்த தண்ணீர் காட்டில் தேங்கியிருக்க வேண்டும். அந்தத் தேங்கிய தண்ணீர் கொஞ்சம் கொஞ்சமாக வடிந்து ஆற்றிற்கு வரும். அன்றைக்கே ஓடுகிற தென்றால் மழைநீரைத் தேக்கி வைக்கக் கூடிய காடுகள் அழிந்துவிட்டன என்று தெரிய வருகிறது. மழை பெய்த நாலாவது நாளே கடலில் போய் கலக்கிறது. இல்லையென்றால் அழுக்கடைந்து வீணாகிறது. ஆற்றிற்கும் வழிகாலுக்கும் வித்தியாசம் இருக்கிறது. மழை பெய்தால் மட்டுமே தண்ணீர் ஓடினால் அது வழிகால். மழை பெய்யாக்காலத்திலும் தண்ணீர் ஓட வேண்டும், அப்போது தான் அது ஆறு. மழை பெய்யாத காலத்திலும் ஆற்றில் எப்போது தண்ணீர் ஓடுமென்றால் மழை நீரைத்தேக்கி வைக்கக் கூடிய புல்வெளிகள் இருக்கும் போதுதான். புல்வெளிகள் தரிசு நிலம் அல்ல பல காலம் தண்ணீரைத் தேக்கி வைத்து ஜீவநதிகளை உற்பத்தி செய்யக்கூடிய மூலநிலங்கள் அவை.

– கானுயிர் ஆர்வலர் காளிதாஸ்

முதலாம் உலகப் போருக்குச் சற்று முன்பாக, ஷேபர், பாஷ் என்ற இரு ஜெர்மானியர்கள், வெடிமருந்துகளின் முக்கிய மூலப்பொருளான அமோனியாவை (நைதரசன் வாயுவைப் பொருத்தி) உற்பத்திசெய்யும் முறையைக் கண்டுபிடித்தனர். இது இல்லையென்றால், ஜெர்மனியிடம் போரை நீட்டிப்பதற்கான ஆயுதங்கள் தீர்ந்துபோயிருக்குமாம். இந்தத் தொழில்நுட்பம் விரைவிலேயே மற்ற நாடுகளைச் சென்றடைந்து, உலகெங்கும் அமோனியா உற்பத்தி பரவலாகின. நாம் சுவாசிக்கும் காற்றிலிருக்கும் நைதரசனைக் கொண்டே அமோனியாவைத் தயாரிப்பதற்கான ஆராய்ச்சியை 1930களில் மேற்கொண்டு வெற்றியும் கண்டது அமெரிக்க அரசு. இந்த முறையில் அமோனியாவைத் தயாரிக்க அதிகமான அளவில் மின்சாரம் தேவைப் பட்டதால் பெரிய அணைகளுக்கருகே அமோனியா உற்பத்தி ஆலைகள் கட்டப் பட்டன. இரண்டாம் உலகப் போர் முடியும் சமயத்தில், பல கோடி தொன் அளவில் உலகெங்கிலும் அமோனியா உற்பத்தியாகிக் கொண்டிருந்தது. போர் ஓய்ந்ததும் ஆலைகளும் ஓய்ந்துநின்றன. இத்தனை முதலீடும் வீணாகாமல் இருக்க என்ன செய்யலாம் என்று அவசர அவசரமாக யோசித்த சிலருக்கு, வேளாண் அறிவியல் முன்வைத்திருந்த NPK கோட்பாடு நினைவுக்குவந்தது. அமோனியாவைக் கொண்டு பயிர்களுக்குத் தேவையான உரத்தைத் தயாரித்து, உலகெங்கும் விவசாயிகளை அவர்கள் நிலங்களில் கொண்டு கொட்டச் சொல்லலாமே என்றெண்ணினர். இன்றுவரையில் 'உப்பு' என்று கிராமங்களில் வழங்கிவரும், கணக்கேயில்லாத தொன் கணக்கில் மண்ணில் நாம் கொட்டிவைத்துள்ள யூரியாவின் கதை இதுதான்.

– சங்கீதா ஸ்ரீராம்

ஒருவன் விடாமல் கண்விழித்து ஆராய்ச்சி செய்கிறான். கடைசியாக என்ன கண்டுபிடித்திருக்கிறான் என்றால் கிட்டப்பார்வைக்கு மூக்கு கண்ணாடி. "ஏன் ஐயா இவ்வளவு கண்விழித்து கண்களைக் கெடுத்துக் கொண்டு உடலையும் வருத்தித் துன்பப்படுகிறீர்' என்று கேட்டால் "கண்ணாடி கண்டுபிடிப்பதற்கு' என்று பதிலளிக்கிறான். அதே போல பூமியை உப்பைப் போட்டு எவ்வளவு தூரம் கெடுக்க முடியுமோ அவ்வளவையும் கெடுத்து வைத்து விட்டு மாட்டு கலப்பையினால் இனி உழவே முடியாது என்கின்ற நிலை வரும் போது டிராக்டரைக் கொண்டு வந்து இறக்குகிறார்கள்... மண்ணின் இயற்கைத் தன்மையைக் கெடுத்து விட்டு டிராக்டரைக் கண்டுபிடித்தீர்கள். டிராக்டர் ஓடுவதற்கு எண்ணெய் வேண்டுமே அதற்காகப் பூமியில் சுரங்கம் தோண்டி வேறு ஒரு பகுதியைக் கெடுத்தீர்கள். இதற்கு தேவையான இரும்புச் சாமான்களைச் செய்வதற்காக காட்டினை அழித்தீர்கள்.

– மசானோபு ஃபுகோகா

சோலைக்காடுகள் உயர்ந்து வளராவிட்டாலும் அடர்ந்து வளரும். சூரிய ஒளி உள்ளே புகாது. அந்தச் சூரிய ஒளி உள்ளே புகாத இருட்டுப் பகுதியில் இலை தழைகள் கீழே விழுந்து, பறவை, விலங்குகளின் கழிவுகள் கலந்து நுண்ணுயிர்களால் மாற்றம் செய்யப்பட்டு அந்த மண் உருவாகிறது. ஒரு அரை இஞ்ச அந்த மேல்மண் படிவுகள் உருவாகுவதற்கு ஆயிரம் ஆண்டுகள் ஆகுமென்று மண்ணியல் ஆய்வாளர்கள் கணிக்கிறார்கள். சோலைக் காடுகளில் அடுக்கடுக்காக அந்த மண் படிவுகள் இருக்கின்றன. அத்தனை அடுக்குகளும் அந்தக் காட்டின் பழமையைக் குறிக்கின்றன. இது உணர்த்துகின்ற இன்னொரு உண்மை, இந்தக் காட்டை நம்மால் உருவாக்க முடியாது என்பது. காடு வளர்ப்புப் பணிகள் என்று பலவற்றை நாம் செய்யலாம். காடு என்பது வெறும் மரங்கள் அல்ல. சமூகக் காடுகள் என்று நம்மால் சில தோப்புகளை உருவாக்க முடியும். ஆனால் சோலைக்காடு என்று சொல்லப் படுவது அங்குள்ள நுண்ணுயிர், பறவைகள், விலங்கினங்கள், தாவரங்கள், மற்றும் பல வளமைகள் எல்லாவற்றையும் உள்ளடக்கியது. இதை உங்களால் உருவாக்க முடியாது.

– கானுயிர் ஆர்வலர் காளிதாஸ்

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அடுத்தகட்ட நடவடிக்கை என்ன?

வடமாகாணத்தில் உள்ளூராட்சி சபைகள் பலவற்றைக் கைப்பற்றியுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அடுத்த கட்ட நடவடிக்கை என்னவாக இருக்கப்போகிறது என்பதே பலரதும் எதிர்பார்ப்பாக உள்ளது. இறுதி யுத்தத்தில் ஏற்பட்ட அவலங்களை



அனுதாபமாக்கிப் பிரசாரம் செய்து தமிழ் மக்களது மனங்களை வெற்றி கொண்டதன் விளைவாக தமிழ்க்கூட்டமைப்பினரால் உள்ளூராட்சிச் சபைகளைக் கைப்பற்ற முடிந்தது. தற்போது தமிழ்க் கூட்டமைப்பு தான் கைப்பற்றியுள்ள சபைகளில் மக்களுக்காகப் பணியாற்ற நடவடிக்கையெடுக்க வேண்டும். அதற்கு அரசாங்கத்தின் ஆதரவு நிச்சயம் தேவைப்படும். அரசுடன் கூட்டமைப்பு நல்லுறவைக் கொண்டிருப்பது அவசியமாகிறது. இவ்விடயத்தில் தமிழ்க் கூட்டமைப்பின் நிலைப்பாடு என்னவாக இருக்கப்போகிறது என்பது மக்கள் முன் கேள்விக்குறியாகவே உள்ளது.

இத்தேர்தலில் தமிழ்க் கூட்டமைப்புக்கு மக்கள் வழங்கியுள்ள வாக்குகள் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களின் இறுதிநேர அனுதாப உரைகளுக்கும், பொய்யான வாக்குறுதிகளுக்கும், இனவாதத்தைத் தூண்டும் கருத்துக்களுக்கும் கிடைத்த வாக்குகளே என்பதை அனைவரும் ஏற்றுக் கொள்வர்.

இறுதிநேர தேர்தல் பிரசாரத்தின் போது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் மக்களைக் கவர்ந்திழுப்பதற்காக இனவாதக் கருத்துக்களைத் தூண்டி விட்டமையை சகலரும் அறிவர். வட பகுதியின் அபிவிருத்தியில் அதிக அக்கறை கொண்டு அமைச்சர்கள் குழு நேரடியாக வந்து மக்களுக்குச் சேவைகளை வழங்கியபோது இனவாதத்தைத் தூண்டும் வகையில் தமிழ்க் கூட்டமைப்பு உறுப்பினர்கள் பிரசாரம் செய்து வந்தனர்.

உண்மையில் ஜனாதிபதி உட்பட அமைச்சர்கள் குழு வடபகுதிக்கு வந்தமையினால் வடக்கில் நடந்த பாரிய அபிவிருத்தித் திட்டங்கள் குறித்தும், அதனால் மக்கள் அடைந்துவரும் நன்மை கள் பற்றியும் தமிழ்க்கூட்டமைப்பினருக்குத் தெரியாதா அல்லது தமது அரசியலுக்காக தெரிந்தும் தெரியாதது போல நடிக்கிறார்களா?

முப்பது வருடங்களாக போராட்டம், யுத்தம் என்று புலிகளினதும், தமிழ்க் கூட்டமைப்பினதும் வீரமான ஆசை வார்த்தைகளுக்கு மயங்கிக் கட்டுண்டு இருந்த வடக்கு மக்கள் தற்போது தான் அதிலிருந்து விடுபட்டு வருகிறார்கள். தமிழ்த் தலைவர்கள் எனத் தம்மைக் கூறிக்கொள்ளும் சிலர் இன்னமும் மக்களைத் தமது மாய வலைக்குள் தமது பேச்சாற்றலால் மயங்க வைத்துள்ளனர். எனினும் இப்போது தான் மக்கள் அவற்றிலிருந்து மெல்ல மெல்ல விலகி வெளியே வர ஆரம்பித்துள்ளனர்.

நடைபெற்று முடிந்த தேர்தல் முடிவுகள் இதற்குச் சான்று பகர்கின்றன. முன்னைய தேர்தல்களுடன் ஒப்பிடுகையில் ஆளுங்கட்சிக்கு இத்தேர்தலில் கிடைத்துள்ள ஆசனங்கள், சபைகள், விருப்புவாக்குகள் எல்லாமே அதிகரித்துக் காணப்படுகின்றன. மக்களைச் சுயமாகச் சிந்தித்து வாக்களிக்க தமிழ்க் கூட்டமைப்பினர் விட்டிருந்தால் ஆளுங்கட்சிக்கு மேலும் பல சபைகள், ஆசனங்கள் இலகுவாகக் கிடைத்திருக்கும்.

சில தமிழ் இணையத்தளங்கள் அரசாங்கத்திற்கு தமிழ் மக்கள் நல்ல பாடம் புகட்டியுள்ளனர் என்றும் தமது ஒற்றுமையை உலகறியச் செய்துள்ளனர் என்றும் தெரிவித்துள்ளன.

உண்மையில் இந்தத் தமிழ் ஊடகங்களோ அல்லது தமிழ் இணையத் தளங்களோ தெரிவித்துள்ள இக்கருத்துக்களில் எவ்விதமான உண்மையும் கிடையாது. தமிழ் மக்கள் தமக்கு ஓர் அரசியற தீர்வு வேண்டும் எனும் விடயத்தில் உறுதியாகவே இருந்து வருகின்றபோது அத்தீர்வு புலிகளின் இராணுவ ரீதியிலான பலத்தால் தமக்குக் கிடைக்குமென தமிழரின் ஒரு சிறுதரப்பு நம்பியிருந்தது. ஆனால் உலக நாடுகள் பலவற்றாலும் இராணுவப் பலம் கொண்ட அமைப்பு எனப புகழப்பட்ட புலிகள் இயக்கம், இலங்கை இராணுவத்தினால் அழிக்கப்பட்டதும் வேறு வழியில்லாத நிலையில் அச்சிறு குழுவினர் புலிகளுடன் ஒன்றிணைந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடன் அரசியல் தஞ்சம் அடைந்துள்ளனர். தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் மூலமாகத்தான் தமக்குத் தீர்வு பெற்றுத்தரப்படும் என்பது இவர்களது நப்பாசையாக உள்ளது. இதனைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நன்கு பயன்படுத்தி தேர்தலில் வெற்றியும் கண்டுள்ளது.

> **அரசாங்கத்தை எதிர்த்து அரசியல் நடத்துவது போன்று பாசாங்கு செய்தால் தமிழ் மக்கள் மனங்களில் இலகுவாக இடம்பிடிக்கலாம் என்பதுவே அந்தக் கொள்கையாகும். இதில் போட்டி யென்று வந்தால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கே முதலிடம் கிடைக்கும்.**

உண்மையில் அரசாங்கத்துடன் தமிழர் தீர்வு தொடர்பாக தமிழ்க் கூட்டமைப்பு எந்தவொரு ஆக்கபூர்வமான தீர்வினையும் முன்வைக்காத நிலையிலேயே கண்துடைப்பாக அதில் கலந்துகொண்டு வருகிறது. உண்மையாகவே தீர்வு குறித்த அக்கறை இவர்களுக்கு இருந்திருந்தால் இது தான் எமது தீர்விற்கான நகல் என்று கூறியிருக்கலாம். ஆனால் இவர்கள் அவ்வாறு செய்யவில்லை. அப்படியானதொரு தீர்வை முன்வைத்திருந்து பேச்சுவார்த்தையைத் தொடர்ந்தால் அரசாங்கம் அதற்குரிய பதிலைத் தந்திருக்கும். மாறாகத் தமிழ் மக்களை தமது பக்கம் தொடர்ந்தும் வைத்திருப்பதே தமிழ் கூட்டமைப்பின் நோக்கமாகும். அதற்கு அவர்கள் தீர்வுப் பிரச்சினையை ஒரு துரும்பாகப் பாவித்தனர்.

அரசியற தீர்வு ஒன்று எட்டப்பட்டால் தமிழ்க் கூட்டமைப்பினருக்கு வேலையில்லாது போய்விடும். அதன் பின்னர் மக்கள் இவர்களைப் பொருட்டாகக் கொள்ளமாட்டார்கள். அதிலும் தேர்தல் காலங்களில் தமிழ்க் கூட்டமைப்பு தீர்வு விடயத்தை வைத்தே மக்களைத் தம்பக்கம் திசைதிருப்புவது வழமையாகிவிட்டது. தமிழ் மக்களும் தொடர்ந்தும் தாம் ஏமாற்றப்படடு வருகிறோம் எனத் தெரந்திருந்தும் மாற்றுவழியின்றி மீண்டும் மீண்டும் ஒரே குழியில் விழுந்து எழும்புகின்றனர்.

இப்போது தமிழ்க் கட்சிகள் பலவும் ஒரு கொள்கையைக் கடைப்பிடிக்கத் தொடங்கியுள்ளன. அதாவது அரசாங்கத்தை எதிர்த்து அரசியல் நடத்துவது போன்று பாசாங்கு செய்தால் தமிழ் மக்கள் மனங்களில் இலகுவாக இடம்பிடிக்கலாம் என்பதுவே அந்தக் கொள்கையாகும். இதில் போட்டியென்று வந்தால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கே முதலிடம் கிடைக்கும். ஆனால் இவர்களது அரச விரோத எதிர்ப்பு அறிக்கைகளை ஏற்றுக்கொள்ள தமிழ் மக்கள் தயாராக இல்லை என்பது மட்டும் உணமை.

வடக்கில் வெளியான தேர்தல் முடிவுகளின் பிரகாரம் தமிழ் மக்கள் அபிவிருத்தி ஒருபுறமிருக்கத் தமக்கு ஒரு அரசியல் தீர்வின் அவசியததையும் உணர்த்தியுள்ளார்கள். அந்தத் தீர்வினை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மூலமாக அல்லது தமது சார்பில் அவர்களையும் இணைத்து அரசாங்கம் வெளிப்படுத்த வேண்டுமென்பதே தேர்தல் முடிவுகளில் மறைந்து காணப்படும் விடயமாக உளளது. தேர்தல் முடிவுகள் தொடர்பாக வட மாகாண மக்களிடையே கலந்துரையாடிய போது அவர்களில் பெரும் பாலானோர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் பெருமளவு நம்பிக்கை கொண்டவர்களாக இல்லை எனினும் தமக்கு வேறு மார்க்கமோ அல்லது மாற்றீடோ இல்லை என்பதால் கூட்டமைப்பினரையே தொடர்ந்தும் நம்ப வேண்டி உள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

அரசாங்கமும் தமிழ்க்கூட்டமைப்பும் அரசியல் தீர்வு காணும் விடயத்திலும் ஒன்றுபட்டுச் செயற்பட வேண்டும். அதுவே தமிழ் மக்களது விருப்பாகும். தமிழ் மக்கள் இதற்காகவே தமிழ்க் கூட்டமைப்பிற்குத் தமது வாக்குகளை வழங்கியுள்ளனர். இந்த வெற்றி தமிழ்க் கூட்டமைப்பிற்குக் கிடைத்த வெற்றியல்ல. மக்களால் கூட்டமைப்பிற்குக் கிடைத்த வெற்றியே. மொத்தத்தில் இது தமிழ் மக்களுக்குக் கிடைத்த வெற்றியே.

\- பூந்தளிர்

## அமெரிக்காவை மிரள வைக்கும் சமூக வலைத்தளம்

மண்ணைத் தின்று வாயில் உலகைக் காட்டிய கண்ணனின் கதையாக, இன்று ஒவ்வொரு கணினியும் தனது திரைக்குள் இந்தப் பூவுலகைக் காட்டிக் கொண்டிருக்கிறது. வலைத்தளம் என்ற இன்டர்நெட் புரட்சி இதைச் சாத்திய மாக்கியுள்ளது. வலைத்தளத்தின் அடுத்தகட்ட வளர்ச்சியாக முன்னுக்கு வந்திருப்பது தான் சமூக வலைத்தளப் பக்கங்கள். முகநூல் எனப்படும் பேஸ்புக், டுவிட்டர், யூ டியூப் என பல சமூக வலைத் தளங்கள் தற்போது உலகளாவிய அளவில் கருத்துப் பரிமாற்றம் செய்துகொளவதற்கும், அதை உடனடியாக தங்கள் நண்பர்களுக்கு பரப்புவதற்கும் வாய்ப்பைத் தந்துள்ளன.

தொலைக்காட்சிகள் அதிகார மையமாக மேலிருந்து தங்கள் கருத்தை மக்களிடம் திணிக்க முடியுமென்றால், இந்த சமூக வலைத்தளங்களில் மக்கள் தங்கள் சொந்த அனுபவம் சார்ந்த கருததுக்களை பகிர்ந்து விவாதித்து அதை ஒருமைப்படுத்த முடியும், ஒருவரோடு ஒருவர் மட்டுமே தொடர்பு கொள்வது என்ற வரம்பைத் தாண்டி, சமூகமாகத் தொடர்பு கொள்ளலாம் என்ற பரவலை ஏற்படுத்தியுள்ளது. அதுவும் மின்னல் வேகத்தில் செயலாற்ற முடியும் வாய்ப்பை ஏற்படுத்தித் தந்துள்ளன. இதுவே இந்த சமூக வலைத்தளங்களின் சிறப்பம்சம்.

எகிப்துப் பேரெழுச்சி ஏற்பட்டதற்கு அடித்தளமாகச் செயற்பட்டது இந்த சமூக வலைத்தளம் தான். மக்கள் கூட்டம் கூட்டவோ, ஊர்வலம் செல்லவோ, கருத்துப் பிரசாரம் செய்யவோ முடியாதபடி சர்வாதிகார ஆட்சியாளர்கள் தடை ஏற்படுத்தி எககாளமிட்டுக் கொண்டிருந்தனர். ஆனால், சத்தமே இல்லாமல் சமூக வலைப்பக்கங்களில் ஒவ்வொருவராக, பின் எல்லோருமாக ஆட்சியாளர்களின் அடக்குமுறை, ஒடுக்கு முறைக்கு எதிராக தங்கள் குமுறலைக் கொட்டினர். குமுறல்கள் ஒருமுகப்பட்ட போராட்டக் குரல்களாக மாறின. சொல்லி வைத்தாற் போல் (ஆம், சமூக வலைப் பக்கங்களில் சொலலி வைத்து) ஒரேநாளில் இலட்சக்கணக்கானோர் நகரங்கள் தோறும் வீதிகளில் அணிதிரண்டனர். இந்த பேரெழுச்சியின் முன்னால் ஆடசியாளர்கள் சிறு துரும்பாகிப் போனார்கள். இதுதான் சமூக வலைத்தளம் எனன சாதிக்க முடியும் என்பதன் மெய் நிகழ்வு.

அடுத்தடுத்து மத்திய கிழக்கு, அரபு நாடுகளில் ஏற்பட்ட அதிர்வுகளை இந்த சமூக வலைத்தளங்கள் தான் உருவாக்கின. அதுவும் இந்த எழுச்சி ஏற்பட்டுள்ள நாடுகள் பலவும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் அடிவருடிகளாக, அவர்களது பாதந்தாங்கிகளாகப் பல்லாண்டு காலம் பணிவிடை செய்து வந்தவர்கள்தான். எனவே அந்த ஆட்சியாளர்களுக்கு நேரடியாக விழுந்த அடி என்பது அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு மறைமுகமாக விழுந்த பேரிடியாகும்.

குறிப்பாக பல நாடுகளில் நிறுத்தப்பட்டுள்ள அமெரிக்க ஆயுதப் படைகளுக்கு எதிராக இத்தகைய சமூக வலைத்தளங்கள் தீவிரமாக செயற்படுகின்றன. எனவே அமெரிக்காவின் ராணுவத் தலைமையகம் பெண்டகன், இந்த சமூக வலைத்தளங்களை எப்படிக் கட்டுப்படுத்துவது என்பதற்கு ஆய்வை முடுக்கிவிட்டுள்ளது. பெண்டகனின் ஒரு துணைப் பிரிவான, அதிநவீன பாதுகாப்பு ஆய்வுத் திட்ட ஏஜென்சி (DARPA) மூலம் இதற்காக சுமார் ரூ.200 கோடி ஒதுக்கியுள்ளது. இந்த ஆய்வின் நோக்கம், சமூக வலைத்தளங்களில் கருத்துப் பரவலை எப்படிக் கண்டறிந்து முறியடிப்பது என்பதாகும்.

அமெரிக்காவைப் பொறுத்தவரை உடனடி நடைமுறை என்ற அடிப்படையிலும், தொலைநோக்கு யுத்த தந்திரம் என்ற அடிப்படையிலும் இத்தகைய சமூக வலைத்தளத்தைக் கண்காணிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதாக பென்டகன் அதிகாரி கூறியுள்ளார். மோசமான விளைவுகள் ஏற்படுவதற்கு முன்பாக நாஙகள தற்காப்பு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது என்றும் பென்டகன் வட்டாரம் கருத்துத் தெரிவித்துள்ளது. போர்க்களங்களில் கூட மிகக் கடுமையான விளைவுகளை இந்த சமூக வலைத் தளங்களால் ஏற்படுத்த முடியும் என்று மதிப்பிட்டுள்ள பென்டகன், முந்தைய தகவல் புரட்சிகளால் ஏற்பட்ட விளைவுகளைப் போலவே இந்த சமூக வலைப் பக்கமும் மிகப்பெரும் விளைவு ஏற்படுத்துகிறது என்றும் குறிப்பிட்டுள்ளது.

எனவே இந்த சமூக வலைபபக்கங்களை எப்படி ஒடுக்குவது என்பது குறித்து நடைமுறைச்சோதனை அடிப்படையில் ஆய்வு செய்யவும், அதற்காக விருப்பமுள்ள ஒப்பந்தக்காரர்கள் இந்த ஆய்வை மேற்கொள்ள முன்வரும்படியும் பென்டகன் கேட்டுக்கொண்டுள்ளது. இந்த ஆய்வு எந்த அளவுக்கு சமூக எழுச்சியைக் கட்டுப்படுத்த முடியும் என்பது சந்தேகத்திற்குரியதே.

ஆனால் எந்த தகவல் தொழில்நுட்பப் புரட்சி மூலம் உலகமயமாக்கல் என்ற மேலாதிக்க சிந்தனையை ஏகாதிபத்தியம் பரப்பியதோ, அதே தகவல் தொழில்நுட்பப் புரட்சி அந்த மேலாதிக்கத்தைத் தகர்க்கவுமான மக்கள் கருவியாக மாறி வருகிறது என்பதே இப்போதும் உறுதியாகியுள்ளது. அதை அவ்வளவு எளிதில் ஏகாதிபத்திய சக்திகளால் கட்டுப்படுத்தி ஒடுக்கிவிட முடியாது என்பதை வருங் காலம் நிரூபிக்கும்.

# தடை விதிக்கப்பட்ட மீன்பிடிமுறைகள்

# சுண்டிக்குளம் கடற்பரப்பில் தாராளம்

## பாரம்பரிய மீனவக் குடும்பங்கள் பாதிப்பு



(யாழ்ப்பாணம்)

வடமராட்சிக் கிழக்குக் கடற்பரப்பில் கடல் அட்டை பிடித்தல் மற்றும் சங்கு குளிக்கும் தொழில் நடவடிக்கையில் ஈடுபட்டுவரும் தென்னிலங்கை மீனவர்களின் தொழில் நடவடிக்கைகளினால் வடமராட்சி கிழக்குப் பகுதி மீனவரகளின் மீன்பிடி நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்டக் கடற்தொழில் சம்மேளனப பிரதிநிதிகளினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நேற்று முற்பகல் அதன் தலைவர் எஸ்.தவரட்ணம் தலைமையில் யாழ் மாவட்ட கடற்தொழில் சம்மேளனத்தில் நடைபெற்ற தேசிய ஒத்துழைப்பு அமைப்பின் பிரதிநிதிகளுககும் யாழ். மாவட்ட கடற்தொழில் சம்மேளனப் பிரதிநிதிகளுக்கிடையேயான சந்திப்பிலேயே இவ்விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தினமும் சுமார் 200 முதல் 250 வரையான தென்னிலங்கைக் கடற்தொழிலாளரது மீன்பிடிப் படகுகள் வடமராட்சி கிழக்கு மணறகாட்டில் இருந்து சுண்டிக்குளம் வரையுமான கடற்பகுதியில் கரையில் இந்து 100 முதல் 200 மீற்றர் தூரத்தில் இருந்து கடல் அட்டை பிடித்தல், சங்கு குளித்தல் ஆகிய தொழில் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். அத்துடன் 15 முதல் 25 வரையான குதிரை வலு வெளியிணைப்பு இயந்திரங்களையும் பாவித்துவருகின்றனர். இதனால் குறித்த பகுதியில் மீன்வளம் அங்கிருந்து வேறு பகுதிகளுக்கு இடம்பெயர்ந்து செல்வதாலும் கடல்வளம் அழிக்கப்படுவதாலும் கரைவலைத் தொழிலை நம்பி வாழும் பெருமளவு வடமராட்சி கிழக்கு மீனவர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.


அத்துடன் கடற்தொழில் அமைப்பினால் யாழ். மாவட்டத்தில் தடை செய்யப்பட்டிருக்கும் ரோலர், முக்கூட்டுவலை, தங்கூசிவலைகளைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் மீன்படி முறைகள் தொடர்ந்தும் சில' பகுதி மீனவர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இது குறித்து கடற்தொழில் நீரியல்வள அமைச்சு கண்டும் காணாமலும் இருப்பது தொடர்பிலும் தீவிரமாகப் பரிசீலிக்கப்பட்டது.

அத்துடன் இந்திய மீனவர்களின் இவ்வாறான தொழில் நடவடிக்கைகள் குறைந்திருக்கும் நேரத்தில், எமது பகுதி மீனவர்கள் இவ்வாறான தொழில் நடவடிக்கையில் ஈடுபட முடியாத்தன் மர்மம என்ன எனவும் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது. இதனை அரசாங்கத்தினால் கட்டுப்படுத்த முடியாதா எனவும் கேள்வியெழுப்பப்பட்டுள்ளது.

மேலும் இச் சந்திப்பின் இறுதியில் மேற்குறித்த இருவிடயங்கள தொடர்பாக, வடமராட்சி கிழக்கு மீனவரது பிரச்சினை மற்றும் தடை செய்யப்பட்ட மீன்பிடி முறைகள் பயன்படுத்தப்பட்டு மீன்பிடித் தொழில் நடவடிக்கை மேற்கொள்ளப்படுதல் தொடர்பாக மகஜர் ஒன்றை வடமாகாண கடற தொழிலாளர் கூட்டமைப்புச் சார்பில் தொழில் அமைச்சர் ராஜித சேனாரத்தின அவர்களுக்கு விரைவில் அனுப்பிவைப்பதாகவும் தீர்மானம் எடுக்கப்பட்டது.

யாழ். மாவட்ட கடற்தொழில் சம்மேளனத் தலைவர் எஸ்.தவரட்ணம் தலைமையில் நடைபெற்ற இச் சந்திப்பில் தேசிய மீனவர் ஒத்துழைப்பு அமைப்பின் தலைவர் கேமன் குமார, செயலாளர் அ.ஜெகதாசன், தேசிய மீனவ ஒத்துழைப்பு அமைப்பின் கிளிநொச்சி மாவட்ட இணைப்பாளர் பிரபாகரன், யாழ் மாவட்ட இணைபபாளர் இன்பம் மற்றும் யாழ். மாவட்ட கடற்தொழில் சம்மேளனப் பிரதிநிதிகள் முதலானோர் கலந்துகொண்டனர். (பா)

# பாம்புக்குட்டிகள் 40 மீட்பு



திவுலப்பிட்டிய பிரதேசத்தில் வீட்டுத்தோட்டம் ஒன்றில் இருந்து 40 நாகப்பாம்புக் குட்டிகள் மீட்கப்பட்டுள்ளன.

மரகதமுல்ல பகுதியில் உள்ள வீட்டுத்தோட்டம் ஒன்றிலேயே இந்தப் பாம்புக் குட்டிகள் மீட்கப்பட்டுள்ளன.

தோட்டத்தின் புற்று ஒன்றில் இருந்து வெளிவந்த இந்தப் பாம்புக் குட்டிகளைப் பிரதேசவாசிகள் பிடித்துள்ளனர்.

இவ்வாறு ஒரே தடவையில் அதிகளவில் பாம்புக் குட்டிகள் பிறந்தாலும் சூழலின் தாக்கங்கங்களினால் அவற்றில் ஒரு சில மாத்திரமே உயிர் வாழ்வதாகச் சுற்றாடல் துறைசார் நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

### மின்சார...

வைத்தியசாலையின் மின் பிறப்பாக்கிகளின் மூலமாகவும் பூர்த்தி செய்யப்பட்டு வருகின்றது. எனினும் வைத்தியசாலைக்கான மின் விநியோகம் சீரமைக்கப்படாத நிலை தொடர்வதாகவும் சுட்டிக் காட்டப்படுகின்றது.

மேலும் வைத்தியசாலையினால் கொள்வனவு செய்யப்பட்ட பாரிய மின் பிறப்பாக்கியும் வைத்தியசாலைக்கு அண்மையில எடுத்து வரப்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. (பா)

### அகதிகள்...

விசாரிக்கப்பட்டு ஏற்கப்பட்ட 4000 அகதிகளை இந்தத் திட்டத்தின் கீழ் ஆஸ்திரேலியா ஏற்றுக்கொள்ளும்.

ஆனால், ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான ஒப்பந்தத்தில் கைச்சாத்திடாத மலேசியாவில், அகதிகள் பெருமளவில் மோசமாக நடத்தப்படுவதாக விமர்சகர்கள் கூறுகிறார்கள்.

இந்த வழக்கை விசாரிப்பதற்கு பல முக்கியமான விடயங்கள் இருப்பதாகக் கூறியுள்ள உயர் நீதிமன்ற நீதிபதி கென்னத் ஹைறன், அதுவரை அகதிகள் மலேசியாவுக்கு அனுப்பப்படுவதற்கு இடைக் காலத்தடை விதித்துள்ளார்.

இந்த உத்தரவை ஆஸ்திரேலியாவின் அகதிகளுக்கான செயலணிக் கூட்டமைப்பு வரவேற்றுள்ளது.

## மின் வெட்டு

உயரழுத்த மின்விநியோக மார்க்கங்களில் அவசர திருத்த வேலைகள் செய்யும் பொருட்டு இன்று பிற்பகல் 1.00 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை உரும்பிராய், கோண்டாவில், மருத்துவபீட பிரதேசம், திருநெல்வேலிப் பிரதேசம், ஸ்ரான்லி வீதி, பட்டணப் பகுதி, நீங்கலாக யாழ் மாநகரசபைப் பகுதி ஆகிய இடங்களில் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

### வெளிநாட்டு...

கழக விரிவுரையாளருமான ச.அறிவழகன் மற்றும் யாழ். பல்கலைக்கழக சமூகவியல் பட்டதாரியும், மலேசிய University of Science கலாநிதிப் பட்டதாரி மாணவருமான சு.ஜீவசுதன் ஆகியோரும் கலந்துகொண்டு கருத்துரைகளை வழங்கினர்.

### லண்டனில்...

பொலிசார் மூவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

கடந்த சனிக்கிழமை இரவு, முதலில் மிகமோசமாக வன்முறை வெடித்த டோட்டன்ஹாம் பகுதியில் அதிகாரிகள் கூடுதல் கவனம் செலுத்தி வருகின்றனர்.

இந்தப்பகுதி வழமைக்குத் திரும்ப இன்னும் சில காலம் எடுக்கும் என அங்குள்ள பிரதேசவாசிகளில் ஒருவர் பி.பி.சி. இற்குத் தெரிவித்தார்.

கடந்தவாரத்தில், வடக்கு லண்டன், டோட்டன்ஹாம் பகுதியில் கறுப்பின இளைஞர் ஒருவர் பொலிசாரால் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்துடன், இங்கு பிரச்சினை ஆரம்பித்தது.

அந்த சம்பவம் குறித்து சுயாதீனமான பொலிஸ் முறைப்பாட்டு ஆணையம் ஒன்று விசாரணை நடத்திவருகின்றது.

# யாழ்.நகரில் வீதி விபத்து; வயோதிபப் பெண் காயம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மடத்தடிப்பகுதியில் மோட்டார் சைக்கிளும், சைக்கிளும் விபத்திற்குள்ளானதில் வயோதிபப் பெண் ஒருவர் தலையில் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்றுக்காலை 7.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது. இச்சம்பவத்தில் கொழும்புத்துறைப் பகுதியைச் சேர்நத அருளஜோதி (வயது - 54) என்பவரே படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (எஸ்)

# இளைஞர் படுகாயம்

(எழுவைதீவு)

எழுவைதீவுப் பகுதியில் வீட்டில் மரத்தளபாட வேலைசெய்த நபர் ஒருவர் வாள் வெட்டுக்கு இலக்காகி முகத்தில் படுகாயமடைந்த நிலையில் யாழ் போதனா வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று மதியம் 12 மணியளவில் இடம்பெற்றுள்ளது. இச் சம்பவத்தில் படுகாயமடைந்த அல்பிரட் (வயது - 36) என்பவரே படுகாயங்களுக்கு உள்ளாக்கப்பட்டு யாழ்.போதனா வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (எஸ்)



மட்டக்களப்பு சின்னக் கதிர்காமம் என அழைக்கப்படும் தாந்தாமலை முருகன் ஆலயத்தின் 14 ஆம் நாள் திருவிழா நேற்று முன் தினம் 07.08.2011 அன்று இடம்பெற்ற போது...

# வெளிவாரி பட்டப்படிப்பு தரம் உயர்த்த ஏற்பாடு

(கொழும்பு)


அடுத்த வருடத்திலிருந்து பல்கலைக்கழகங்களில் வெளிவாரிப் பாடநெறிகளின் தரம் தொடர்பாக அதிகளவுக்கு கவனம் செலுத்தப் படவுள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் காமினி சமரநாயக்க கூறியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக சகல பல்கலைக்கழகங்களுக்கும் ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்துள்ளார். இந்த நிபந்தனைகளுக்கு அமைவாகவே எதிர்காலத்தில் நாட்டிலுள்ள பல்கலைக்கழகங்களில் வெளிவாரிப் பாடநெறிகள் இடம்பெறுமென அவர் மேலும் கூறியுள்ளார்.

பல்கலைக்கழகங்களினால் வழங்கப்படும் வெளிவாரிப் பட்டங்களின் தரத்தை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டே புதிய முறைமை அறிமுகப்படுத்தப்படுவதாக அவர் கூறுகிறார். இதன் மூலம் பல்கலைக்கழக உள்வாரி மாணவர்கள் பெற்றுக் கொள்ளும் பட்டங்களின் தகைமைக்கு சமனான விதத்தில் வெளிவாரிப் பட்டங்களும் அமையும் என்று அவர் தெரிவித்திருக்கிறார்.

செய்திப்பாணம்

**எடுத்த சத்தியை எக்காளமாய் விழுங்குகின்ற**
**கடுப்புச் சிலரிடம் காணப்படும் - படுத்துமாம்**
**மீசையில் மண்ணொட்ட மாட்டாவென மாய்ந்திடும்**
**ஆசையை அவரிடம் அறி!**



# போதனா வைத்தியசாலையில் புதிய சி.ரி. ஸ்கானர் இயந்திரம்

(யாழ்ப்பாணம்)


யாழ். போதனா வைத்திய சாலை கதிரியக்கப் பிரிவில் நவீன சி.ரி.ஸ்கானர் (C.T.SCANNER) ஒன்று நேற்றைய தினம் முதல் தொழிற்பட ஆரம் பித்துள்ளதாக யாழ். போதனா வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இப்பிரிவில் ஏற்கனவே அத்தகைய இயந்திரம் ஒன்று மட்டுமே சேவையில் ஈடுபட்டிருந்தது. இதனுடன் சேர்த்து புதிய இயந்திரமும் தொழிற்பட ஆரம்பித்துள்ளது.

அண்மையில் வெளிநாடு ஒன் றிடம் இருந்து நன்கொடையாகக் கிடைத்த இவ் இயந்திரமே குறித்த பிரிவில் பொருத்தப்பட்டு செயற்பட ஆரம் பித்துள்ளது. இதனால் நோயாளர் பெரிதும் பய னடைவர் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் இவ்வாறான இயந்திரங் கள் இல்லாததின் காரணமாக யாழ். போதனா வைத்தியசாலைக்கு சிகிச்சை பெறவருகின்ற நோயாளர்கள் கொழும்பு வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டே பரிசோதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தனர்.

தற்சமயம் நோயாளரின் அத்தகைய மேலதிக



சிரமம் தவிர்க்கப்பட்டுள்ளதாகவும் தெரியவரு கின்றது.

அத்துடன் இவ் இயந்திரத்தின் மூலம் நோயா ளரின் தலைப்பகுதி மற்றும் உடலின் முக்கிய பாகங்களில் மறைந்திருக்கும் கட்டிகள், குண்டுச்சித றல்கள் முதலியவற்றை இலகுவில் கண்டுகொள்ள முடிவதாகவும் மருத்துவ வட்டாரங்கள் தெரிவித் துள்ளன. (பா)



**முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவை விடுவிக்கக் கோரி, ஜனநாயகவாத மக்கள் அமைப்பும், சிவில் அமைப்புக்களும் இணைந்து கருமைப் போராட்டமொன்றை வெலிக்கடையில் நேற்று நடத்தியுள் ளனர். ஜனநாயகத்திற்கான மக்கள் இயக்கத்தின் தலை மையில் வெலிக்கடை சிறைச்சாலைக்கு முன்பாக நேற்று பிற்பகல் 3 மணியளவில் பாரிய எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்று மேற்கொள்ளப்பட்டது.**

## விபத்தில் சிக்கியது முச்சக்கர வண்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். இராசாவின்தோட்டம் சந்தியில் மோட்டார் சைக்கிளும் ஆட்டோவும் எதிரே மோதியதில் ஆட்டோ கவிழ்ந்து விபத்துக்குள் ளான சம்பவம் ஒன்று இடம்பெற் றுள்ளது.




இச்சம்பவம் நேற்று மதியம் 1.30 மணியளவில் இடம்பெற்றது. மேற்படி வீதிப் பகுதியால் வந்து கொண்டிருந்த மோட்டார் சைக் கிள் எதிரே வந்த ஆட்டோவுடன் நேருக்குநேர் மோதி விபத்துக் குள்ளாகியதுடன் ஆட்டோவும் பலத்த சேதமடைந்துள்ளது.(எஸ்)

# புது மெருகுடன் சோலைவரி பகுதி

நீண்ட காலமாக எந்தவித நவீன புனரமைப்புமின்றி இயங் கிய யாழ். மாநகர சபையின் சோலைவரி பகுதி தற்போது நவீன முறையில் புனரமைப்பு செய்யப்பட்டுள்ளதாக யாழ். மாநகர மேயர் யோகேஸ்வரி பற்குணராஜா தெரிவித்தார்.

நவீன முறையில் புனரமைப் புச் செய்யப்பட்ட சோலைவரிப் பகுதி பொதுமக்கள் பயன்பெறும் விதத்தில் ஒழுங்கமைக்கப்பட்டுள் ளதாகவும் மக்களின் தேவை களை நிறைவேற்றுவதற்காக துரித சேவைக்காக கணினி மயப் படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இந்த நவீன புனரமைப்பின் மூலம் யாழ். வரியிறுப்பாளர்க ளுக்கு மேலும் சிறந்த சேவையை மேற்கொள்ள முடியும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# விசுவமடுவில் விபத்து சாரதி தப்பியோட்டம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி - விசுவமடுப் பகு தியில் ஹயஸ் வானும் சைக்கி ளும் நேருக்கு நேர் மோதியதில் விபத்து ஒன்று இடம்பெற்றது டன், சாரதி தப்பியோடிய சம்ப வம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை 4.00 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் கிளிநொச்சி கண்ணகிநகர் பகுதியைச் சேர்ந்த எஸ்.ரமேஸ்குமார் (வயது - 22) என்பவரே படுகாயமடைந்த நிலை யில் தர்மபுரம் வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலை அவசர சிகிச் சைப் பிரிவில் அனுமதிக்கப்பட் டுள்ளார். (எஸ்)

# வவுனியாவில் மீண்டும் ஜிகாத்

(வவுனியா)

இக்கடிதம் கிடைத்து 24 மணி நேரத்திற்குள் வவுனியா நகர சபையின் உபதலைவர் எம். முகுந்தரதன் தமது பதவியிலிரு ந்து விலகவேண்டும். இல்லா விடின் கொலையே உமக்கு முடி வாகும் என ஜிகாத் அமைப்பு கடிதம் மூலம் எச்சரிக்கை விடுத் துள்ளது.

எமது காணிக்குள் நாம் கட்ட டம் அமைக்கத் தடையாக இருக் கிறாய். கடிதம் கிடைத்து 24 மணி நேரத்திற்குள் உபதலைவர் பதவியிலிருந்து விலகவேண்டும்.

உமது பொருத்தமான ஆசிரி யர் தொழிலுக்கு உடன் போகும் படியும் கேட்டுக்கொண்டுள்ளது டன், அரசியல் தொழிலில் தொடர்ந்து இருக்க எமது அமை ப்பு விட்டு வைக்கப்போவதில்லை எனவும் அந்தக் கடிதத்தில் எச்சரிக்கை தொனியில் தெரி விக்கப்பட்டுள்ளது.

ஜிகாத் போராளி குழு மீண் டும் இயங்க ஆரம்பித்துள்ளதை அண்மையில் புத்தளத்தில் நடந்த சம்பவத்துடன் அறிந்து கொள்ள வேண்டும் எனவும் அதில் குறிப் பிடப்பட்டுள்ளது. இது தொடர் பாக உபதலைவர் வவுனியா பொலிஸில் முறைப்பாடு செய் துள்ளார்.

பிந்தாமல் உடன் முடிவை எடுக்கவும் என்ற தலைப்பில் கடிதம் எழுதப்பட்டுள்ளது.

இதே அமைப்பு நகரசபைத் தலைவருக்கு கடந்த சனிக் கிழமை கொலை அச்சுறுத்தல் கடிதம் ஒன்றினை அனுப்பிவைத் திருந்தது. அது தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (39)

# புலி ஆதரவு பேஸ்புக் கணக்குகள் முடக்கம்

(யாழ்ப்பாணம்)


புலிகளின் கருத்துக்களை பிரச்சாரம் செய்யும் வகையில் இயங்கி வந்த மூன்று பேஸ் புக் கணக்குகள் முடக்கப்பட்டுள்ளன. குறித்த மூன்று கணக்குகளிலும் புலிகளுக்கு ஆதரவான கருத் துக்கள் பிரச்சாரம் செய்யப்பட்டு வந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

பயங்கரவாத அமைப்புக்கு ஆதரவான கருத்துக்கள் வெளி யிடப்பட்ட காரணத்தினால் பேஸ் நிறுவனமே இந்தக் கணக்குகளை முடக்கியுள்ளது. இந்த பேஸ் புக் கணக்குகளில் சுமார் மூன்று இலட்சம் அங்கத்தினர்கள் அங் கம் வகித்ததாகக் குறிப்பிடப் படுகிறது.

புலிகளுக்கு சார்பாக செயற் பட்டு வரும் இணைய தளங்க ளின் முகவரிகள் தொடர்பாகவும் இந்த பேஸ் புக் கணக்குகளி பிரச்சாரம் செய்யப்பட்டு வந்தன.

இலங்கையின் சில அமைப் புக்களினால் விடுக்கப்பட்ட கோரிக்கையை கருத்திற் கொண்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஈழ இராச் சியமொன்றை உருவாக்கும் நோக்கில் குறித்த பேஸ் புக் கணக்குகள் இயங்கி வருவதா கத் தெரிவிக்கப்படுகிறது.

# இராஜதந்திரி ஜயசிங்க காலமானார்



(கொழும்பு)

வெளிவிவகார சேவையின் சிரேஷ்ட இராஜதந்திரியான ரொமேஷ் ஜயசிங்க 10.01.2009 ஆம் திகதி முதல் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் வெளி விவகார செயலராக நியமிக்கப் பட்டிருந் தார். 28.03.2011 ஆம் திகதி ஜனாதிபதியின் ஆலோசக ராக நியமிக்கப்படும் வரை வெளிவிவகாரச் செயலாளராக அவர் பதவி வகித்தார்.

1981 ஆம்ஆண்டு இலங்கை வெளிவிவகார சேவையில் இணைந்த ரொமேஷ் ஜயசிங்க புதுடில்லியில் இலங்கை உயர் ஸ்தானிகராகப் பதவி வகித்தது டன், பெல்ஜியம், லக்ஸம்பர்க் மற்றும் ஐரோப்பிய யூனியன் ஆகியவற்றுக்கான தூதுவரா கவும் கடமையாற்றியுள்ளார்.

56 வயதான ரொமேஷ் ஜய சிங்க, ஜேர்மனி, சுவிட்ஸர்லாந்து, பங்களாதேஷ் ஆகிய நாடுகளி லுள்ள இலங்கைத் தூதரகங்களி லும் பல்வேறு பதவிகளை வகித் திருந்தார். இவர் காலஞ்சென்ற மற்றொரு முன்னாள் வெளிவிவ கார செயலாளர் டபிள்யூ.ரி. ஜயசிங்கவின் புதல்வர் என்பது குறிப்பிடத்தக்கது.

# அஜந்த மென்டிஸ் புதிய உலக சாதனை ருவென்ரி - 20 தொடர் இலங்கை வசம்

(கொழும்பு)


அவுஸ்திரேலியாவுடனான இரண்டாவது ருவென்ரி 20 போட்டி யில் இலங்கை அணி 8 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது. பல்லேகல அரங்கில் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 20 ஓவர்களில் 9 விக்கெட் இழப்பிற்கு 157 ஓட்டங்களைப் பெற்றது.

மஹேல 86 ஓட்டங்களைக் குவித்தார். சங்கக்கார 24 ஓட்டங் களைப் பெற்றார். அவுஸ்திரேலிய பந்துவீச்சாளர்களில் ஜோன் ஹஸ்டிங்ஸ் 14 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி அஜந்த மெண்டிஸின் பந்துவீச்சில் திணறியது. அவ்வணி 20 ஓவர்களில் 9 விக்கெட் இழப்பிற்கு 149 ஓட்டங்களை பெற்று தோல்வியடைந்தது.

அஜந்த மெண்டிஸ் 16 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுகளை வீழ்த்தி னார். ருவென்ரி - 20 போட்டிகளில் இது புதிய சாதனையாகும். 2009 ஆம் ஆண்டு நியூஸிலாந்துக்கு எதிரான போட்டியில் பாகிஸ் தான் வீரர் உமர் குல் 6 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுகளை வீழ்த்திய மையே 20 ஓவர் போட்டிகளில் இதுவரை சாதனையாக இருந்தது.

2 போட்டிகள் கொண்ட இத்தொடரில் இலங்கை அணி 2-0 விகிதத்தில் வெற்றிபெற்று சம்பியனாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இப்போட்டியின் ஆட்ட நாயகனாக அஜந்த மெண்டிஸ் தெரிவு செய்யப்பட்டார்.




# யாழ். விவசாயக் கண்காட்சி அடுத்த மாதம் முதல் வாரத்தில்

வடமாகாண விவசாயத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் 'இயற்கையுடன் இணைந்த நிலை பேறான விவசாயத்தை நோக்கி எனும் தொனிப்பொருளிலான மாபெரும் விவசாயக் கண்காட்சி பாடசாலைகளின் 3 ஆம் தவணை ஆரம்பத்தைக் கருத்திற் கொண்டு அடுத்தமாதம் 5 ஆம் திகதிக்கு பிற்போடப்பட்டுள்ளதாக பிரதி விவசாயப் பணிப்பாளர் சி.சிவ குமார் அறிவித்துள்ளார்.

இந்நிகழ்வு எதிர்வரும் 18 ஆம் திகதி தொடக்கம் 5 நாட்க ளுக்கு நடைபெறும் என முன்னர் திட்டமிடப்பட்டிருந்தது. எனினும் பாடசாலை மாணவர்களின் வசதி யைக் கருத்திற்கொண்டு புரட் டாதி 5 ஆம் திகதி தொடக்கம் 9 ஆம் திகதி வரை காலை 8.30 மணி முதல் மாலை 7.00 மணி வரை கண்காட்சி இடம்பெறவுள் ளது.

இக்கண்காட்சியில் எதிர்காலத் தில் விவசாயத்துறை எதிர்நோக் கும் சவால்களுக்கு முகம் கொடுக்கக்கூடிய வகையில் பயிர்ச்செய்கை முறைகள், ஆராய்ச்சித் தகவல்கள், விலங்கு வேளாண்மை, விவசாய இயந் திரமயமாக்கல் சார்பான தொழில் நுட்பங்களை உள்ளடக்கியதாக இக்கண்காட்சி ஒழுங்குபடுத்தப் பட்டுள்ளதுடன், இக்கண்காட்சி யில் விவசாயத் திணைக்களத் துடன் இணைந்துள்ள பல நிறுவ னங்களும் பங்கேற்வுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 ஒகஸ்ட் 09 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.